Koviloor Digital Library

4-4 102

வள்ளற்பெருமான் கொள்கையின் பரிணாமம்

ஆசிரியர் : வடலூர். முத்து இராமலிங்கம்
(இராமலிங்கர் பணிமன்றம்)

கோவிலூர் ஆதீனம்
5151
R65(வள்)
கோவிலூர்-630307

வள்ளலார் அருள் பதிப்பகம்

21, திட்டித்தோட்டம் மூன்றாவது தெரு,
பெரம்பூர் — சென்னை-600 011.

வெளியீடு—2. விலை ரூ. 1-20

5 அக்டோபர் 1988

Koviloor Digital Library

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி ! தனிப்பெருங்கருணை ! அருட்பெருஞ்ஜோதி ! அருட்பெருஞ்ஜோதி !

வள்ளற் பெருமான் கொள்கையின் பரிணாமம்

வடலூர் முத்து இராமலிங்கம்

திருவருட் பிரகாச வள்ளற்பெருமான் தூலதேகம் இங்கு உலவியகாலம் ஐம்பது ஆண்டு மூன்று மாதம் இருபத்தாறு நாள் என்று அறிஞர் கணித்திருக்கின்றனர். அவற்றுள் நாற்பத்து மூன்று ஆண்டு கால வரையில் முன்னிருந்த ஆன்மிக ஞானிகள் கூறிய உண்மைக் கருத்துக்களை தன்னுடைய அனுபவத்தில் சொல்லியிருக்கிறார். அவ்வனுபவ உண்மைகளை மக்களுக்கு ஏற்ற முறையில் விளக்கிக் கூறியும் பாடியும் இருக்கிறார்.

பரிணாமம் என்பது உள்ளது சிறத்தல். இது மூன்று வகைப்படும். 1. உயிரினத் தோற்றம், 2. மனித இனத் தோற்றம், 3. மாமனித இனத் தோற்றம்.

திருவருட்பா அறுதிருமுறைகளிலும், உபதேசம் முதலியயற்றிலும் அவ்வனுபவ உண்மைகள் போதுமான பக்குவம் உள்ளவர்களுக்கு ஓரளவு தெளிவாக விளங்குகிறது. சன்மார்க்க கொள்கைகளை கடைப்பிடிக்காத பக்குவம் பெறாதவர்கள் முரண்பாடாக உள்ளன என்று பேசியும், எழுதியும் வருகின்றனர். சாதி, மத, சமயப்பற்றில் அழுத்தமுடையவர்கள் சன்மார்க்க கொள்கையின் மெய்ப்பொருளை உணர முயலாது தம்முடைய கொள்கைக்கு புறம்பானது என்று கருதி திருவருட்பாவை படிக்கவும் மறுத்து வருகின்றனர்.

தற்போது சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்த நாமும் சன்மார்க்க கொள்கையின் மெய்ப்பொருளைக்காண முயல வேண்டும் அக்கொள்கைகளை கடைப்பிடித்து மற்றவர்களுக்கு

Koviloor Digital Library

வழிகாட்டியாயிருக்க வேண்டும். நாமும் போதுமான சிந்தனையில்லாமல் பெருமான் கருத்தைவேறுவகையில்பொருள்செய்ய முயலுகிறோம். இதற்கு சொற்பொருளை சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி தெரிந்துகொள்ளாமல் அகராதி பொருளையோ வழக்கில் இப்போது உள்ள பொருளையோ தந்து மயங்குகிறோம். உதாரணமாக ஒத்த இடம், ஒரு மடந்தை முதலிய சொற்றொடர்களுக்குரிய சிறப்புப் பொருளைக்காண தவறுகிறோம்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்

இவ்வுலகிற்கும், இவ்வுலகில் தோன்றிய எல்லா உயிர்களுக்கும் கடவுள் ஒருவரே. அவரே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். இது பெருமான் தன் அனுபவத்தில் கண்ட உண்மையான உயர்ந்த நிலையாகும். இதனை மறுக்காமல் ஏற்றுக்கொண்டவர் வாழ்க்கையில் புதிய அனுபவத்தைக் காணலாம். ஆரம்பத்தில் பல தெய்வங்களை பாடியிருக்கிறார். ஆதலால் பெருமானும் சிறு தெய்வ வழிபாட்டினை விரும்புபவர் என்று எண்ணி ஏமாறக்கூடாது.

ஒரு வைணவ அன்பர் பில்லி சூனியத்தால் துன்புற்று அல்லல் பட்டார். அதனைப் போக்குவதற்கு அவ்வன்பர் விரும்புகிற இராமனைப் பற்றிய பாடலை இயற்றி வழங்கியிருக்கிறார். இதனால் அவ்வன்பர் சூனியத்திலிருந்து விடுபட்டார். இது தயவே வடிவமான பெருமானின் இரக்க உணர்வை எடுத்துக் காட்டுகிறது. அன்பர் பணி செய்வதில் மக்களுக்கு ஆர்வமுண்டாக்கவே பலதெய்வ வழிபாட்டை கருவியாகக் கொண்டார். ''பல தெய்வங்களை நான் பாடியிருந்தாலும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் வேறு பெயர்களாகவே எண்ணினேன். அன்பர் பணி புரிவதற்கு என்னை ஆட்படுத்தியிருக்கிறீர், அப்படி உரைப்பதும் ஒழுக்கம் என்று உபதேசித்திருக்கிறீர்,'' என்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடமே கேட்டு மக்களுக்கு பெருமான் உபதேசம் செய்த பாடல்களை திருவருட்பாவில் காணலாம்,

Koviloor Digital Library

முத்தி

முத்தி என்பது மோட்சத்தைக் குறிப்பது என்று பலரும் சொல்லி வருகின்றனர். அதைப்பற்றி பெருமான் பாடியிருக்கும் பாடல்களில் மோட்சம் என்ற பொருளிலும், விடுதலை என்ற பொருளிலும் அமைந்திருப்பதைக் காணலாம். ''வாரம் வைத்தியேல் சாரும் முத்தியே'' என்ற செய்யுட்பகுதி முத்தி உபாயம் என்ற பதிகத்தில் காணலாம். இறைவனிடம் இடையருது பேரன்பு இருந்தால் மோட்சம் என்கிற விடுதலை கிடைக்கும்'' என்ற பொருளில் அமைந்திருக்கிறது. ''முத்தி என்பது நிலை முன்னுறு சாதனம்'' என்பது திரு அகவல். முத்தி பெருவாழ்வை அடைவதற்குரிய பயிற்சி. இப்பயிற்சியால் கிடைக்கும் அனுபவம் பெருவாழ்வு. ''சித்தி என்பது நிலை சேர்ந்த அனுபவம்'' என்கிறது திருஅகவல் அதன் பொருள் அழியாத அனுபவம்.

சித்தி

''சித்தெல்லாம் வல்ல திறன் அளித்து எனக்கே அத்தன் என்று ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி'' என்பது திருஅகவல். இதைப் படித்த ஒருவர் ''இராமலிங்கர் ஏன் எல்லா சித்திகளையும் பெற்றதாக சொல்லுகிருர்'' என்று எழுதுகிருர். இப்படி எழுதுபவர் சன்மார்க்கத்தில் பக்குவம் அடையாதவர், சொற்களைப் பிரித்து பார்க்கும் தகுதியும் அற்றவர் என்பது புலனுகிறது. சித்து+எல்லாம் என்று பிரிக்கிறபோது சித்தி என்ற தொடர் எங்கே இருக்கிறது என்று அவருக்கு புரியவில்லை.

சித்தி என்பது வேறு; சித்து என்பது வேறு. சித்து என்பது அரிய செயலைக் குறிக்கும். அரிய செயலை செய்பவர்களே பெரியவர். சித்து செய்ய வல்லவர்களே சித்தர்கள் (சித்து+அர்) இதைவிட வேறு ஒரு பொருளை வள்ளற்பெருமான் தன் அனுபவத்தில் கண்டிருக்கிருர். அது சரிதான என்று இறைவனிடத்திலும் கேட்டிருக்கிருர். அது உண்மைதான் என்று ஆண்டவரிடம் உறுதி செய்துக்கொண்ட பிறகுதான் திருஅக

Koviloor Digital Library

வலில் பாடியிருக்கிருர். சித்தி என்பது பெருவாழ்வை மட்டுமே குறிக்கும் என்பதாகும்.

சித்தி என்பது நிலை சேர்ந்த அனுபவம் என்ற திருஅகவல் மூலம் பெருவாழ்வு என்பதை உணரலாம். இது தவிர வேறு சித்திகளே கிடையாது. மற்றவை எல்லாம் சித்துகள் என்கிற அருஞ்செயல்களேயாகும். அவற்றையும் சித்தி என்று ஏன் சொல்லுகிருர்கள். இந்த கேள்விக்குரிய பதிலும் பெருமான் வாக்கிலேயே உள்ளது. ''ஏகசிற்சித்தியே இயலுற அனேகம் ஆகியது என்ற என் அருட்பெருஞ்ஜோதி'' என்பது திரு அகவல். சித்தி என்பது ஒன்றே ஒன்றுதான்; அதுவும் மரணமிலா பெருவாழ்வைத்தான் குறிக்கும் என்பதை வலியுறுத்த ''ஏகசிற்சித்தி'' என்கிருர். இந்த சித்தியைப் பெற்றதற்கு காரணம் உயிர்ப்பணி செய்வதற்கே என்கிருர் பெருமான். ஏகசிற்சித்தியே அனேக சித்திகளாக மாறுகின்றன. சிறப்பாக மூன்றுவகையாகப் பிரிக்கலாம். இவை கரும சித்தி, யோக சித்தி, ஞானசித்தி என்பன. கருமசித்தி என்பது உடல் ஆற்றலால் செய்கிற அருஞ்செயல்களாகும். யோகசித்தி என்பது மனே ஆற்றலால் செய்கிற அருஞ்செயல்களாகும். ஞான சித்தி என்பது அறிவின் ஆற்றலால் செய்கிற அருஞ்செயல்களாகும்.

இந்த மூன்றையும் பற்றி விரிவான விளக்கத்தை திரு அகவலில் காணலாம். பெருவாழ்வு நிலையான வாழ்வு என்பது பெருமான் ஒருவருக்குத்தான் அனுபவத்தில் தெரிந்திருக்கிறது. மற்றவர் அதற்குமுன் இருந்த புத்தகங்களையே நம்பி விடுகின்றனர். முத்தியை மோட்சம் என்றே கருதினர். அதற்குமேல் எதுவுமே இல்லை என்றனர். அதனுல் அனுபவம் பெற அவர்களால் இயலவில்லை.

வையகத்தீர் என்று தொடங்கும் பாடலில் வஞ்சகத்தால் தான் மரணம் வருகிறது. அந்த வஞ்சகம் இல்லாத வாழ்க்கைத்தான் உண்மையான வாழ்க்கை, அழியாத வாழ்க்கை என பெருமான் தெளிவாக உணர்த்தி இருக்கிருர்., இதனை

Koviloor Digital Library

"மையகத்தே உறும் மரண வாதனையைத் தவிர்த்த வாழ்க்கையதே வாழ்க்கை என அழுத்தம் திருத்தமாக பெருமான் சொல்லியிருக்கிறார், மைஎன்பது வஞ்சகம். பெருமான் அனுபவித்துக் கொண்டிருக்கிற, ஏகசிற்சித்தி, இறைவனே அவருக்கு வழங்கியிருக்கும் ஒப்பற்ற பெருவாழ்வாகும்-

அறம், பொருள் இன்பம், வீடு என்ற தொடரில் முடிவில் இருக்கும் வீடு என்பது தான் விடுதலை எனும் முத்தி ஆகிறது, விடு என்ற சொல் நீண்டு வீடு என ஆகிறது, சுடு என்ற சொல் நீண்டு சூடு ஆவதுபோல, தர்மம், அர்த்தம், காமம் மோட்சம் என்பதுதான் அறம், பொருள், இன்பம், வீடு என்ற பொருளில் வருகிறது, இந்த நான்கும் உலக(அபர) வாழ்க்கையில் உள்ளனவே. இதில் தெய்வத்தைப் பற்றி பரவாழ்வைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை.

நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு அவற்றிலிருந்து விடுதலைப் பெற்று மாலையில் ஓய்வு பெறவரும் இடத்திற்கு வீடு என்று பெயர். அதனால் அறம், பொருள், இன்பம், வீடு என்பது புருஷார்த்தம் அல்ல; உறுதிப் பொருள் அல்ல. உண்மை நெறியில் சொல்லப்பட்ட இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம்; ஆன்ம ஒழுக்கம் ஆக நான்கினால் கிடைப்பதே புருஷார்த்தம் (அ) உறுதிப் பொருளாகும். அவை ஏம சித்தி, சாகாக்கலை, கடவுள்நிலை, தத்துவ நீக்கம் என்கிற நான்கு பேறுகளாகும்.

சமயத்தில் கூறுகிற சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கில் கிரியை உடம்பு சம்பந்தப்பட்டது சரியை யோகம் மனம் சம்பந்தப்பட்டது, ஞானம் அறிவு சம்பந்தப்பட்டது. இந்திரிய ஒழுக்கத்தை சரியை, கிரியை என்கிற இரண்டுக்கும் அடிப்படையாகக் கருதி கொள்ளலாம். யோகம் என்பது கரண ஒழுக்கத்தைக் குறிக்கும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் அல்லது அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்கிற நான்கும் கரணத்தைக் குறிப்பது. கரணம் நீண்டு காரணம் ஆகிறது.

Koviloor Digital Library

காரண காரியம் காட்டிக் கொண்டே காலம் போக்குகிறவர்கள் சான்ருேரையும், தெய்வத்தையும் நம்பாதவர்கள்தான். இதையும் கடந்து மேலே செல்கின்ற ஞான உணர்வுதான் ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கமாகும். இவ்வொழுக்கத்தைக் கடைப் பிடிப்பவர்கள் மனித உயிரையும், மற்ற உயிர்களையும் இறைவனுடைய பிள்ளைகளே என நம்பி வாழ்க்கை நடத்துபவர்களே இதனுல் புலால் உண்கிற மிருகத்தன்மை ஒழிந்து விடுகிறது. "உயிருள் யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே உயிர்நலம் பரவுக என்றுரைத்த மெய்ச்சிவமே'' என்பது திருஅகவல்.

சன்மார்க்கம் மட்டும் தான் இத்தகைய உயர்ந்த ஞானத்தையும், ஞானயோகத்தையும், உண்மை நடத்தையையும் குறிக்கும். அதனுல் உண்மை நெறிமட்டும்தான் சன்மார்க்கம். இதனுல் உண்மை நெறியை, ஒளி நெறி, திருநெறி, பெருநெறி என்றும் வழங்குவர். பெருநெறி பிடித்து ஒழுகும் போது மதம் நம்மைவிட்டு விலகிசென்றுவிடும். மேலும் ஏமசித்தி (சுத்த பொன் உடம்பு) சாகாக்கலை, கடவுள் நிலை, உடற் கூற்றின் அடக்கம் (தத்துவ நிக்கிரகம்) என்ற நான்கு பேறுகள் கிடைக்கும்,

இந்த உண்மையை அனுபவிக்காமல் பெறும் கற்பனைகளாகிய சாலோகம், சாமீபம், சாரூபம்: சாயுச்சியம் என்ற கற்பனையான பேறுகளில் ஈடுபடுகிருர்கள் சமயத்தவர். சாலோகம் என்பதுஇந்தஉலகம் வேறு கடவுள்உலகம்வேறு என்றுதவருக நினைப்பது. சாமீபம் என்பது கடவுளுக்கு சமீபத்தில் இருப்பதாக செய்து கொள்ளும் வெறும் கற்பனையாகும், கடவுள் இல்லை என்ருல் உயிரே இல்லை; உயிருக்கு உயிரே கடவுள். சாரூபம் என்பது இறைவனுக்கு உருவம் கற்பிப்பது. சாயுச்சியம் என்பது இது நல்ல உச்சி என்ற பொருளையுடையது. அவ்வளவுதான். இதில் சுத்த சன்மார்க்க பொருள் ஒரு சிறிது அமைந்துள்ளன, உச்சி என்பது திருச்சிற்றம்பலம் என்கிற பொற்கோயிலைக் குறிக்கும். உச்சி குளிர்ந்தது என்று உலக வழக்கில் உள்ளது இதைத்தான் குறிக்கிறது. கண்டத்திற்கு

Koviloor Digital Library

மேல் அனுபவிப்பதுதான் உண்மையான அனுபவம் என்பதும் இதுதான். கண்டத்தைக் கண்டு கருமம் முடிப்பவர் பிண்டத்தில் வாரார் என்று ஞான நூல்கள்பேசுகின்றன. உண்மையில் இதன் அர்த்தம் சுத்த சன்மார்க்க ஒழுக்கமுடையவர் தான் பிறப்பு இறப்பு அற்ற பெருவாழ்வை பெற முடியும் என்பது தான்.

திருவருட்பாவில் நமக்கு புரியாத செய்திகள் பல இருக்கின்றன. அவற்றை புதிர்களாக, விடுகதைகளாக கருதினல் பல உயர்ந்த உண்மைகளை புரிந்து கொள்ளமுடியும்; அருள் விளக்கமாலையில் 47 பாடல்,

ஒரு மடந்தை வலிந்து அணைந்து கலந்து அகன்ற பின்னர்
உளம் வருந்தி என்செய்தோம் என்றுஅயர்ந்தபோது
பெருமடம் சேர்பிள்ளாய் என்கெட்டது ஒன்றும் இலை
நம் பெருஞ்செயல் என்று எனைதேற்றிப் பிடித்த
பெருந்தகையே

புதிர்

திருமடந்தைமார் இருவர் என் எதிரே நடிக்கச்
செய்தருளிச் சிறுமை எலாம் தீர்த்த தனிச்சிவமே
கருமடந்தீர்ந்தவர் எல்லாம் போற்ற மணிமன்றில்
காட்டு நடத்தரசே என்பாட்டும் அணிந்தருளே

காட்டு நடத்தரசே=இறப்பை நீக்கும் நுட்பத்தை காட்டுபவரே. கருமடம்=பிறப்பு எனும் அறியாமை.

வள்ளலார் தியானத்தில் தன்னை ஒரு பெண் பலாத்காரமாகக் கூடி பிரிந்து போனது போன்ற நுகர்வை சிரநடுவே உணர்ந்தார். உண்மை உணராது வருந்தினர். "உண்மையில் நீ எந்த தவறும் செய்துவிடவில்லை. வருந்தாதே நீ அனுபவித்த இன்பம் ஆண் பெண் கூட்டுறவால் ஏற்பட்ட கீழ்த்தரமான இன்பம் அல்ல, உச்சிக்கு கீழே நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி இது. நம்முடைய பெருஞ்செயல் என்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வள்ளலாருக்கு ஆறுதல் சொல்லியிருக்கிறர்.

Koviloor Digital Library

அதே பாடலில் இன்னெரு விடுகதையும் உள்ளது. மேலே சொன்ன உண்மைப் பொருளை இது இன்னும் விளக்கமாக உணர்த்துகிறது. இரண்டு பெண்கள் வள்ளலார் முன் நடனம் செய்தனர், வள்ளலாரின் துன்பத்தை தாழ்ந்த செயலை போக்கி னர் என்பது. இதையும் இறைவனே செய்தார் என்கிருர் வள்ளலார். இதன் உண்மை விளக்கத்தை ஊன்றி விசாரணை யிலிருந்தால் தெளிவு ஏற்படும். அதாவது நம் தலையில்மூன்று சுரப்பிகள் உள்ளன. அவைகளில் இரண்டு சுரப்பிகள் ஒன்ருே டொன்று எதிர்செயல்புரிகிறபோது ஏற்படுகிற இன்பமும், தெளிவுமேயாகும்.

''உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள், தெள்ளி குடைந்து நின்று ஆடார், வினை கெடார்'' என்பது திருமந்தி ரம், நம் தலையினுள் மூன்று சுரப்பிளாவன. அவை பினி யல் (Pineal) பிட்டுடரி (Pituitari) கரோடிட் (Carotid) என் பன. இச்சுரப்பிகள் முறையே பெருமூளைக்கும், சிறுமூளைக்கும் இடையில் ஒன்றுஅன்னம் என்கிறமேல்வாய்க்கு அருகில்ஒன்று குரல்வளைக்கு அடுத்த ஒன்று என இருக்கின்றன. இந்த மூன்று சுரப்பிகளைத் தான் மூன்று மடந்தைகளாக குறிப்பிடு வர். இவற்றுள் ஒன்றை பிளாவட்ஸ்கி அம்மையார் எழு திய மறைஞானம் என்ற நூலில்பெண் உடம்பு என்றே குறிப் பிடுகிருர். பெண் உடம்பு என்பது மூளையிலுள்ள பெண் குறி தான் என்கிருர். ''The uterus of the Brain'' என்பது அம் மையார் திருவாக்கு. இந்த சுரப்பிகளின் இயக்கத்தால் உண் டாகிற இன்ப மயக்கம் ஆண்பெண் கூட்டுறவால் உண்டாகி இன்ப மயக்கம் போன்றது. பிளாவட்ஸ்கி அம்மையார் மூளை யின் சுரப்பிகளினுல் ஏற்பட்ட இன்பத்தால் உதித்தது பிரம்ம ஞானசபை என்றகுழந்தை. இப்படியேநைட்டிங்கேல் அம்மை யார் செஞ்சிலுவை சங்கத்தை தோற்றுவித்தார். வள்ளற்பெரு மான் சுத்தசன்மார்க்க சங்கத்தை தோற்றுவித்தார்.

ஆண்பெண் கூட்டுறவால் பிறக்கிற பிள்ளை அணுபட்ச சிருட்டியாகும். அணு என்பது தூலப் பொருள். விபு என்பது

Koviloor Digital Library

ஒளிக்கதிர். விபு பட்ச சிருட்டியே பெருமான் குறிக்கிருர். சிரநடு சிற்றம்பலத்திலுள்ள தெய்வீக உள் ஒளியாலும் சிந்தனையாகிய நம் மனமெனும் எண்ணத்தின் விளைவான உயிர் ஒளிக்கூட்டுறவாலும் உண்டாவது விபுபட்ச சிருட்டியாகும்.

துரியம்—துரியாதீதம்

ஓங்கிய ஓர் துணையின்றிப் பாதி இரவதிலே உயர்ந்த
ஒட்டுத் திண்ணையிலே படுத்த கடைச் சிறியேன்
தூங்கி மிகப் புரண்டுவிழத் தரையில் விழாது எனையே
தூக்கி எடுத்து அணைத்துக் கீழ்க்கிடத்திய மெய்த்
துணையே
தாங்கிய என் உயிர்க்கு இன்பம் தந்த பெருந்தகையே
சற்குருவே நான்செய் பெருந்தவப்பயனும் பொருளே
ஏங்கிய என் ஏக்கமெலாம் தவிர்த்தருளிப் பொதுவில்
இலங்கு நடத்தரசே என் இசையும் அணிந்தருளே
அருள் விளக்கமாலை—பாடல்—45

வள்ளற் பெருமான் எப்பொழுதும் விழிப்பு உணர்ச்சியுடையவர். ஒட்டுத் திண்ணையிலே படுத்தவர் தூங்கி புரண்டு விழ இருந்தவரை தாங்கியவர் ஆண்டவர்என்பது பொருள் கொள்வது தவறு. தியான நிலையில் நடந்த நிகழ்ச்சியை இப்படி குறிப்பிடுகிருர். துரியத்திலிருந்து நழுவி விழ நேர்ந்த போது இறைவர் தாங்கியிருக்கிருர் என்பதே இதன் பொருளாகக் கொள்ள வேண்டும். தூக்கி அணைத்து கிடத்தினுர் என்பது, துரியத்திலிருந்து விழுந்தவரை அதன் அதீதமான அனுபவத்திற்கு செலுத்தியிருக்கிருர். தன்னை மறந்த துரியாதீத நிலையைக் குறிப்பிடும் இடத்தை.ஒத்த இடம் என்கிருர். இதனை அட்டகத்தின் ஏழாவது பாடலில் காணலாம்.

தத்துவம் அனைத்தும் தனித்தனி கடந்தேம்
தத்துவாதீத மேல் நிலையில்
சித்திடல் முழுதும் தெரிந்தனம் அவைமேல்
சிவநிலை தெரிந்திடச் சென்றேம்

Koviloor Digital Library

ஒத்த அந் நிலைக்கண் யாமும் எம் உணர்வும்
ஒருங் குறக் கரைந்து போயினம் என்று
அத்தகை உணர்ந்தோர் வழுத்த நின்றோங்கும்
அருட் பெருஞ்ஜோதி என் அரசே

துரியம், துரியாதீதம் என்ற இரண்டுக்கும் சுத்த சன் மார்க்க பொருள் வேறு என்று புரிந்து கொள்ள வேண்டும் துரியம் என்பது நனவு, கனவு, துயில் என்ற மூன்றையும் கடந்த நான்காவது நிலை. துயில் விரிந்து கனவாதலும், கனவு விரிந்து நனவாதலும். நனவு விரிந்து துரியமாதலும் துரியம் விரிந்து துரியாதீதமாதலும் அனக விரிவாகும்.

துரியம் என்பதை பெருமான் கோன்கண்டகுடி என்கிறார். இங்கே இறைவன் நம்மை கண்காணிக்கிறார். தாவிச் சென்றுக் கொண்டிருக்கும் தாய் குரங்கை சேய் குரங்கு இறுகி பற்றிக் கொண்டே இருக்க வேண்டும். பிடி தளர்ந்தால் ஆபத்து. இதை துரிய நிலை என்பர் மற்றவர்.

துரியா தீதத்தை கோன் கொண்ட குடி என்கிறார் பெருமான். இங்கே இறைவன் நம்மை ஆட்கொள்ளு கிறார். தாய்பூனை தன் சேய் பூனையை அவ்வப்போது கௌவிச் சென்று பாதுகாப்பான இடத்தில் வைத்து கண் காணிக்கும். இது சுத்த சன்மார்க்கத்திலும் உண்டு இதுவே கோன் கொண்ட குடி. இறைவன் தாங்கி அருளி யதை இதனோடு ஒப்பிடுவது பொருத்தமாகும்.

இரண்டரை, கடிகையும், நாழிகையும்

வள்ளற் பெருமான் "2½ கடிகையில் வருவதாக சொல்லி சென்றார்" என்று பலர் தவறாக பேசுகின்றனர். எழுதுகின்றனர். நம்முடைய உலக அனுபவத்திலிருந்து விடுபட்டு உயர்ந்த நிலையிலுள்ள இறை அனுபவத்தைப் பெறுவதற்கு ஒரு அளவு கோள் குறிப்பிடுகிறார் பெருமான்

நம் மனதில் பாதி இறைவன் ஆட்சியிலும் பாதி மனம் நம் சுதந்திரத்திலும் இயங்குகிறது. பாதி மனதுடன்

Koviloor Digital Library

உயிர் ஒன்று, உடல் ஒன்றுகூட்டினால் 2 1/2 ஆகிறது. உலக பற்றில் மயங்கி தவறுகளை செய்யும் நம் பாதி மனதை திருத்துவது 2 1/2 கடிகையாகும். ''தப்பாலே உலகத்தவர் சாவே துணிந்தார்'' என்பது பெருமான் வாக்கு. இதை உணர்ந்து நம் அசுத்த பாதி மனம் இறை அனுபவ பற்றில் இடைவிடாது முற்படுகிற போது இறைவன் ஆட்சியிலுள்ள பாதி மனதுடன் ஒன்றி விடுகிறது. அப்போது மனம் தூய்மை அடைவதுடன் நம் உடம்பும், நம் உயிரும் தூய்மையைஅடைகிறது. இதனை 2 1/2 நாழிகைஎன்கிறார்.

கடிகை என்பது இருளை (அறியாமையை) கடிந்து விலக்குவது. நாழிகை என்பது திருவருளால் பெரு வாழ்வை பெறுவது. இது முத்திறல் தேக சித்தியாக மாறுவதைக் குறிக்கிறது. இதைத் தான் பெருமான் ''ஆண்டவர் 2 1/2 நாழிகையில் பேர் உடம்பில் கலந்து உயிரில் பிரியாமலிருப்பார்'' என சத்திய வார்த்தை பதிகத்தில் குறிப்பிடுகிறார். பேறடைவு பதிகத்தில் ''அருள் ஒளித் திருவை கடிகை ஓர் 2 1/2 அதனில் மணம் புரிவிப் பாம்என்பது கவனிக்கத் தக்கது. இந்நிலை அடைவதை ஆளாதல் என்கிறார்.

பெருமான் இரண்டரை கடிகை பகுதியை முன்பாட்டு காலை என்றும் இரண்டரை நாழிகைபகுதியை பின்பாட்டு காலை என வழங்குகிறார். இதனையே அகப்பாட்டுவண்ணம், புறப்பாட்டு வண்ணம் என்றும் மேலும் அகவரை படநிலை, புற வரைபடநிலை என்றும் தொல்காப்பியமும் கணித உலகமும் வழங்குகின்றன.

முத்திறல் வடிவம்

சுத்த வடிவும் சுகவடிவும் ஓங்கார
நித்த வடிவும் நிறைந்து ஓங்கும்—சித்துஎனும் ஓர்
ஞான வடிவும் இங்கே நான் பெற்றேன் எங்கெங்கும்
தான விளையாட்ட இயற்றதான்.

Koviloor Digital Library

சுத்த வடிவு ஓங்கார வடிவு, ஞான வடிவு, எனும் முத்திறல் தேக சித்தியை பெருமான் பெற்றதை கூறுகிறார். ஊன உடம்பே ஒளி உடம்பாக ஓங்கி நிற்கும் நம் பெருமான் நம்மை விட்டு எப்போதும் பிரியாமலிருக்கிறார். இப்போது நாம் இந்த உடம்பில் இருக்கிறோம். இனி எல்லா உடம்பிலும் புகுந்து நிற்கும் ஆற்றலைப் பெற்று அப்போது உங்களை திருத்தியே தீருவோம் எனகிறார்.

ஏதோ கடையை விரித்தோம், வாங்கு வாரில்லை கட்டிக் கொண்டோம் என்று எண்ணி ஏமாந்து விடாதீர்கள். ஆனால் அச்சில் வார்ப்போம், ஆகாவிட்டால் மிடாவில் விட்டு வைத்து பக்குவம் வருவிப்போம் என்று அழுத்தம் திருத்தமாக நமக்கு எச்சரிக்கை செய்கிறார். இங்குவெல்லம் செய்கிற தொழில் நுட்பத்தை நினைத்து நினைத்து இன்புறலாம். நம் கசக்கும் வாழ்க்கையை இனிக்கும் வாழ்க்கையாக பெருமான் மாற்றிக் கொண்டு வருகிறார். 1874ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ந் தேதி ஒளி உடம்பு பெற்றிருக்கிறார் என்பது நாம் அறிந்ததே.

உண்மை ஆண் பெண்

என்னியல் போல் பிறர் இயலை எண்ணேல்
  என்று உரைத்தேன் இறுமாப்பால் உரைத்தனன்
  என்று எண்ணிவிடேல் மடவாய்
பன்னிய நான் என்பதியின் பற்று அலது
  வேறோர் பற்று அறியேன் உற்றவரும்
  மற்றவரும் பொருளும்
உன்னிய என் உயிரும் எனது உடலும்
  எனது உணர்வும் உயிர் உணர்வால்
  அடை சுகமும் திருச்சிற்றம்பலத்தே
மன்னியது ஆதலில் நான் பெண்மகளும்
  அலேன் வரும் ஆண்மகனும் அலேன்
  அலியும் அலேன் இது குறித்து என்று அறியே

5754—அனுபவமாலை 41

Koviloor Digital Library

என் தன்மையைப்போல பிறர் தன்மையை எண்ணி விடாதே என்று சொன்னேன். இப்படிச் சொன்னது ஆணவத்தால் சொல்லி விட்டேன் என்றுஎண்ணிவிடாதே பரிபூரணமாக அறிந்து கொள்ளாத பெண்ணே! பலவாறு விரித்து இப்படி சொன்ன நான் என் தலைவனைத் தவிர வேறு யாரையும் விரும்பி அறியேன். என் உறவினரும் நண்பர்களும் செல்வமும் நான் கருதிய என்னுடைய உயிரும், உடலும் உணர்வும உயிர்களிடத்தில் பரிவு காட்டுவதால் நான் அடைகிற இன்பமும் இவையாவும் என் சிர நடுவே விளங்கும் பொற் கோயிலில் நிலைபெற்றிருக்கின்றன ஆதலால் நான் பெண்மகளும் அல்ல. தேடி வரும் ஆணும் அல்ல. ஆணும் பெண்ணும் அல்லாத அலியும் அல்ல. இந்த உண்மையைக் குறித்து தெளிவாக தெரிந்து கொள்வாயாக.

ஆண் உயிர் என்றால் பெண் உடம்பு என்பர். உயிர் இல்லாமல் உடம்பு இயங்க முடியாது. உடம்பு இல்லாமல் உயிரும் இயங்க முடியாது. எனவே ஆணும் பெண்ணும் அல்லாத ஒரு நிலை அலி நிலைதான் என்றி எண்ணுவது தவறு. இது ''அலியும் அலேன்'' என்ற சொற்றொடரால் தெரிகிறது.

ஆண் அறிவு என்றால் பெண் அன்பு என்பர். 'பெண் இயல் மனமும் ஆண் இயல் அறிவும்'' என்ற திரு அகவல் மூலம் உணரலாம். அன்பு இல்லாமல் அறிவு பரிபூரணமாக எதையும் செய்ய முடியாது, இல்லறத்தில் கூட அன்பும் அறனும என்ற இருசொற்களை குறிப்பிட்டு அவை பண்பும் பயனும் என்கிறது திருக்குறள் பண்பும் பயனும் இல்லாத போது இல்லறம் சிறந்து விளங்காது.

ஆண்பெண் இருவருக்கும் தனித்தனியே குறைஉண்டு. அக்குறையை நீக்கத்தான் ஆண் பெண்ணையும்பெண் ஆணை விரும்ப நேருகிறது. இருவரும் பரிபூரண நிலையை அடை

Koviloor Digital Library

யும் போதுமக்கள் நிலையைகடந்து பெருமக்களாகஉயர்ந்து விடுகின்றனர். இருவரும் சேர்ந்து மற்ற உயிர்களைவளர்க் கவே துணிவர். இதுதான் எங்கள் குடும்பம் பெரிது என் கிற பெருவாழ்வு ஆகும்.

எழுதிணைகளில் முதல் ஆறு திணைகளும் பொதுவாக மனிதரைப்பற்றியே விளக்குகின்றன, ஏழாவது திணை பெருந்திணை. அது மாமனிதரைப் பற்றிய விளக்கமே தரு கிறது. இந்நிலை எய்தும் போது பெண்ணைத் தொடர்ந்து ஆண் போகும் நிலை, ஆணைத் தொடர்ந்து பெண் போகும் நிலை ஏற்படாது காரணம் ஆணும்பெண்ணும் தன்னிறைவு பெற்று மாமனிதராகவும், மெய்கண்டாராகவும் விளங்கு கின்றனர்.

அவன், அவள், அது என்ற மூன்றில் அவன் என்பது இறைவனையும், அவள் என்பது உயிரையும் அது என்பது பெருஞ் செயலையும் குறிப்பிடுகிறது. செயற்கரிய செய் வார் பெரியார் என்ற திருவள்ளுவர் வாக்குக்கு உரை சான்ற விளக்கம் இது தான். உலகத்தோடு ஒட்ட ஒழுகு தல் என்பதற்கு உலக உயிர் நலப் பணி ஒட்டியே நாம் உழைக்க ஒழுக வேண்டும் என்பதே திருவருட் பாவின் உண்மையான, பரிபூரண விளக்கமாகும். அவன், அவள் அது என்பது ஆண், பெண், அலியை குறிக்காது.

ஆண் தன்மை இழந்து பெண் தன்மை மட்டும் மேற் கொள்பவரை பேடி என்று இழித்து கூறுவர். பெண் தன்மை இழந்து ஆண் தன்மையை மட்டும் மேற் கொள்ப வரை பேடு என்று இழித்து கூறுவர்.

இவ்விரு நிலைகளும் அலி என்று கூறி ஒதுக்கப் படு கின்றன. அலி என்ற சொல்லில் அல்என தொக்கி உள்ளது இது ஆணும் அல்ல. பெண்ணும் அல்ல என்பதைக் குறிக் கிறது. பரிபூரணமான ஆணும் பரிபூரணமான பெண்ணு மாக விளங்கும் போது அலி என்று சொல்ல முடியாது

Koviloor Digital Library

மனித நிலைக் கடந்து மாமனித நிலையை, மெய்க் கண்டார் நிலையை எய்துகின்றனர். ஆண், பெண், அலி போன்ற தன்மைகளை எல்லாம் கடந்த ஆண்டவரின் நிலை அறிந்து கடவுள் மயமாக விளங்குகிறார் பெருமான்.

வானவர் போன்ற மற்றவர்களுக்கு என் இயல்பு உள்ளதாக எண்ணிவிடாதே மடவாய் என்கிறார். மடவாய் என்பது அறிவுடைமையாகாது என குறிக்கவே ஆகும், மேலும் மடு+அவாய் என பிரித்தால், இதை நுகர்ந்து முன்னேறுவதற்கு நீயும் விரும்பு எனலாம். "பற்றிய பற்றனைத்தையும்பற்றற விட்டு அருள் அம்பலப் பற்றே பற்றுமினோ என்றும் இறவீரே" என்பதை வற்புறுத்துவது போல "பதியின் பற்று அலது வேறோர் பற்று அறியேன் என்கிறார். இந்த இயல்புக்கு நாமும் வர வேண்டுகிறார். தலைவியாகிய பெருமான் தோழியாகிய மனதிற்கு (நமக்கும்) நீயும் என்னை போல் நித்தியவாழ்வை பெற இயலும் என வற்புறுத்துவது போல் உள்ளது.

"என்னியல் போல் பிறர் இயலை எண்ணேல் என்று உரைத்தது இறுமாப்பால் உரைத்தது அல்ல. என் அகத்திலுள்ள உள் ஒளியாகிய ஆண்டவர் உயிர், உள்ளம், உடல், சூழ்நிலை எங்கும் பரவி அருள்பிரகாசமாய் விளங்குகிறார், ஆண்டவர் தனிப் பெருங் கருணையால் சுத்த பிரணவ ஞான தேகம் எனும் முத்திறல், தேக சித்தியின் இயல்பை பெற்றேன் என்கிறார்.

மெய்க்கண்டார் நிலை

அருட்பெருஞ்ஜோதியை கடவுள் என்றும் தனிப் பெருங்கருணையை கடவுள் சக்தி என்றும் எண்ணிவிடக் கூடாது. கடவுளும் அவர் அருளும் ஒன்று என்று எண்ணுவது தான் ஒளி நெறி கொள்கையாகும். ஆண் பெண் வேறுபாடு மாமனித நிலையில் படிப்படியாக குறைந்து விடும். மெய்க்கண்டார் நிலையில் மறைந்து விடும்.

Koviloor Digital Library

''அவன் அன்றி ஓரணுவும் அசையாது'' என்பது முதுமொழி. இதில் ஆண் பெண் வேறுபாடு உள்ளது. ''அருள் அலாது அணுவும் அசைந்திடாது அதனால் அருள் நலம் பரவுக'' என்று பெருமான் திரு ஆணை பிறந்திருக்கிறது. ''உலகியல் சிறிதும் உளம் பிடியா வகை அலகில் பேரருளால் அறிவது விளக்கி'' ''பேரருளால் அறிவது'' என்பது கவனிக்கத்தக்கது.

சூட்சும உடம்பே ஒரு கணத்தில் தூல உடம்பாக மாறி தோன்று துணையாக வந்து உதவி அடுத்த கணமே சூட்சும உடம்பாக மறைந்த சம்பவம் ஒன்று கவனிக்கத் தக்கது. அன்னை வசந்தைஇரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அப்பெட்டியில் இவர் ஒருவரே தனித்து இருந்ததால் தியானம் செய்து கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் திடீரென சத்தம் கேட்டது. எதிரில் ஒரு முரட்டு மனிதன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து நடுங்கினார்,

அக்கொடியவனும் பயங்கர பார்வையுடன் அப்பெண் மணியை நோக்கி நெருங்கி வந்தான். அவனுக்கு நேரே ஒரு இருக்கையில் கம்பீரமானபெரியவர் அமர்ந்து கொண்டிருப்பதைக் கண்டான். அந்த பெரியவரும் ஒன்றும் பேசாது, கொடூர பார்வையுடன் தன்னை உற்று நோக்குவதைக் கண்டு நடுங்கினன். அப்பெண்மணியிடம் நெருங்குவதற்கு அவன் கால்கள் நடுங்கின, தடுமாறின. அப்போது இரயிலும் ஒருஸ்டேசனை நெருங்கி நின்றது. உடனேகொடியவன் திடீரென கதவைத்திறந்து வெளியே குதித்து ஓடி விட்டான்.

அப்பெண்மணி எழுந்து தனிபெட்டியில் திடீரென வந்து உட்கார்ந்து உதவிய பெரியவர்க்கு நன்றி சொல்ல எழுந்தார். அவரும் சூட்சும உடல் பெற்று மறைந்தார், மாமனிதரே சூட்சும உடம்பினை ஒரு கணத்தில் மாற்றி தூல உடம்பினராக மாறி உதவியதும், அடுத்த கணமே சூட்சும உடம்பினராகி மறைந்ததும் அருள் ஆற்றலின் விளைவு என உணர்கிறோம்.

Koviloor Digital Library

நித்திய வாழ்வு வழங்கும் சுத்த சாதகம்

வள்ளற்பெருமான வாழ்வு தரும இனிய எளிய பயிற்சி

இனிய எளிய பயிற்சி கடலூர் முத்து இராமலிங்கம்

திருவருட்பிரகாச வள்ளற்பெருமான் பெற்றிருக்கும் பேரின்ப பெருவாழ்வு கான [illegible] வாழ்வு- [illegible]யே மரணமில்லா பெருவாழ்வு என்கின்றனர்-இதை அடைவதற்குரிய பயிற்சி இனிமையானது எளிமையானது என்பது பெருமானின் அனுபவமே விளக்குகிறது இக்கடினமற்ற பயிற்சியை பெருமான் உபதேசத்திலும் பாடல்களிலும் விளக்கமாக, தெளிவாக கூறியிருக்கிறார் அவர் அடைந்த வெற்றியை சித்தி என்றும் அதற்காக செய்த பயிற்சியை முத்தி என்றும் வழங்குகிறார்.

பெருவாழ்வு பெறுவதற்குரிய பயிற்சி மூன்று வகைப் படும்— 1. கேவல சாதகம் 2 சகல சாதகம் 3. சுத்த சாதகம் என்பன முதல் கேவல சாதகம் தனிமனித முயற்சியால் எழும் பயிற்சியைக்குறிக்கும். இதில் ஆணவம் தலை எடுத்து பற்றவரை அடிமைப்படுத்த முயலும் மேலும் கடின சித்தத்தை வளர்க்கும். இரண்டாவது சகல சாதகம் தனிமனித பயிற்சியை கடந்த பொது நோக்க முடையது ஜீவகாருண்ய ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்கே ஆணவம் தலை எடுக்காது, சமூக சம்பிரதாயம் சேருவதால் இங்கே பயம் என்ற பலகீனம் ஏற்படுகிறது.

மூன்றாவது சுத்த சாதகம் என்பது, இது சிறப்பியல் உண்மை நெறி பயிற்சியாகும். எந்தவித பேதமின்றி இரக்கமே உணர்வாகி ஆன்மநேய ஒருமையினை ஓங்கச் செய்கிற பயிற்சியாகும் இங்கே ஆணவத்தடை இல்லை. பயம் என்கிற பலகீனம் இல்லை. பெருந்தொகையான உயிர்களுக்கு பெருநன்மை செய்யக்கூடியது. இறைவன்

Koviloor Digital Library

திருவடியை உறுதியாகப் பற்றிக்கொண்டு உயிர்ப்பணியில் முழுமையாக ஈடுபடுவதைக் குறிக்கும். தன் தேக, போக ஜீவ சுதந்தரத்தை ஆண்டவரிடத்தில் அர்ப்பணித்து ஆண்டவர் அனுபவத்தை பெற முயலுவதே சுத்த சாதகம்.

எந்த பயிற்சியிலும் உழைப்பில்லாமல், துன்பம் இல்லாமல் முன்னேற முடியுமா என்ற சந்தேகம் யாருக்கும் எழுந்தே தீரும். இந்த சந்தேகத்தை வற்புறுத்துவதைப் போன்ற பழமொழிகளும் பல உண்டு. அவற்றுள் ஒன்று பாடும் இல்லை பயனும் இல்லை. (Nogain without Pain) உழைக்கும் வழியே பிழைக்கும் வழி என்பது, உழைப்பதிலும் இன்பம் உண்டு என்பது பலருக்கு தெரியாது.

பூர்வ ஞானம் உத்தர ஞானம்

பலருடைய துன்பத்தை பொருட்படுத்தாமல் பணம் தேடுவது, அன்பற்ற வறண்ட முயற்சியாகும். அதில் துன்பம் இல்லாமல் இருக்க முடியாது. பிறருக்காக தான் முன்னின்று அவர்களுக்கு இன்பம் உண்டாக்க வேண்டும் என்று முயற்சி செய்பவர்களுக்கு துன்பம் குறைந்துவிடுகிறது. "துன்புளது எனின் அன்றோ சுகம் உளது" என்பர் கம்பர் ஆனால் அது பூர்வ ஞானமே, பழைய கோட்பாடே.

ஒரு தாய் தன் பிள்ளைக்காக தன்னையே அர்ப்பணம் பண்ணுகிறபோது தாய்க்கு எந்தவித துன்பமும் உண்டாவதில்லை. உண்டானாலும் அத்துன்பத்தை தாய் துன்பமாக எண்ணுவதில்லை. குடும்ப வாழ்வில் மட்டுமல்லாமல் வீர வாழ்க்கையிலும் இதுதான் உண்மை.

"இன்னாமை இன்பம் எனக்கொளின், ஆகும் தன்ஒன்னார் விழையும் சிறப்பு" என்கிறது திருக்குறள் துன்பத்தையும் இன்பமாக மாற்றும் ஒரு வீரனைப்பார்த்து பகைவனும் மனம் மாறி நண்பனுவான் என்பதே அதன் கருத்து.

Koviloor Digital Library

வள்ளற்பெருமான் கருத்துப்படி இது உத்தர ஞானம் புதிய மெய்யுணர்வு ஆகும். இந்த உண்மையை எல்லோரும் புரிந்து கொண்டு செயல்பட பண்பட வேண்டும் என்று சொல்லி ஒதுங்கி விடக்கூடாது. ஒதுக்கி விடுவதும் சுத்தசன் மார்க்கமல்ல. மனித குலம் புனித குலமாக மாற புதிய மெய் யுணர்வு வேண்டும். ''எல்லா உயிர்களும் இன்புற்றுவாழ்க'' என்பது சுத்த சன்மார்க்க பிரார்த்தனை. சுத்த சாதகப் பயிற்சி மிக எளிமையானது இனிமையானது என்பதை கீழ்க்கண்ட பாடல் விளக்குகிறது.

பெருமான் கேட்ட கேள்வி

நோவாது நோன்பு எனைப்போல் நோற்றவரும் எஞ்ஞான்றும்
சாவாவரம் எனைப்போல் சார்ந்தவரும்—தேவாநின்
பேரருள் என்போல் பெற்றவரும் எவ்வுலகில்
யார் உளர் நீ சற்றே அறை

5624 பாடல். இராமலிங்க பணிமன்ற வெளியீடு

சுத்த சாதகப்பயிற்சியில் பெருமான் ஈடுபட்டு வெற்றி பெற்றுள்ளார். அது அவருக்கு எளிமையாகவே இருந்தது துன்பமே ஏற்படவில்லை இன்பந்தான்படிப்படியாக வளர்ந்தது இந்த சாதகத்தைத்தான் சுத்த சன்மார்க்க தியானம் என்றும், தவம் என்றும் நோவாத நோன்பு என்றும் குறிப்பிடுவது. இதன் விளைவாக அவர் பெற்ற பெருவாழ்வை 'சாவாவரம்' என்கிறார். இந்த பெரும் 'பேற்றினை பெருமான் பெறுவதற்கு இறைவன் வரம்பற்ற பேரருளை வழங்கியதும் இப்பாடல் மூலம் உணர்கிறோம்.

இப்பாடலில் பெருமான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரி டத்தில் ஒரு வேண்டுகோளை விடுகிறார்- அது தன்னைப்போல பெருவாழ்வைப் பெற்றவர் இன்னொருவர் எங்கிருக்கிறார்? அவரை அன்புகூர்ந்து தெரிவியுங்கள் நான்போய் அவருடன் கலந்து உரையாட வேண்டும் என்பது அந்த கேள்வியாகும். 1. நோவாத நோன்பு, 2. சாவாவரம் 3. பேரருள் என்ற மூன்று தகுதிகளில் எதுவும் குறைவற்றவராக அவர் இருக்க வேண்டும் என்பது பெருமான் விருப்பம்.

Koviloor Digital Library

இந்தக் கேள்விக்குரிய பதிலை திருவருட்பெருஞ்ஜோதி அகவலில் காணலாம். அது தான் "எல்லாம் வல்லசித்து எனக்கு அளித்து, எனக்கு உனை அலாது இலை எனும் அருட்பெருஞ்ஜோதி" இந்த பாடலில் பெருமான் கேட்ட கேள்விக்கு எனக்கு உன்னைத்தவிர வேறுயாருமில்லை என்று பதில் சொன்னது மட்டுமல்லாமல், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் "எல்லாம் வல்ல சித்தும்" பெருமானுக்கு வழங்கியிருக்கிறார். அதனால் நமக்கும் பெருவாழ்வு பயிற்சியில் எளிய இனிய வழியை காட்ட வல்லவர் வள்ளற் பெருமான் என்று நாம் உறுதியாக சத்தியமாக நம்பலாம்.

இவ்வுலகிற்கு வள்ளற்பெருமான் ஏன் வருவிக்க வுற்றார்? இவ்வுலகில் என்ன பணிபுரிய வேண்டும் என்று இறைவன் கட்டளையிட்டுள்ளார்? என்பதை திருவருட்பாவில் பல இடங்களில் காணலாம். இவ்வுலகில் மனிதப்பிறவிப் பெற்ற அனைவரும் பெருவாழ்வு பயிற்சியை எளிதாகவும் இனிமையாகவும் பெறவேண்டும் என்பதாகும் இப் பயிற்சியினை மக்கள் தெளிவாக புரிந்து பக்குவர்களாக மாற்றும் பணியினை பெருமானுக்கு ஆண்டவர் பணித்திருக்கிறார் இறைவன் இட்ட கட்டளையை ஏற்று பொறுப்புடன் நிறை வேற்றி வெற்றியும் பெற்று வருகிறார் என்பதை கீழ்க்கண்ட பாடல்கள் மூலம் பெருமானே உணர்த்துகிறார்.

'அகத்தே கருத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனை வரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைபெற்று மகிழ்ந்திடுதற்கென்றே எனை இந்த
உகத்தே இறைவன் வருவிக்கயுற்றேன் அருளைப்பெற்றேனே'
(5485 இ.ப.ப)

தான் எளிதாக பெருவாழ்வு பெற்றபடி மற்றவரும் பெற லாம் என்பது பெருமானின் உறுதியான நம்பிக்கை அதற்கு என்ன காரணம்? வள்ளற்பெருமான் தன் தேக, போக, ஜீவ சுதந்தரம் இறைவனால் அளிக்கப்பட்டன என்பதினை உணர்ந்து

Koviloor Digital Library

சர்வ சுதந்திரத்தை இறைவனிடம் அர்ப்பணிக்கிறார் இதனால் இறைவன் தன்னை வள்ளலாருக்கு வழங்கி யிருக்கிறார்.

இறை வடிவம் பெற்ற பெருமான் இறைவன் இட்ட கட்டளைப்படி நமக்கெல்லாம் பெருவாழ்வு வழங்கும் பணியில் தொடர்ந்து இன்றும் ஈடுபட்டிருக்கிறார்

இருவகை வித்தைகள்

''நோவாது நோன்பு'' என்ற பாடலில் மூன்று செய்தி கள் உள்ளன. 1. நோவாத நோன்பு, 2. சாவாவரம், 3. பேரருள். சாவாவரம் எனும் பெருவாழ்வு அடைவதற் குரிய முயற்சி மிக எளிமையாகவும் மிக இன்பமாகவும் இருப் பதற்குரிய கலைகள் பல இருக்கின்றன. இதனைத்தான் ''சுகமே வஞ்சுற மெய்ப் பொருள்மேனிலை தனிலே விஞ்ஞை கள் பல உள'' என்கிறார்.

விஞ்சை எனும் வித்தைகளை இரண்டு வகைகளாகப் பிரிப்பர். முதல் வித்தை சாதாரண வித்தைகளாகும். இவை உலக அனுபவத்திற்கு, உயிர் அனுபவத்திற்கு மட்டுமே பயன்படும் மற்றது மேல்நிலையிலுள்ள வித்தகங்கள். இவை அருள் அனுபவத்தையும், இறை அனுபவத்தையும் பெற்று தர வல்லவையாகும். இத்தகைய வித்தகங்களையும் இவற்றால் சாவாவரம் பெற்ற வித்தர்களைப் பற்றியும் நெஞ்சறிவுறுத்த லில் விளக்கமாக பெருமான் கூறியுள்ளார்.

ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்ஜோதி என்
உளத்தே
நீதியில் கலந்து நிறைந்தது நானும் நித்தியன் ஆயினேன்
உலகீர்
சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே சத்தியச் சுத்த
சன்மார்க்க
வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை விளம்பினேன்
வம்மினோ விரைந்து
பாடல் 5453 (இ. ப. ம.

Koviloor Digital Library

இந்தப் பாடலை பார்க்கும்போது மரணமிலா பெருவாழ்வு நாம் பெறுவதற்கு உரிய பயிற்சி முழுவதற்கும் வேண்டிய பொறுப்பை • வள்ளலாரே ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்று தெளிவாக தெரிகிறது. இதை "சத்திய சுத்த சன்மார்க்க வீதியில் உமைந்தான் நிறுவுவல் (நிலைபெற செய்வேன்) உண்மை விளம்பினேன் வம்மினோ விரைந்து" என்று நம்மை அழைக்கிறார்.

இனி காலம் சிறிதும் வீண்போக்காமல் நம் பெருமான் திருவாக்கையே முழுமையாக நம்பி நாம் இந்த முயற்சியில் ஈடுபட வேண்டும். இதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன? அப்படி செய்தால் நாம் அடையக்கூடிய பயன் என்ன? என்பதையும் மேலே குறித்த பாடலில் பெருமானே விளக்கியிருக்கிறார்.

நாம் இதுவரையிலும் சாதி, மதம், சமயம் முதலியவற்றை நம்பி உயிர்களுக்குள்ளே வேறுபாடும், பகையும் பிணியும் பெருகச் செய்து இருக்கிறோம் அதைவிட்டு விட்டால் போதும். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தம்மையே நமக்கு வழங்குவார். சாதி, மதம் முதலிய குறுகிய வாழ்க்கையிலிருந்து திரும்பி "எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க" என்று பெருவாழ்வு பெற உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். வாருங்கள் விரைவாக சத்திய சுத்த சன்மார்க்கத்தை சாருங்கள் என அழைக்கிறார். உங்களுக்கு வழிகாட்ட உற்ற துணையாயிருப்பேன் என்கிறார்.

சிவமாதல்

வள்ளலார் நானே இருந்து சன்மார்க்கம் நடத்துகின்றேன் என்பதன் அர்த்தம் என்ன? சுத்த சாதக சிறப்பு பயிற்சியை அன்பர்களுக்கு தானே உணர்த்தி உயர்த்துகிறார். என்பதாகும். சுத்த தேகத்தின் அடிப்படை என்ன? சகலர், பிரளயகலர், விஞ்ஞானகலர், சுத்தர் என்பது. மயக்கம், கன்மம் ஆணவம் ஆகிய மூன்று மறைப்புகள் (மலங்கள்) உடையவர் சகலர். இவர்கள் பொதுமக்கள். மயக்கம்

Koviloor Digital Library

போனால் (புரட்சியாளர்) பிரளாயகலர். மயக்கமும் கன்மமும் போனால் விஞ்ஞான கலர். ஆணவம் அழிந்தால் சுத்தர் அல்லது புனிதர் இதுவே தயாவண்ணமாதல், சிவமாதல் என்பதாகும்,

புனித குலம் பெறல்

பெருமானுடைய வாக்குகளை நாம் முழு உண்மையென நம்பி, பெருவாழ்விற்கான பயிற்சியை விரும்பி பெருமானை அணுகவேண்டும் அவ்வணுகும் முறைகளில் ஒன்று பெருமான் திருவாக்கை ஓதி உணர்ந்து பிறருக்கு உரைப்பதோடு நாமும் நம் வாழ்க்கையில் மேற்கொள்ள முயலவேண்டும் ''புனித குலம் பெறல்'' என்ற பதிகத்தின் ஒவ்வொரு பாடல் தொடக்கத்தில் பெருமான் கொள்கையும் முடிவில்பெரு வாழ்வு பயிற்சி முறையும் அமைந்திருக்கும். இது புனித குலம் மாமனித குலமாக மாறுவது எப்படி என்பதை விளக்குகின்றன.

நமக்கு ஏற்படும் வாழ்க்கை நிகழ்ச்சி அருட்பெருஞ்ஜோதி யினுல் இயங்குகிறது என்பது உண்மை. ஆகவேஅருட்பெருஞ் ஜோதி ஆண்டவரை இடையருது எண்ணி மகாமந்திரத்தை மனமாற ஓதுவதற்கு பழகவேண்டும். அதனால் நம் உள்ஒளி (அருட்பெருஞ்ஜோதி) ஓங்கும். உயிரொளி விளங்கும் மனம் கரைந்து விளக்கம்பெறும், சுத்த தேகமாகும். இறுகிய உள்ளம் இளகும். நெகிழ்ச்சியே நிகழ்ச்சியாகிறது இளகுவதுதான் பிரணவ தேகத்தின் தொடக்கமாகிறது. இதுவே செத்தாரை எழுப்புவது. இதனை பெருமான் எழுவார் மேடை என்கிறுர். பெருவாழ்வை நோக்கி செல்லும் முயற்சியில் ஏற்படும் தடைகளை பெருமான் மாமனிதர்களை அனுப்பி நீக்கிவிடுகிறுர். இது சன்மார்க்க அன்பர் பலரின் அனுபவ உண்மையாகும்.

பூர்வ ஞானம் உத்தர ஞானம் ஆவது எப்படி?

பழைய பூர்வ ஞானத்திலேயே புரண்டு கொண்டு புதிய உத்தர ஞானத்தை பெறுவதற்கு அஞ்சுபவர்கள் ஆதியிலே

Koviloor Digital Library

அபிமானித்து அலைகின்றவர்கள். உலகியல் கவர்ச்சியிலே கவனம் செலுத்தி உலக அநுபவமே முடிந்த முடிவு என்பவர் பூர்வ ஞானிகளே. இவர்கள் தம்மையே மறந்து அறியாமையில் மூழ்குகின்றனர். மனிதத்தன்மையை மறந்து மாக்கள் என்கிற விலங்கு வாழ்க்கையில் இறங்குகின்றவர். விலங்குகளுக்கு தலைமை ஏற்கின்றவர்கள் பூர்வஞானிகளே.

பெறுதற்கரிய மனித பிறப்பைப் பெற்ற இவர்கள் மாமனித வாழ்வைப் புரியாது அலைகின்றனர். மருளிலே மாயையிலே ஆழ்கின்றனர். இந்த பூர்வ ஞானிகளை அருள் நாட்டம் கொள்ள செய்ய வேண்டும். இதையே ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை என்கிறார் பெருமான் தயவுதான் என்னை ஏறுநிலை மிசை ஏற்றியுள்ளது. உயிர்களிடம் அன்பு செலுத்த உயிர் நலப்பணிபுரிய விரைந்துவாருங்கள் என்கிறார். இதைத் தான் சன்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் என்கிறார். இந்த முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு மாமனிதர்களின் உதவி தவறாது கிடைக்கிறது. நம்மிடம் பெருமானுக்கு இருக்கிற ஈடுபட்டில் கோடியில் ஒரு பங்கு ஈடுபாடு நமக்கு பெருமானிடம் ஏற்பட்டால் போதும்.

சன்மார்க்க சாதகத்தில் நடை ஏற்படும் போதெல்லாம் மாமனிதர் என்கிற சத்தியர்கள் சத்தர்கள் உறுப்புகளாகிய சத்துகள் சத்திகள் உதவி செய்ய வருகின்றனர் சத்தியர் என்பது வேறு சத்திகள் என்பது வேறு நம் உடம்பில சிறப்பாக விளங்கும் சிரசில் இருக்கும் சுரப்பிகளை சத்திகள் எனலாம். இவற்றை வல்லப சத்திகள் என்கிறார் பெருமான். மாமனித நிலைக்கு உயர்ந்து அகத்தும் புறத்தும் விளங்குபவர்களை சத்தர்கள் என்றும் சத்தியாளர் என்றும் வழங்குகிறார். உயர்ந்த நிலையிலுள்ள வல்லப சத்திகள் மருவியிட புரிந்தார் என அருள்விளக்க மாலையில் குறிப்பிடுகிறார்.

அருள் அம்பலப்பற்றே பற்றுக

சுவர் இருந்தால் தான் சித்திரம் எழுத முடியும் என்பதற்கிணங்க முதலில் நம்முடைய சுயநலத்தில் பற்றுகொண்டு

Koviloor Digital Library

நமக்கு துணையான குடும்பத்தைப் பற்றியும் கவலைக்கொண்டு உலகியல் பற்றிலேயே உலக அனுபவத்திலேயே காலத்தை கழித்து விடுகிறோம். உலக அனுபவத்திற்குமேல் உயிர் அனுபவம் அருள் அனுபவம் சில உள்ளன என்பதை மறந்து விடுகிறோம். அதிலும்பற்று வைக்க வேண்டும் என பெருமான் குறிப்பிடுகிறார் ''பற்றிய பற்றனைத்தையும் பற்றற விட்டு அருள் அம்பலப்பற்றே பற்றுமினோ என்றும் இறவீரே என்கிறார் மேலும்மறப்பற்ற நெஞ்சிடை''என்றபாடலில் பற்றுகள் 4 வகைப்படும் என்கிறார் 1. அகநிலைப்பற்று 2 அகப்புலைப் பற்று 3 புறநிலைப்பற்று .4 புறபுலைப்பற்று 1.இறைவன் திருவடியை இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருப்பது தான் அகநிலைப்பற்று 2. ஆணவம் மருள், சிற்றின்ப உணர்வு போன்றவைகள் அகபுலைப்பற்றாகும் 3 உயிர் நலப்பணி புரிவது புறநிலைப்பற்றாகும் 4.புலால் உண்ணல் சோம்பி புகழில் வீண் காலம் போக்கல் உலகிவ் மயக்கில் மயங்கல் புறபுலைப்பற்று என்கிறார்.

உடல், உள்ளம், உயிர் விளக்கங்கள் என்றால் என்ன?

நம் உடற்பசியை தவிர்க்க உணவு உண்டு. உடலை பேணி காக்கிறோம். அதன் மூலம் உயிரும் நிலைப்பெறுகிறது. ஒளிபோல் வளர்கிறது. விளக்கம் பெறவில்லை ஜீவ காருண்ய ஒழுக்கத்தின் அடிப்படையில் அன்னதானத்தின் மூலம் நம் உடல் விளக்கம் பெறுகிறது

அடுத்தது சத்தியதானம். உண்மை நெறி ஒழுக்கத்தில் நின்று மெய்ப் பொருளின் உண்மை உணர்ந்து நினைந்து, உண்மையே பேசி சத்தியவாழ்வாகிய உயிர்நலப்பணி செய்தலே சத்தியதானம் இதனால் நம் உள்ளம் விளக்கம் பெறும்.

நாம் உய்யும் பொருட்டு நமக்கு தேக, போக, ஜீவ சுதந்தரம் ஆண்டவரால் அளிக்கப்பட்டது. இதனை சன்மார்க்க சாதுக்கள் மூலம் உணர்ந்த நாம் யான், எனது என்கிற சர்வ

Koviloor Digital Library

சுதந்தரத்தை ஆண்டவருக்கு தானம் செய்வதின் மூலம், அர்ப்பணிப்பதன் மூலம் உயிர் விளக்கம் ஏற்படுகிறது. ஆண்டவர் அருள் வல்லபத்தால் மரணமிலா பேரின்ப பெரு வாழ்வு கிட்டுகிறது.

ஆண்டவரிட்ட மூன்று கட்டளைகள்

அஞ்சலை நீ ஒரு சிறிதும் என் மகனே அருட்பெருஞ்ஜோதியை
அளித்தனம் உனக்கே
துஞ்சிய மாந்தரை எழுப்புக நலமே சூழ்ந்த சன்மார்க்கத்தில்
செலுத்துக சுகமே
விஞ்சுற மெய்ப்பொருள் மேனிலை தனிலே விஞ்சைகள் பல
உள விளக்குக என்றாய்
தஞ்சம் என்றவர்க்கு அருள் சத்திய முதலே தனி நடராச என்
(பாடல் 3699) சற்குருமணியே

நாம் உய்யும் பொருட்டு ஆண்டவரால் அளிக்கப்பட்டது தேக போக ஜீவ சுதந்தரம் இதனால் நமக்கு துன்பமே ஏற்படுகிறது என்று ஆண்டவரிடம் திருப்பி தந்து விடுவதே திஞ்சம் என்பதாகும் நம்முடைய ஆணவம் இதனால் அழிகிறது. உடனே ஆண்டவர் அருட்பெருஞ்ஜோதியை அளிப்பார். இதனால் இன்பமே பெருகும். பெற்றதும் மூன்று செயல்களை செய்யவேண்டும் என்று கட்டளையிடுகிறார். ஒன்று துஞ்சிய மாந்தரை எழுப்புக என்பது. கடின சித்தர்களாகிய நடைப்பிணங்களை (செத்தவர்) திருத்தி இரக்க உணர்ச்சியை மேலோங்க செய்வது. 2. வது நலமே சூழ்ந்த சன்மார்க்கத்தில் செலுத்துக என்பது சுத்த சன்மார்க்கத்தில் நன்மை தவிர தீமை ஒரு சிறிதும் உண்டாகாது. உள்ஒன்றும் புறம் வேறொன்றுமாகக் கொண்டு நடத்தையில் வேறு படாமல் ஒத்ததை அறிந்து உயிர்வாழச் செய்வது ஆகும்.

''சுகமே விஞ்சுற மெய்ப்பொருள் மேனிலை தனிலே விஞ்சைகள் பல உள விளக்குக'' இது மூன்றாவது செயல் சன்மார்க்க சங்கத்தில் சேர்ந்தவுடனே சுத்த சன்மாக்கிகளின் உதவி

Koviloor Digital Library

யாலும், மாமனிதர்களின் துணையாலும் பெருவாழ்விற்குரிய கலைகளை, சாசாக்கலைகளை எல்லாம் கற்று கொள்ள முடிகிறது. உருவ நிலையை அருவ நிலையாக மாற்றவும் அருவ நிலையை உருவ நிலையாக மாற்றவும் தெரிந்து கொள்ளும் கலையாகும். இதனால் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை.

இன்பத்தை பெருக்கும் வித்தைகள் கற்கவும் வேண்டும், கற்பிக்கவும் வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இங்கேஉண்மை யான கல்வியில் இருக்கிற ஒரு நுட்பத்தையும் புரிந்துகொள்ள செய்திருக்கிறார், Learning through teaching அதுதான் எதை யும் கற்பிக்கும் முறையிலேயே கற்றுக்கொள்வது. நாமே கற்றுக் கொள்ள வேண்டும் என்ற சுயநலம் இல்லாமல் பிறருக்கு கற்பிக்கும் போது அவர் எளிதாக புரிந்து கொள்ள வும், இன்பமாக தொடர்ந்து கற்கவும் செய்யவேண்டும். இந்த முயற்சியில் நாம் ஈடுபடும் போது நமக்கு பெருவாழ்வு பயிற்சி இன்பமாகவும், எளிதாகவும் அமைகிறது. இதைத் தான் 'நோவது நோற்கும் நோன்பு' என்கிறார்.

தொகுத்தறிவு :- இந்த இடத்தில் ''ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தம் பிள்ளை தாமே வளரும்'' என்ற பழமொழியின் உண்மையானப் பொருளையும் புரிந்துகொள்ள வும் முடிகிறது. வெறும் பகுத்தறிவே துணையாகக் கொண் டால் மாமனிதரின் துணையை சிறிதும் பெற முடியாமல் போகிறது. இந்த உண்மையை உணர்ந்தவர்களிடத்தில் தொகுத்தறிவு மேலோங்கும் நாமே எல்லாவற்றையும் அறிந்து செய்கிறோம். நமக்கு வேறுயாரும் எந்த வகையிலும் உதவியே செய்வதில்லை என்ற ஆணவப் பிசாசும் இவர்களிட மிருந்து ஓடி மறைந்து விடுகிறது.

இன்று உலகின் பல இடங்களில் மாமனிதரின் துணையை நாடவேண்டும் என்று உணர தொடங்கியிருக்கிறார்கள். சமய புரட்சியே சன்மார்க்க வளர்ச்சியாக மாறி விடுகிறது இப்போது தொகுத்தறிவுஇயக்கம் தலை எடுக்கிறது.

Koviloor Digital Library

தமிழ்நாட்டில் பிறந்த சச்சிதானந்த அடிகள் அமெரிக்காவில் சன்மார்க்க கொள்கைகளைபரப்பி வருகிறார். சோவியத் நாட்டில் கூட அவரை பல தரம் அழைத்திருக்கிறார்கள். அவரைக் கொண்டு சமயத்திலுள்ள இரண்டு பகுதிகளையும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவை பூர்வஞானப்பகுதி, உத்தர ஞானப்பகுதிஎன இருவகைப்படும். சமயச்சடங்குகளையும், புராணக் கருத்துக்களையும் தெரிவிப்பது பூர்வ ஞான பகுதியாகும். உத்தர ஞானபகுதி என்பது சமயச்சடங்குகளை கடந்து, சமரச நிலையை அடைந்த சுத்த சன்மார்க்கிகளாக விளங்குவது.

சோவியத் நாட்டில் எல்லா சமயங்களுக்கும் இடம் தரப்பட்டிருக்கிறது. அப்படி செய்ததால் வெறும் போலி சமய வாழ்க்கை முன்போல் பரவி வருகிறது என்று எண்ணி விடக்கூடாது விஞ்ஞான அடிப்படையில் பகுத்தறிவு என்றும் மெய்ஞ்ஞான அடிப்படையில் தெய்வ நம்பிக்கை என்றும் குறுகியசாலையில் செல்லாமல் இரண்டையும் சேர்த்த தொகுத்தறிவு என்ற சுத்த சன்மார்க்க சாலையில் நடக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது

இதைத் தான் பெருமான் ''சாதியும் மதமும் சமயமும் தவிர்த்த சத்திய சுத்த சன்மார்க்க வீதி'' என்கிறார். இதை விளக்குவதற்காகவே அவரால் நிறுவப்பட்ட நான்கு நிறுவனங்களில் ஒன்று விளங்குகிறது. அது தான் சத்திய தரும சர்வ கலாசாலையாகும். சத்தியத்தை தருமம் செய்கிற சர்வ காலாசாலையாகும். சத்தியத்தை தருமம் செய்வது என்றால் என்ன? கஞ்சி குடிப்பதற்கும் வழி இல்லாதவர்களுக்கு கஞ்சி ஊற்றுவது, அன்னதானம் செய்வது முழு தருமம் அல்ல. அவர்களின் வறுமைக்குரிய காரணத்தையும் விளங்க செய்வது தான் சத்திய தருமம். அதுபோலவே நோயாளிகளுக்கு மருந்தை கொடுப்பது மட்டும் போதாது. அவர்களின் நோய்க்குரிய காரணத்தை அவர்களுக்குதெரிவிக்கவேண்டும். இவ்வாறு தான் சத்திய தருமம் நடைபெற வேண்டும் என்று

Koviloor Digital Library

வள்ளலார் எண்ணுகிறார். தருமச்சாலையின் ஏழுபிரிவுகளி லிருந்து புரிந்துக் கொள்ளலாம் இந்த உன்னதமான இன்றைய உலக சர்வ கலாசாலையில் இல்லாத ஒரு அற்புத மான் அமைப்பு அதில் காணப்படுகிறது. தருமச்சாலையின் ஏழு பிரிவுகளின் திருப்பணி என்ன? ஒன்று சாத்திரச்சாலை அது விஞ்ஞான உண்மைகளை விளக்குவது 2 வது எல்லா வகைப் பிணிகளை நீக்கும் மருத்துவச் சாலை 3 வது வழிபாடு செய்வ தற்[illegible] 4 வ[illegible] சாலை எ[illegible] பிர[illegible] த்தை வளர்க்கும் வித்தக சாலை 5 வது உபகாரச் சாலை பசிதீர்த்தல் முதலிய ஏழுபணிகளைக் கொண்ட ஜீவ காருண்ய ஒழுக்கத்தை குறிக்கும். மனிதர்களுக்குமட்டும் செய் கிற உபகாரம் முழு பணியாகாது- 6 வது விருத்திச்சாலை கிடைத்ததை மட்டும் வைத்துக் கொண்டு வீண்காலம் போக்கு வதால் வளர்ச்சி சிறிதும் இராது. புதிது புதிதாக தோன்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை குறிப்பிடுகிறது. 7 வது விவகாரச் சாலை இந்த ஆறு துறைகளிலும் பணிபுரியும் அனைவரும் ஒத்து பணிப்புரிவதற்காக உருவானது.

இத்தகைய சர்வ கலாசாலையின் நோக்கத்தையும், அமைப்பையும் உலகத்தில் வேறு எங்கும் காணமுடியவில்லை. அதனால் உலகத்தின் மத்திய சர்வ கலாசாலையே வடலூரில் தான் நம்பெருமானால் நிறுவப்பட்டிருக்கிறது. 'இதை நாம் நன்கு உணர்ந்து கொள்வது, உலகுக்கு உணர்த்துவது இடமே பெறுக்குப் பேரின்பச் செயலாகும்.

நம் நிலைத்த வாழ்விற்கு உதவுபவர் மாமனிதர்களே

"ககன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைவிப்பர்" என்பது குற்றால குறவஞ்சி வானவெளியில் சென்று கொண் டிப்பவர்கள் ககனசித்தர்கள். இவர்கள் அடிக்கடி பெருமானைப் போன்ற பெரியவர்களை சந்திப்பார்கள். பெரியவர்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்ற தொண்டு செய்பவர்கள் அருளியலி யலில் ஏற்படும் சந்தேகங்களை கேட்டு விளக்கம் தெரிந்து

Koviloor Digital Library

கொள்ள வானவெளியில் உலவுபவர்கள் காயசித்திக்குரிய (நித்திய வாழ்விற்குரிய) இரகசியங்களை தெரிந்துக் கொண்டு அதற்குரிய பயிற்சி பெற உலாவுபவர்கள்.

உலக வாழ்க்கையில் உயிர்களுக்குறும் இடையூற்றை நீக்கி இன்பம் தர பெருமான் மாமனிதர்களுக்கு கட்டளை யிடுவார். இந்த ககன சித்தர்களே சாதாரண மக்களை அசாதாரண மக்களாக மாற்றவும் செய்பவர்கள். தேவர்களை கூட இத்தகைய பணிகளில் பெருமான் ஈடுபடுத்துகிறார்.

ஒரு சமயம் பெருமான் ஒரு அன்பர் வீட்டுமாடியில் அமர்ந்திருந்தார். வான்வழியாக சென்றுக் கொண்டிருந்த ஒரு சித்தர் பெருமானைக்காண வந்தார். தான் கொண்டுவந்த இனிப்பை பெருமானிடம் தந்து விட்டு பல சந்தேகங்களை தீர்த்துக்கொண்டு சென்று விட்டார். அவ்வீட்டன்பர் மேலே வந்த போது இனிப்பு கொண்டு வந்திருந்த இலை அங்கிருந்த தைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தார். இதனை உணர்ந்த பெருமான் அவரிடம் இப்பொழுது ஒருசித்தர் வந்தார். அவர் கொண்டுவந்த இனிப்பு மடித்த இலை இதுஎன்றார் இந்நேரம் அவர் காசி நகரை கடந்திருப்பார் என்றார்.

"அந்தரத்தில் உலாவலாம்; விண்ணவரை ஏவல்கொள்ள ளலாம். கட்செவி (பாம்பு) எடுத்து ஆட்டலாம். கரடி வெம்புலி வாயையும் கட்டலாம் என்கிறார் தாயுமானவர். இதற்கு உதாரணமாக பெருமான் பிரசங்கத்தை கேட்க ஓர் இரவு ஒருவர் வந்து கொண்டிருந்தார். அப்போது ஒரு பாம்பு சீறிக் கொண்டு வந்ததைக்கண்டு பயந்தார். இராமலிங்கம் என்ற தும் அந்த இடத்தை விட்டு அகலாமல் நின்று விட்டது. இது அந்த அன்பருக்கே தெரியாது ஒருமைல் தூரத்திற்கு அப்பால் பிரசங்கம் செய்து கொண்டிருத்த பெருமானுக்கு இவ்விஷயம் தெரிந்தது. பிரசங்கம் முடிந்ததும் அந்த அன்பரை அழைத்து பாம்பு பாட்டிலியாய் கிடக்கிறது. அதை போக விட உத்திர விடு என்றார். அந்த இடம் சென்று பார்த்த போது தான் பாம்பு நகராமல் இருந்தது தெரிந்தது இராமலிங்கம் போ என்றதும் பாம்பு நகர்ந்து போய் விட்டது.

Koviloor Digital Library

உருவம் அருவ மாதலும் அருவம் உருவ மாதலும்

ஒரு பெண்மணி ஒரு புகை வண்டியின் பெட்டி ஒன்றில் தனிமையாக பிரயாணம் செய்து கொண்டிருந்தார். ஒரு கொடியவன் திடீரென பெட்டியினுள்ளே புகுந்தான். அப் பெண்மணி அவனைக் கண்டு திடுக்கிட்டார். கண்சிமிட்டும் நேரத்தில் ஊர்க்காவலர் உடையுடன் ஒரு பெரியவர் உள்ளே வந்து அமர்ந்தார். அக்கொடியவனை முறைத்துப் பார்த்தார். அடுத்த ஸ்டேசன் நெருங்கியதும் அக்கொடியவன் பயந்து கதவைத் திறந்து வெளியே குதித்து விட்டான். இவ்வாறு தன்னைக் காப்பாற்றிய பெரியவருக்கு நன்றி சொல்ல அப் பெண்மணி எழுந்து வந்தார். அதற்குள் அப்பெரியவர் மறைந்து விட்டார். அருவ நிலையிலிருந்த மாமனிதர் உருவ நிலைக்கு வந்து உயிர்நலப்பணி செய்த பிறகு அருவ நிலையாக மாறி மறைந்து விடுவர்.

அதே பெண்மணி ஒரு தடவை கொலை நடந்து கொண் டிருந்த தெரு மீது செல்ல வேண்டியிருந்தது. உடனே அப் பெண்மணியும் அறியாமல் அவர் தூல உடம்பு சூட்சும உடம் பாக அருவ நிலையாக மாறியது. அடுத்த தெருவில் அந்த பெண்மணி தன்னுடைய சொந்த தூல உருவத்தோடு நின்று கொண்டிருந்தார. இதைப் பார்த்து பலரும் வியந்தனர். மனித குலத்தில் உள்ளவர்களுக்கு மாமனித குலத்தினர் புரிந்து வரும் புனிதச் செயலாகும் இது.

சன்மார்க்க சங்கமும் — பிரம்ம ஞான சங்கமும்

இன்று உலகெங்கும் பரவியிருக்கும் தியாசபிகல் சொசைடி என்ற பிரம்ம ஞான சங்கம் வள்ளற்பெருமானால் தோற்றுவிக்கப்பட்டது. பெருமான் ஒளி உடம்பு பெறுவதற்கு முன் ருஷ்யாவிலுள்ள பிளாவட்ஸ்கி அம்மையாரைத் தூண்டி அமெரிக்காவிற்கு போகச் சொன்னார். அங்கு ஜெனரல் ஆல்காட் என்பவரோடு கலந்து ஆலோசித்து பிரம்ம ஞான சங்கத்தை உருவாகக் செய்தார். இதனுடைய மத்திய சங்கம் தமிழ்நாட்டில் அடையாற்றில் உள்ளது. சாதிமத சமயம்

Koviloor Digital Library

முதலியவற்றை கடந்து ஏறக்குறைய சுத்தசன்மார்க்க கொள்கையைப் பரப்புகிற சங்கம.

சுத்த சாதக பயிற்சியாளர்கள் இது போன்ற உயிர் நலப் பணிகளை பல அற்புத நிகழ்ச்சிகளாக நடத்தி வருகின்றனர், செயற்கரிய செய்வர் பெரியர்என்று வள்ளுவர் குறிப்பிடுவதும் இவர்களையே. இதனைத்தான் சுகமேவிஞ்சுற செய்யும்விஞ்சைகள் என்கிருர். எந்தவித உபாயத்திலாவது உயிர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை மாணாக்கை நீக்கவகுக்க மாமனிதர்கள் விழிப்போடிருக்கிருர்கள்.. சாவும் பிறப்பும் தவிர்க்கவல்ல வித்தைகளை செய்பவர்களே மெய்க்கண்டார் என்று நெஞ்சறிவுறுத்தலில் விளக்குகிருர் இம்மை, மறுமை, பேரின்பம் என்ற மூவகை இன்பங்களுக்கும் காரணமாயிருக்கிருர் மாமனிதர்

எல்லார்க்கும் துணையாகி இருக்க வைத்தாய்

உலகியல் துயரோடு போரிட முடியாது யார்க்கெடுத்து என் குறை இசைப்பேன்! யார் துணை என்பேன்? என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். நாயினும் கடையேன், ஈயினும் இழிந்தேன் என்ற நிலையில் எல்லாக்கும் கடையனுக இருந்த எனக்கு ஆண்டவா அருள்பாலித்தார் என்கிருர் பெருமான்.

என்மகனே ஒருசிறிதும் அஞ்சாதே உனக்கு அருட்பெருஞ் ஜோதியை அளித்திருக்கிறோம். இதைக் கொண்டு நீ செத்தாரை எழுப்புக சன்மார்க்கத்தில் அவர்களை ஈடுபடுத்துக. பெருவாழ்விற்குரிய சன்மார்க்க சாதகத்தை கற்று தருக. என்று என்னை பணித்திருக்கிருர் ஆண்டவர்

எல்லார்க்கும் கடையாகி இருந்தேனுக்கு அருள்புரிந்தே எல்லார்க்கும் துணையாகி இருக்க வைத்தாய் எம்பெருமான் எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ருய் இவ்வண்ணம் எல்லார்க்கும் செய்யாமை யாதுகுறித்து என வேண்டுகிருர் நமக்காக இதுவரை நாம் சகல சாதகத்தில் கேவல சாதகத்தில் பழகியுள்ள நாம் இனி சுத்த சாதகத்தில் பயிற்சி பெற முயன்ருல் பெருமான் நமக்கு துணையாயிருந்து நித்திய வாழ்வை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் நமக்கு அருள் பாலிக்க செய்வார் என்பது உறுதி.

Koviloor Digital Library

ஒளிநெறி இயக்கம் சுகநிலை

—வடலூர் முத்துஇராமலிங்கம்

''உலகு உயிர்த்திரள் எலாம் ஒளிநெறி பெற்றிட இலகும் ஐந்தொழிலையும் யான் செய தந்தனை'' என்பது திரு அகவல். இதன் பொருள் வள்ளலாரே ஒளிநெறி இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதாகும். இதனைத் தான் தாமே சன்மார்க்கம் நடத்துகின்றேன் என்கிறார் பெருமான், சன்மார்க்கம் என்ற சொற்றொடர்க்கு உண்மைநெறி என்பதுதான் பொருள். உண்மை நெறியின் நான்கு ஒழுக்கங்களையும், நான்கு பேறுகளையும் முறையாக அடைந்து வாழ்கின்றவர்கள்தான் சுத்தசன்மார்க்க சுக நிலையைப் பெறமுடியும்.

உலகு உயிர்களுக்கு எல்லாம் சுத்த சன்மார்க்க சுக நிலையைக் கொடுப்பதற்காகவே அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஐந்தொழில்களையும் பெருமான் செய்யும்படி அருளி இருக்கிறார் என்பது மேற்குறித்த பாடலின் பொருளாகும். இப்பாடலில் ஒளிநெறி சென்றிட என்று இல்லாமல் ஒளிநெறி பெற்றிட என்பது கவனிக்கத்தக்கது. ஒளியுள்ள வழியில் செல்வது என்று எண்ணி விடக்கூடாது. பெற்றிட என்று இருப்பதால் சுத்த சன்மார்க்க சுகநிலையை உலகு உயிர்கள் எல்லாம் பெறுவதற்கு என்றே என்னை ஐந்தொழில் புரியும்படி பணித்திருக்கிறார் என்று புரிந்து கொள்ளவேண்டும்.

திரு அகவலில் இறுதி பகுதியில் ''சுத்த சன்மார்க்கசுக நிலைபெறுக, உத்தமன் ஆகுக, ஓங்குக என்றனை என்று வருவதினை நன்கு கவனிக்கவேண்டும். உலக உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்களை தூர நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காமல் விரைந்துபோய் அத்துன்பங்களை போக்குகின்றவன் தான் சுத்த சன்மார்க்கி. சுத்த சன்மார்க்கம் என்பது சிறப்பு உண்மை நெறியைத்தான் குறிக்கிறது. உண்மைநெறி தனிஉண்மைநெறி, பொது உண்மைநெறி, சிறப்பு உண்மை நெறி என மூன்று வகைப்படும். இவற்றை முறையே கேவல

Koviloor Digital Library

சன்மார்க்கம், சகல சன்மார்க்கம், சுத்த சன்மார்க்கம் என்பர்.

கேவலம் என்ற சொல்லுக்கு இழிந்தது என்ற பொருள் இங்கு இல்லை. தனிப்பட்ட ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையில் தானே முன்னேறி மற்றவர்களுக்கும் பணி புரிய வேண்டும். தானே முன்னேறுவதற்கு தகுந்த தியான முறைவேண்டும். இங்கு வெறும் கண்மூடித்தனமான தியானத்தை குறிப்பிடவில்லை.

சுத்த சன்மார்க்க சுகநிலையை பெற வேண்டுமானால் ஒவ்வொருவரும் தான் செய்த தவறுகளை திரும்பிப்பார்த்து அவற்றை நீக்குவதற்கென்றே உயிர்ப்பணி செய்யவேண்டும். முன்செய்த தவறுகளுக்கு பதிலாக நன்மையே செய்ய வேண்டும். திருந்தும் என்உள்ளத் திருக்கோயிலே ஞான சித்திபுரம் என அறிந்தேன் என்பர் பெருமான். மேலும் ஈடு கட்டி வருவீரேல் இன்பம் மிக பெறலாம் என்கிறார் பெருமான் காடுவெட்டி நிலம் திருத்தி எனத்தொடங்கும் பாடலில் தீமையே செய்து தீமை அடைவதற்கு பதிலாக நன்மையே செய்து நன்மையை அடையக்கூடாதா என்ற கேள்வியை தகுந்த உதாரணங்களோடு அற்புதமாக விளங்க வைத்திருக்கிறார்

நிலத்தை திருத்தி பயிர் செய்வதற்குமுன் தகுந்த விதையை தேர்ந்து எடுத்துக் கொள்ளவேண்டும், கையில் கிடைத்ததை எல்லாம் விதைத்தால் நல்ல விளைவைத் தருகிற பயிர் எப்படி உருவாகும். நச்சு பூண்டுகள்தான் பெருகும். காடுவெட்டி நிலம் திருத்தி காட்டெருவும் போட்டு உலகத்தினர் நஞ்சு விளைவிக்கக்கூடியே பயிர்களையே வளரச் செய்கிறார்கள். அதனால் கலக்கம் அடைகிறார்கள். கஞ்சா, ஒப்பியம் முதலியவற்றை உண்டாக்கி மற்றவர்கள் அறிவை மயக்கி காசுதேடும் கயவர்கள் உலகத்தில் பெருகி வருகின்றனர்.

Koviloor Digital Library

இத்தகைய காசைத்தான் மாசு என்கிருர் இளங்கோ அடிகள்! காசு அறுவிரையே கரும்பேதேனே! என கண்ணகியை கோவலன் பாராட்டுகிருர் காசு அறுவிரையே என்பது குற்றமற்ற மணமே என்ற பொருளேத் தருகிறது. காசு குற்றம் என்ற பொருளில் இங்கு பயன்படுகிறது- காசு இல்லாததால் வருந்துகிற வறிஞர்கள் துன்பப்படுவதைவிட் வரம்பு கடந்து காசுக்களே சேர்ப்பவர்கள் மிகவும் துன்பப்படுகிருர்கள். காரணம் காசைப் பெருக்கவேண்டும், அதனுல் மாசு வந்தாலும் பரவாயில்லே என்று எண்ணுபவர்கள் சமூக விரோதிகள், சான்ருேரை மதியாதவர்கள்

வள்ளலார் கொள்கைக்கு முரணுனவன் தன்னே சன்மார்க்கி என்று சொல்லி கொள்கிருன், சன்மார்க்கிகளுக்கென சில பயிற்சிகளே கற்றுதரும் குருவாக தன்னே சொல்லிக் கொள்கிருன். பணத்தாசை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட இவன் வள்ளலாரை உண்மையாக நம்பி அவர் நெறியில் நடக்கும் சன்மார்க்கிகளே, ஒளிநெறி தோன்றல்களே தன்வயப்படுத்தி காசு சம்பாதிக்கிருன், மேலும் ஓரளவு வள்ளலாரிடம் பேரீடுபாடும், அழுத்தமான கொள்கையும் உடையவர்களேக்கூட தன்வயப்படுத்த முயல்கிருன், வள்ளலார் குருவை நம்பவில்லே அதனுல் கடையைக் கட்டிக் கொண்டார். ஆகவே என்னே குருவாக ஏற்று என்காலில் விழுந்து ஆசிப்பெற்றுக் கொள்ளுங்கள் என்கிருன். வள்ளலாரே என்மூலம் செயல்படுகிருர் என்று பிரச்சாரம் செய்கிருன். இத்தகைய இருள்நெறி வஞ்சகர்கள் இருளில் உலவக்கூடிய திருடர்கள் காரணம் அவர்கள் திருட்டு வேலேக்கு இருட்டே பயன்படுகிறது இத்தகைய மருள் நெறியாளர்களிடம் ஒளிநெறி அருட்தொண்டர்கள் மிகமிக விழிப்பாக இருக்கவேண்டும்.

ஒளிநெறி தொண்டர்களாகிய சன்மார்க்கிகள் தகுந்த அணுகுமுறையை மேற்கொண்டு தீயவர்களேயும் பஞ்சோபாயத்தால் வென்று, திருத்தி உயர்த்த முடியும். பஞ்சோபா

Koviloor Digital Library

யத்தைப்பற்றி வள்ளலார் விரிவாக பேசி இருக்கிருர். அவ்வை 1. நயமாக பேசி நல்லவர்களாக்குதல் 2. பொருளைக் கொடுத்து வசப்படுத்தல் 3. வேறுபாடுகாட்டி திருத்துதல் 4. வணங்கி வழிக்குகொண்டு வருதல் 5, இறைவரிடம் வழி பாடு செய்து திருத்துதல் என்பனவாகும். இவைகளே வள்ளலார் உயிர்களைத் திருத்துவதற்கு மேற்கொள்ளும் ஐந்து உபாயங்களாகும். இவற்றுள் உறுதியான வெற்றியும் பெற்று வருகிறேன் என்கிருர்.

முதல் நான்கு உபாயங்களைவிட ஐந்தாவது உபாயமே உயர்ந்தது. இந்த உலகம் கனவு காணுத பல அற்புதங்களை யும் பிரார்த்தனை நிறைவேற்றுகிறது என்பர். வடமொழி னர் கூறும் சதுர்வித உபாயமாகிய சாம, தான, பேத, தண்டம் என்பதற்கும் பெருமான்கூறும் பஞ்சோபாயத்திற்கும் வேறுபாடு உண்டு. தண்டித்தலை பெருமான் ஏற்று கொள்ள வில்லை. அதற்கு பதிலாகத்தான் தண்டனிட்டு சொல்லு வேன் என்று சொல்லுகிருர். அதற்கும் திருந்தாதவர்களை இறைவனை வேண்டி திருத்துவேன் என்கிருர்,'' வஞ்சகர் அஞ்சினர்; வாய்மூடிச் சென்றனர்; வந்து திரும்பவும் வாயி லில் நின்றனர்; தஞ்சம் எமக்கருள் சாமி நீ என்றனர்; சன்மார்க்க சங்கத்தவர்களே வென்றனர்'' என்று பெருமான் அனுபவித்து பாடுவது அவர் பெற்றுவரும் வெற்றியை தெரி விக்கும் பாடல்களாகும்.

இத்தகைய அற்புதமான பஞ்ச உபாய வெற்றியைத்தான் திருவள்ளுவர் போன்ற சான்ரேரும் விரும்பியிருக்கின்றனர். ஆனல் அனைவரும் வள்ளலாரைப் போல செயல்படவில்லை.'' நட்டார்க்கு நல்ல செயலில் விரைந்ததே ஒட்டாரை ஒட்டிக் கொளல்'' என்பது திருக்குறள். நம்மிடத்தில் அன்புடை யவர்களுக்கு நல்ல உதவிகள் பல செய்வதைவிட அன்பில் லாதவர்களிடம் அவர்கள் மனமும் கசியும்படி உதவிசெய்து அவர்களையும் சன்மார்க்கிகளாக்குவதுதான் மிக விரைவாக நாம் செய்யதக்கது. கசியாத உள்ளமும் கசிய கசிவித்து

Koviloor Digital Library

அசைவானது இல்லாமையான சன்மார்க்கமே'' என சன்மார்க்கத்திற்கு இலக்கணம் வகுக்கிறார் திருமூலர் பெருந்தகை.

ஒளிநெறி இயக்கத் தொண்டர்களின் முக்கியமான கடமை கடின சித்தமுடைய உள்ளங்களை அன்புள்ளமாக மாற்றுவதுதான். பகைவர்கள் என்றோ துன்மார்க்கிகள் என்றோ யாரையும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. அனைவரையும் உண்மையான ஒளிநெறி இயக்கத் தொண்டர்களாக மாற்ற வேண்டும். அதற்கென்று ஐந்தொழில் செய்யும் வல்லபத்தை வள்ளற்பெருமானுக்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வழங்கியிருப்பதுபோல நமக்கும் ஆண்டவர் அருள் பாலிக்க பெருமான் துணைசெய்வார், இதனை ஒளிநெறி இயக்கத் தொண்டர்களாகிய நாம் உறுதியாக நம்பவேண்டும். அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் நமக்கு இடும் கட்டளைகள் பலவற்றை அருள்விளக்க மாலையிலும் சற்குருமணி மாலையிலும் காணப்படுகின்றன,

''அஞ்சலை நீ ஒருசிறிதும் என் மகனே அருட்பெருஞ்ஜோதியை அளித்தனம் உனக்கே
துஞ்சிய மாந்தரை எழுப்புக நலமே சூழ்ந்த சன்மார்க்கத்தில் செலுத்துக சுகமே
விஞ்சுற மெய்ப்பொருள் மேனிலைதனிலே வித்தைகள் பலஉள விளக்குக என்றாய்
தஞ்சம் என்றவர்க்கு அருள் சத்திய முதலே தனிநடராஜ சற்குருமணியே

இந்த சற்குருமணி மாலைப்பாடலை உற்றுநோக்கினால் நாம் ஒளிநெறி இயக்கத்தில் செய்து நிறைவேற்ற வேண்டிய எல்லா கடமைகளையும் மூன்றே செயல்களில் அடக்கிவிடலாம் அவற்றுள் ஒன்று உணர்ச்சியற்றவர்களுக்கு உணர்ச்சியூட்டுதல் இங்கு உணர்ச்சியற்றவர்களையே துஞ்சிய மாநதர் என்கிறார் பெருமான். துஞ்சியவர் என்பது தூங்கியவர் என்கிற பொருளையும் அதனால் கடமையை மறந்தே இறந்தவர் என்ற பொருளையும் தெரிந்து கொள்ளலாம். இதனை துஞ்சினர்

Koviloor Digital Library

செத்தாரில் வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண் பவர்'' என்கிறது திருக்குறள். உணர்ச்சி சிறிதும் இல்லாத நிலையையே மரணம் என்கிறோம். ஆக உணர்ச்சியற்றவர் களே மரணத்தை அடைகிறார்கள். இரண்டாவது இத்தகைய நடைப்பிணங்களை மனிதர்களாக மாற்றுவதற்கு நாம் முயற் சிக்க வேண்டும். எப்போதும் இன்பமே நிரம்பிய, நலமே பெருகும் ஒளிநெறி இயக்கத்தில், சுத்த சன்மார்க்கத்தில் அவர்களை நடைபோட செய்யவேண்டும்.

மூன்றாவது மரணமிலா பெருவாழ்வை அடைவதற்கு பலவிதமான வித்தைகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று வேண்டும்போதுஉருவத்தைமறைத்து அருவமாக்கவேண்டும் அருவத்தை உருவமாக்க வேண்டும் உருவத்தோடு இருக்கும் போதே நுண்ணுடம்பை தனியே பிரித்து அதை கொண்டு உயிர்களுக்கு உயிர்நலப் பணிபுரிய வேண்டும். இந்த செயல்களையே பெருவாழ்வை வழங்கும் விஞ்சைகள் என் கிறார் இதைத்தான் துரிய வளநாடு என்கிறார் பெருமான்.

''விஞ்சுற மெய்ப்பொருள் மேனிலையை'' இந்தப் பாட லில் பெருமான் எதை குறிப்பிடுகிறார், உடம்பையும், மனதையும் கொண்டு செய்ய முடியாத பல அற்புதங்களை உயிரையும், உயிர்க்குயிராகிய இறைவனையும், இறைவன் அருளையும் கொண்டு செய்கிற செயல்களையே துரியமென் றும், துரியாதீதம் என்றும் சான்றோர்கள் குறிப்பிடுகிறார்கள்.

1 துயில் 2 கனவு 3 நனவு 4 துரியம் 5 துரியாதீதம் என்ற ஐந்தும் முறையே பஞ்ச அமுதங்களையும் குறிப்பன வாகும். தூங்கும்போது மனம் அமைதியோடு இருப்பதால் படைப்பு ஆற்றல் தோன்றுகிறது. நனவில் நன்றாக வாழ் வதற்குரிய பல திட்டங்கள் உருவாகின்றன. அதனால் கனவை காத்தல் தொழிலோடு தொடர்பு படுத்தலாம், படைத்து காத்தபிறகு திருத்த வேண்டுமல்லவா அதைத்தான்

Koviloor Digital Library

நனவு செய்கிறது இந்த மூன்றும் நடைபெறுவதற்கு உடம்பும் மனமும் தேவை,

இவற்றையும் கடந்து மறைக்க வேண்டியதை மறைப்பதற்கு, வஞ்சகர்களையும் நல்லவர்களாக ஆக்குவதற்கு நான்காவது தொழிலாகிய மறைத்தல் தொழில் பயன்படுகிறது. இதற்குரிய தெய்வத்தின் பெயரை மகேச்சுவரன் என்பர். மகேச்சுவரன் என்பது மிகப்பெரிய தலைவர் என்ற பொருளைத்தரும். மறைத்தல் தொழிலை துரியத்தோடு ஒப்பிடலாம். இந்த துரியத்தையும் கடந்து துரிய அதீதம் என்கிற அருளல் தொழில் நடைபெறுகிறது. இதை செய்பவர்தான் சதாசிவம் என்கிற சர்வ சாட்சி. எல்லாவற்றையும் அறியும் ஆற்றலுடையவரை தடைத்தவிர் காட்சியினர் என்பர் கிளையர்வாயின்ட் (Clayirvoyant) என்பதும் இதுவே

அன்னை வசந்தை, மேடம் பிளவாட்ஸ்கி முதலியவர்கள் இவ்வகையைச் சார்ந்த சான்றோர்கள் வள்ளற்பெருமானோடு நெருங்கி பழகும் வாய்ப்பைப் பெற்ற சிலர் ஒளிவட்டம் (Aura) காணும் ஆற்றலையும் பெற்றவர்களாக இருந்தார்கள். அத்தகையவர்களில் குறிப்பிடதக்கவர் தோபாசாமி என வழங்கும் திரிசிரபுர இராமலிங்க அடிகள் ஆவார். அவர் 'தோடுடைய செவியன்' என தொடங்கும் சம்பந்தர் பாடலை ஓதிஓதி உயர்ந்தவர். அவர் திருவொற்றியூரில் நிர்வாணமாக இருந்துகொண்டு பலருடைய ஒளிவட்டங்களைப் பார்த்தவர். அந்த ஒளிவட்டங்களின் நிற வேறுபாடுகளின் மூலம் அவர்களின் தீய குணங்களைக்கண்டு வெளியிட்டவர். ஆனால் வள்ளற்பெருமானைக் கண்டபோது இதோ ஒரு உத்தமர் வருகிறார் என்று எழுந்து நின்று வணங்கினார் தன் நிர்வாண நிலையையும் மறைத்துக் கொண்டார், வள்ளற்பெருமானைச் சுற்றி வெள்ளொளி வட்டத்தைக்கண்டே உத்தமர் என்றார்.

ஒவ்வொருவருடைய எண்ணத்தையும், உணர்வையும் அனுபவத்தையும், அறிவையும்கூட ஒளிவட்டங்கள் உணர்த்

Koviloor Digital Library
துகின்றன. அனுபவத்தைப்பற்றி பல ஞானிகள் மூன்று வடிவம் உடையது என்று பேசியுள்ளனர். 1 அனுபவிப்பவர் வடிவம் 2 அனுபவிக்கப்படும்பொருளின் வடிவம் 3 அனுபவிக்கிற செயலின் வடிவம் இந்த முத்திறல் வடிவத்தை பலரும் ஓரளவு அறிவர். ஆங்கிலத்தில் நினைவு உருவங்கள் (Thought Form) என்ற புத்தகத்தை அன்னை வசந்தையும், லெட்பீட்டரும் சேர்ந்து இயற்றியுள்ளனர். அதில்கூட நினைவின் மூன்று வடிவங்கள் மட்டும்தான் பேசப்படுகின்றன.

புறப்புறமாகிய அனுபவமும், புறமாகிய நினைவும், அகப்புறமாகிய உணர்வும், அகமாகிய அறிவும் உண்டு ஒவ்வொன்றும் முத்திறல் வடிவம் பெறுவதால் பன்னிரண்டு வடிவங்கள் கிடைக்கின்றன. இவற்றோடு இறைவடிவம் நான்கு சேர்க்க பதினாறு வடிவங்கள் கிடைக்கும், இவை பூதவெளி முதலிய பதினாறு வெளிகளை குறிக்கும். இறை வடிவம் நான்கு அவை 1 உலக அனுபவ இறைவடிவம் 2 உயிர் அனுபவ இறைவடிவம், 3 அருள் அனுபவ இறை வடிவம் 4 தூய இறை அனுபவ வடிவம் ஆகும்.

இவற்றை ஆளுடை பிள்ளையார் அருள்மாலையில பெருமான் விரிவாக விளக்கியிருக்கிறார். இந்த விளக்கத்திற்கு எல்லாம் மணிமுடி வைத்ததுபோல அதே மாலையில் எட்டாவது செய்யுள் வள்ளலார் விஞ்ஞானத்தையே வரையறச் செய்திருக்கிறது. அந்தச் செய்யுளில் நோவாது நோன்பு நோற்பது எப்படி என்பதை பெருமான் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

செவ்வகை ஒருகால் படுமதி அளவே செறிபொறி மனம் அதன் முடிவில்
எவ்வகை நிலையும் தோற்றும் நீ நினக்குள் எண்ணியபடி எலாம் எய்தும்
இவ்வகை ஒன்றே வருத்தமில்வகை என்று எனக்கு அருள் புரிந்த சற்குருவே
தெவ்வகை அமண இருள்அற எழுந்த தீபமே சம்பந்ததேவே

Koviloor Digital Library

இந்த பாடலில் மனம் என்பது யாது என்ற கேள்விக்கு விஞ்ஞான முறையில் பெருமான் விளக்கியிருக்கிறார். அவ்வப் போது நம்மையும் அறியாமல் திருத்தமான பல செயல்களை நாமே செய்து விடுகிறோம். பொருத்தமான சொல்லையும் நாமே சொல்லி விடுகிறோம். அதற்கேற்ற உணர்வையும் நாம் உணர்கிறோம். இதற்கு என்ன காரணம்? முன்னரே அனுபவித்திருக்கிற இயற்கை அறிவு என்கிற மதியே நமக்கு வழிகாட்டுகிறது. கைக் கொடுக்கிறது. கை முதலிய ஐம்பொறிகளும் அதற்கேற்ற அளவுதான் வேலை செய்யும் அந்த ஐம்பொறிகள் கண் முதலிய ஐந்து புலன்களோடு நெருங்கிநின்று, இணைந்து வேலை செய்கின்றபோது உண் டாகிற உயிர் ஒளிக்குதான் மனம் என்று பெயர்.

இந்த உயிர் ஒளியாகிய ஒளிவட்டத்தை (AURO) படம் எடுப்பதற்குரிய கருவியும் உண்டு அதைத்தான் கிரிலியன் படக்கருவி என்பர். இத்தகைய மனம் உருவானவுடனே நம்முடைய மனதில் நாம் விரும்பிய தோற்றம் எதுவும் தோன்றும். இதைத்தான் பதஞ்சலி முனிவர் சமாதி என்கி ருர், ஆங்கிலத்தில் இதையே TRANCE டிரான்ஸ் என்பர் இது உண்டான உடனே தொடர்ந்து தெளிவு உண்டாகும். அத்தெளிவைக் கொண்டே எவ்வளவு அரிய காரியத்தையும் செய்து முடித்து விடலாம். இதைத்தான் வருத்தமில்வகை என்றும் நோவாது நோற்பது என்றும் சொல்வர்: வள்ளற் பெருமான் அடைந்திருக்கும் பெரிய வெற்றிக்கு காரணம் இத்தகைய நோவாது நோன்புதான். இதை இறை 'இன்ப குழைவு என்ற பதிகத்தில் ஏழாவது பாடலில் மிகத்தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

ஓவாதுண்டு படுத்துறங்கி உணர்ந்து விழித்துக் கதைபேசி
உடம்பு நோவாது உளமடக்காது ஒகோ நோன்பு கும்பிட்டே
சாவாவரமும் சித்தி எலாம்தழைத்த நிலையும் சன்மார்க்க
சங்க மதிப்பும் பெற்றேன் என்சதுர்தான் பெரிது''

Koviloor Digital Library

என்று பெருமான் பாடி மகிழ்கிருர். இறுதி அடியில் இவ்வளவு அற்புதத்திற்கும் காரணம் உன்னுடைய செயல் தான் என்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைப் பார்த்து பெருமகிழ்ச்சி அடைகிருர். இந்த மகிழ்ச்சியில் தன்னையே துரிய வளநாட்டிற்கு மேலே தன்னை உயர்த்திக் கொள்ளு கிருர். துரிய அதீதம் என்கிற பேரின்பத்தில் திளைக்கிருர், அப்படி அவர் அடிக்கடி இறைவர் செயலை நினைந்து நினைந்து இன்புறுவதை நன்குகூர்ந்து கவனித்தால் நாமும் உண்மை யான தியானத்தை அடைவது எப்படி என்று புரிந்து கொள்ளலாம்.

நீருண்டு பொழிகின்ற என தொடங்கும் பாடலில் தியானம் உண்டாகில் அனைத்தும் உண்டாகும் என்று சொல்லுகிருர். உன்னுடைய அருஞ்செயல்களை நினைக்குந்தோறும் என்னு டைய சிந்தை கனிந்து கனிந்து உருகி தெள்ளார் அமுதம் ஆனதுவே என்று அவருடைய தியான இன்பத்தை அனைவ ரும் பெற்று மகிழும்படி சொக்க வைக்கிருர். சொக்கத்தங்கம் என்ற சொற்றெடர்க்கு தூயதங்கம் என்று மட்டும் பொருள் பண்ணி ஏமாந்து விடக்கூடாது.

நாம் உண்மையான இறைவன் திருவருளை நினைந்து நினைந்து இன்புறும்போது தூய உடம்பு எப்படி உருவாகிறது என்பது புரிந்து கொள்கிறேம். கண்டு கொண்டேன் கனிந்து கொண்டேன் கலந்து கொண்டேன் என்று பெருமான் சொல்லுவதற்கும் பொருள் என்னவென்று புரிகிறது. இதனை ''இன்பம் பெருக்கி இருள் அகற்றி துன்பம் தொடர்பு அறுத்து சோதியாய் அன்பு அமைத்து சீரார் பெருந்துறை யான் என்னுடைய சிந்தையே ஊராகக் கொண்டான் உவந்து'' என்ற திருவாசகச் செய்யுள் நினைவுக்கு வருகிறது இதைத்தான் பெருமான் '' உருகிப் பெருகும் கலையே பெரு வாழ்வு கலை''என்கிருர் ஊனினை உருக்கியே உள்ஒளி பெருக்க வேண்டும். போலி துறவிகள் செய்வதுபோல் ஊனினை சுருக் கினுல் உள்ஒளி பெருக்க முடியாது. இயற்கை தியானமும் இன்னதென்று புரியாது.

Koviloor Digital Library

ஓங்கார அணைமீது நான் இருந்த தருணம் என்று பெருமான் குறிப்பிடுவது தியானம் எப்படி செய்வது என்பதைக் குறிக்கும். தியானம் செய்ய கோவில் அருகிலோ, கனிமரங்கள் உள்ள இடங்களிலோ, அருவிகள் அருகிலோ, சான்றோர்கள் நடமாடிய இடங்களிலோ அமரவேண்டும். இதைத்தான் வள்ளற்பெருமான் "இருந்தறியேன், இருந்தவரை ஏத்திடவும் அறியேன் என்கிறார். இங்கு இருந்தல் என்பது தியானத்திருப்பதையே குறிப்பது:

தியானம் செய்யும்போது கால்களை மடக்கி வலதுகாலின் மீது இடதுகாலை வைத்து, இடது காலிலுள்ள குதிக்கால் குதத்திற்கும் குய்யத்திற்கும் இடையில் இருக்கும்படி அமர வேண்டும். குதம் என்பது எருவாயில் குய்யம் என்பது கருவாயில். இப்படி அமர்ந்து நிமிர்ந்து நோக்கும்போது உடம்பு முழுவதும் இடதுகாலில் குதிகால்மேல் தங்கும். அப்படி தங்கும்போது குதிகால் மெல்ல மெல்ல நகர்ந்து எருவாயை முழுமையாக மூடிக்கொள்ளும். அப்போது வெளியேற வேண்டிய நச்சுக்காற்று வெளியேறாமல் திரும்பி உள்ளேயே மேலேறி செல்லும். அது மணிபூரகத்தின் அருகேயும், இதயத்திற்கு அருகேயும் உள்ள இரண்டு 'குண்டலினி நாடிகளை இயங்கச் செய்யும். அதனால் சுத்த உஷ்ணம் தோன்றும். நச்சுக்காற்றும், மற்ற அழுக்குகளும் தூய்மையடைந்து அமுதமாகிவிடும். உள்நாக்கின் வழியாக மெல்லிய பூங்காற்றாகி மேலே செல்லும். இதைத்தான் பெருமான் "வாசி என்ன பேசு கண்டாய் வெண்ணிலாவே" என்று கேட்கிறார். அக்காற்று மேடையிலே வீசுகிற மெல்லிய பூங்காற்றாக மாறுகிறது. | மென்காற்றில் விளையும் சுகமாகிறது. இவ்வளவு இறை இன்பத்தை நமக்கு அளிப்பது தக்கமுறையில் நாம் செய்கிற தியானமே

இத்தருணத்தில் நாம் இறைவனோடு ஒன்றிநின்று இன்புறுகிறோம். இதைத்தான் அந்தரங்க சேவை செய்ய வெண்ணிலாவே, - ஐய்யர் வருவாரோ சொல்வாய்

Koviloor Digital Library

வெண்ணிலாவே'' என்று பாடுகிறார், இந்த நேரத்தில்தான் ஆணவம் நீங்குகிற மலபரிபாகம் உண்டாகிறது. இருவினை ஒப்பு என்கிற சமரசம் தோன்றுகிறது; சத்தினி பாதம் என்கிற அமுதஊற்று பெருகுகிறது. இந்த உண்மையை பெருமான் ''குண்டலிப்பால் வேண்டுகிறேன் வெண்ணிலாவே என்று அனுபவித்து அனுபவித்து பெருமான் பாடியிருக்கிறார்.

இப்படி அற்புதம் விளைவிக்கின்ற தியானத்தை நம்முடைய வாழ்க்கையில் நாம் பல சமயம் காண நேருகிறது ஒரு நீண்ட பிரயாணத்தில் வண்டியில் அமர்ந்து தொடர்ந்து பிரயாணம் செய்கிறோம். அப்போது நீர் வளம் நீக்குவதற்குக்கூட எழுந்து செல்ல முடியவில்லை. ஆனால் அந்த அசுத்தங்களால் உடம்பிற்கு தீமையும் நேருவதில்லை ஏன்? என்று புரிந்துகொள்வது மிக முக்கியம்

நம்முடைய உடம்பில் நிகழ்கிற நிகழ்ச்சி இருவகை உண்டு. நாள்தோறும் உண்பதும் உறங்குவதும் நீர்வளம் நீக்கிக் கொண்டு வாழ்வதாகும் இதனை பொது நிகழ்ச்சி என்பர். இரண்டாவது நிகழ்ச்சி சிறப்பு நிகழ்ச்சி. இது திடீரென்று தோன்றும். எங்கும் எழுந்து செல்லமுடியாத சூழ்நிலையில் நீர்வளம் நீக்குதல்கூட நடைபெற இயலாத சூழ்நிலை உருவாகிறது. அந்த சமயம் உடம்பில் என்ன நேருகிறது என்பதை ஒரு உதாரணத்தின்மூலம் உணரலாம்.

ஒரு காந்த நாடா பதிவானது ஓடிக்கொண்டிருக்கும் போது திடீரென்று நிறுத்தி சில பகுதிகள் கடந்த பிறகு வெற்றிடத்தை கடக்கிறோம். அந்த சமயம் முன்னே சுற்றியிருந்த சுருள்கம்பி எதிர்திசையில் சுருள்கிறது. இதனை ரீசைகளிங் RECYCLING என்பர், இதுபோன்ற நிகழ்ச்சி நமது உடம்பில் நிகழ்வது வியக்கத் தக்கதாகும். இதற்கு தெய்வ நம்பிக்கையும் மனோஉறுதியும் வேண்டியிருக்கிறது.

Koviloor Digital Library
5151
R65

ஒரு சிறுவன் தந்தை அடித்தும் திருந்தவில்லை. தாய் அடித்தும திருந்தவில்லை. அவன் நன்ருக உடைஉடுத்திக் கொண்டு யார் சொல்லுவதையும் கேட்காமல் தெருவில் கிடக்கும் அழுக்கு மண்ணில் புரளுகிருன. இதை கதவு ஓரத்தில் நின்று தாயார் துன்பத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிருர், விளையாடுகிற சிறுவன் தன் வீட்டை நோக்கி பார்க்டருன். கதவு அருகில் மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருக்கிற தாயாரின் சேலைத்தலைப்பு காற்றில் பறக்கிறதை அச்சிறுவன் பார்த்துவிடுகிருன்.

நான் செய்யும் குறும்பை பொறுக்க முடியாமல் அம்மா மறைந்துக் கொண்டு நின்று அழுது கொண்டிருக்கிருள் என்று நினைக்கிருன். உடனே கையில் வைத்துக் கொண்டு விளையாடும் மணலையும், மற்ற பொருளையும தெருவில் வீசி விட்டு ஓடிவந்து தாயாரைக் கட்டிக் கொள்கிருன். அம்மா அம்மா அழாதே நளன் தெருவில் போவதில்லை என்னுடைய உடையை அழுயகாக்கிக் கொள்ளமாட்டேன் என்று சிறுவன் உறுதி தருகிருன். இப்போது இதுவரையில் நடக்காத காரியம் நடந்துவிட்டது; சம்பவிக்க முடியாத ஒன்று சம்பவித்துவிட்டது என்று ஆனந்தபட்ட தாயார் மகனைவாரி அணைத்துக் கொண்டாள். அவன் முகத்தில் மாறிமாறி முத்த மழை பொழிந்தாள். இவ்வரிய அசாதாரண நிலையைத்தான் பெருமான் இயற்கை தியானம் என்றும் சகஜநிஷ்டை என்றும் சொல்கிருர் அடிப்பதற்கும், வைவதற்கும் திருந்தாத பிள்ளை மனம் திருந்தியதற்கு காரணம் அம்மாவின் அன்பு தான். அன்பெனும் பொருளின் தன்மை அமரரும் அறிய மாட்டார் என்பர் கவிஞர்.

ஒரு ஜன்னல் அருகே ஒரு பாப்பாச் செடியை நிழலை நோக்கி வைத்தால் அது தானகவே ஒளியை நோக்கி திரும்பி வளர்கிறது. இதனை சூரியனை நோக்கி வளர்தல் (HELIOTROPISM) என விஞ்ஞானம் கூறும். ஒளிநெறி இயக்கத்தின் உயிர்நாடியே இங்குதான் இருக்கிறது. இதனை நோக்கி திரும்புகிற, உறுதியற்ற இளகிய உள்ளமாய் இயங்காத எல்லா உயிர்களையும் ஒளியை நோக்கி திரும்ப பழகச் செய்வதுதான் ஒளிநெறி இயக்கத்தின் முக்கிய நோக்கமாகிறது. இதுவே ஒளிநெறி இயக்கத்தின் ஆக்க வேலையுமாகும்.

Koviloor Digital Library

பொருளாதாரமும் அரசியலும்

மழவுக்கும் ஒருபிடிசோறு அளிப்பது அன்றி இருபிடி
ஊன் வழங்கில் இங்கே
உழவுக்கு முதல் குறையும் என வளர்த்து அங்கு
அவற்றை எல்லாம் ஓகோ பேயின்
விழவுக்கும் புலால் உண்ணும் விருந்துக்கும்
மருந்துக்கும் மெலிந்து மாண்டார்
இழவிற்கும் இடர் கொடுங்கோல் இறைவரிக்கும்
கொடுத்து இழப்பர் என்னே என்னே

குழந்தைக்கும் ஒருபிடி உணவு கொடுப்பதை தவிர இரண்டுபிடி சோறு ஊட்டி விட்டால், உழவு செய்வதற்கு விதை, கூலி முதல்யவற்றிற்கு வைத்திருக்கும் முதலீடு குறையும் என்று கஞ்சத்தனத்தால் முதலைப் பெருக்கிக் கொண்டான். சிக்கனத்தால் மீதம் பிடித்தப் பொருள்களை எல்லாம் பேய்களுக்காக நடத்துகிற திருவிழாவிற்கும் சிறு தெய்வ வழிபாட்டிற்கும் புலாலைக் கொண்டு நடத்துகின்ற விருந்துகளுக்கும், சிறு தெய்வ வழிபாட்டாலும். புலால் உண்டதனால் ஏற்பட்ட நோயை நீக்கு மருந்திற்கு செலவு செய்தும், சிறு தெய்வ வழிபாடு அச்சத்தாலும், ஊனால் ஏற்பட்ட நோய்தரும் பலவீனத்தால் ஆட்பட்டு செத்தவர்களுக்கும் மக்கள் வாழ்க்கைக்கு இடையூறே செய்கிற கொடுங்கோல் அரசன் விதிக்கிற வரிக்கும் உள்ளதை எல்லாம் கொடுத்து இழப்பர் இது என்ன விபரீதம்

வள்ளற்பெருமான் மக்களுக்கு பொருளாதார அறிவைப் பற்றிய அவசியத்தை குறிப்பிடுகிறார். மக்கள் சமுதாயத்தில் தனிப்பட்டவர்களும், குடும்பத்தினரும் மற்றும் ஆன்மீக அரசியல் வாழ்விலுள்ள பெரும்பாலோர் சிக்கனம் என்ற பெயரால் அறிவில்லாமல் தேவைக்குமேல் பொருளைச் சேர்க்க தவறான வழிகளையும் கடைபிடிக்கின்றனர். அநியாயமாகவும் அறிவற்ற முறையிலும் சிக்கனம் என்ற

Koviloor Digital Library

பெயரால் நல்ல காரியங்களை செய்யாதவர்களுக்கு ஏற்படும் முக்கியமான ஐந்து வகையான வீணான செலவினங்கள் ஏற்படுவதை குறிப்பிடுகிறார்.

தாம் பெற்றெடுத்த குழந்தை அறிவும் ஒழுக்கமும் பக்தியும் நல்ல பண்பும் உடையதாய் விளங்க வளர்க்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு உண்டு. ஆனால் சிக்கனம் என்ற பெயரில் குழந்தைக்கு உணவு கொடுப்பதிலும் கடைபிடிக்க முற்படுகின்றனர். இதனால் குழந்தையை ஒழுங்காக வளர்க்க முடிவதில்லை. மேலும் வீணான பொருளாதார விரயங்கள் ஏற்படுகின்றன.

உண்மையான ஆன்மீக வாழ்க்கை சரியான அரசியல் வாழ்க்கை வளமான பொருளாதார வாழ்க்கை சுத்த சன்மார்க்கக் கொள்கைகளை கடைப்பிடிப்பதன் மூலமே அமையும். சுத்த சன்மார்க்க குடும்பம் தான் குழந்தைகளை ஒழுங்காக வளர்க்கமுடியும்.

நோய் வரகாரணம் உணவு ஒரு காரணம். உணவு மிகுதல், குறைவின்றி இருப்பதோடு, ஊன்உணவு அறவே இல்லாமல் இருக்கவேண்டும். சிறுதெய்வ வழிபாட்டால் சிறுமை வளர்கிறது. உயிர்பலி முதலிய கொலைபுலைகள் போன்ற தீமைகள் தொடர்கின்றன. அறிவே, அன்பே அருளே உருவமான ஆண்டவர் ஒருவரே, அவரே அருட் பெருஞ்ஜோதி என்ற உண்மை விளங்கவேண்டும்.

நடுநிலை இல்லா கூட்டத்தை கருணை நண்ணிடா
அரையரை நாளும்
கெடுநிலை நினைக்கும் சிற்று அதிகார கேடரை
பொய்யலால் கிளத்தா
படுநிலை அவரை பார்த்த போதெல்லாம் பயந்தனன்
சுத்த சன்மார்க்கம்
விடுநிலை உலகநடை எலாம் கண்டே வெருவினேன்
வெருவினேன் எந்தாய்

Koviloor Digital Library

இது இன்றைய அரசியல்நிலையை படம்பிடித்து காட்டுவதுபோல் உள்ளது. மக்களை பொறுத்துதான் சரியான அரசியல் உருவாகும். மக்கள் நல்லறிவும் தெளிவும் உடையவர்களாய் இருந்தால் உண்மையை உணர்ந்து ஒதுக்க வேண்டியவைகளை ஒதுக்கி ஏற்க வேண்டியதை ஏற்பர். பொது உணர்வு இல்லாது சுயநலத்தை பெரிதாகக் கருதும் சமுதாயத்தால் கொடுங்கோல் ஆட்சிதான் உருவாகும்.

குடிகளிடம்வாங்கும்வரியை திட்டப்படி சட்டப்படி செலவழிக்காது வேறுவகையில் வீண் செலவு செய்பவரே கொடுங்கோலர் ஆவர். இவரை சிற்றதிகாரகேடர் என்கிறார் பெருமான். பொய் தவிர வேறொன்றையும் சொல்லாத கொடியவர் என்றும் போலி அரசியல்வாதி என்றும் கூறுகிறார். தமக்கு வேண்டியவர்கள் தவறுகள் செய்கிறபோது தண்டிக்க வேண்டியச் சட்டம் வளைந்து கொடுத்து பாதுகாப்பு அளிக்க வழிசெய்கிறது. அதே தவற்றை வேண்டாதவர் செய்யும்போது தண்டிக்க முற்படுவர் இவர்கள் நடுநிலை இல்லாத நீதி நேர்மையற்ற கொடுங்கோலர் என்கிறார் பெருமான்.

கருணையில்லா ஆட்சி கடுகிஒழிக
அருள்நயந்த சன்மார்க்கர் ஆள்க
தெருள் நயந்த நல்லோர் நினைத்தநலம் பெறுக
நன்று நினைத்து எல்லோரும் வாழ்க இசைந்து

Koviloor Digital Library

இறை அனுபவ பயிற்சி

காற்று உருவோ கனல் உருவோ கடவுள் உரு என்பார்
காற்று உருவும் கனல் உருவும் கண்டு உரைப்பீர் என்றால்
வேற்று உருவே புகல்வர், அதை வேறு ஒன்றால் மறுத்தால்
விழித்து விழித்து எம்போல்வார் மிகவும் மருள்கின்றார்
தோற்றும் அந்த தத்துவமும் தோற்றாத தத்துவமும்
துரிசாக அவை கடந்த சுகசொருபமாகி
மாற்றம் மன உணர்வு செல்லாத்தலத்து ஆடும்பெருமான்
வடிவு உரைக்க வல்லவர் ஆர் வழுத்தாய் என் தோழி

கடவுள் உருவம்

கடவுளுடைய உருவத்தை இன்னதென்று புரிந்து கொள்ளவேண்டும். கடவுளுடைய உருவம் காற்றின் உருவம்தான் என்பர் அடையோகிகள். நெருப்பின் உருவத்தையே கடவுள் உருவாக எண்ணுபவரும் உண்டு. இன்றும் நில உருவத்தில் இருக்கும் விக்கிரகங்களை வணங்குபவர்கள் தான் பெரும்பாலோர். நீரை வணங்குடவரும் உண்டு. நீர் எல்லாவற்றிற்கும் பயன்படுவதால் நீரில்லாமல் கடவுள் வழிபாடே இல்லை சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல்வானோர்க்கும் ஈண்டு' என்கிறார் திருவள்ளுவர் விசும்பு என்கிற ஆகாயத்தை வழிபடுபவர் ஜோதி வழி பாட்டினர். ஜோதியை மின் காந்த அலை என்று கணிதம் நிருபித்திருக்கிறது.

இப்படி பஞ்சபூதங்களையும் கடவுள் என வணங்குபவர்களைப் பார்த்து கடவுளுக்கு வேறு உருவம் இல்லையா? பஞ்சபூத உருவங்கள் தான் கடவுள் உருவமா என்று கேட்டால் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு விழிக்கிறார்கள். கடவுளுக்கு தோன்றுகிற உருவமும் உண்டு; தோன்றாத உருவமும உண்டு. இவ்விரண்டையும கடந்த இன்ப உருவமும் உண்டு என்று வள்ளற்பெருமான் இப் பாடலில் உறுதியாக சொல்லியிருக்கிறார். தோற்றும் அந்த தத்துவம் என்பது தூல உடம்பு. தோற்றாத

Koviloor Digital Library

தத்துவம் என்பது சூட்சும உடம்பு துரிசாக அவை கடந்த சுக சொரூபம் என்பது காரண உடம்பு. தூல உடம்பையும், சூட்சும உடம்பையும் கடந்தது தான் காரண உடம்பு இதையே இன்புருவம் என்பர் பெருமான்.

உருவமும் அருவமும் கடந்தது தான் இன்ப வடிவம் இதை "இன்புருவம் ஆயினை நீ எழில் வாதவூர் இறையே" என்று வேறு ஒரு பாடலில் குறிப்பிடுகிறார். இறைவனுடைய நிந்திய இன்ப உருவம் சொல்லிற்கும் நினைவிற்கும் எட்டாத உருவம் என்கிறார். காரண உடம்பு என்பது இம்மை இன்பம். மகா காரண உடம்பு என்பது மறுமை இன்பம் மூல காரண உடம்பு என்பது பேரின்பம். மாற்றம் மன உணர்வு செல்லாத்தலத்து என்பது சொல்லுக்கும் நினைவிற்கும் எட்டாதது. மாமனிதர்கள் "பல தருணங்களில் தோன்றியும், மறைந்தும் அன்பர்களுக்கு உதவி புரிவதையும் தோற்றும் தத்துவமும், தோற்றாத தத்துவமும் என்ற சொற்றொடர் குறிக்கிறது.

பஞ்சபூத வழிபாடு

பூசனை என்பது தின வழிபாடு. வார, மாத வருட வழிபாடுகளை சிறப்புஎன்பர், காற்றைக்கொண்டே அட்டை யோகம் செய்து எல்லாவற்றையும் அடைந்து விடலாம் இறைவனே தேவையில்லை என்று முழங்குபவர் நாத்திகர், நெருப்பு முதலிய பூதங்களை வழிபட்டால் போதும் என்பர் நாகரிகம் அடையாதவர், அவர்கள் இடி, மின்னல்முதலியவற்றை பார்த்து, பயந்து இயற்கை நிகழ்ச்சிகளை யெல்லாம் தெய்வம் என்று வழிபட்டனர். இதுதான் "சிறு தெய்வ வழிபாட்டின் தொடக்கம்.

ஒளி வகை

வள்ளற்பெருமான் பஞ்ச பூதங்களில் நிலமாகிய விக்கிரக ஆராதனை வழிபாடு தொடக்க நிலையில் உள்ளவர்களுக்கு தேவைதான் என்று ஸ்ரீதர் அடிகளிடம் விளக்கி

Koviloor Digital Library

யிருக்கிறார். முச்சுடர்களும் ஒளி முயங்குற அளித்தருள் அச்சுடராம் அம்ப 'அருட்பெருஞ்ஜோதி'' என்கிறது திரு அகவல். சூரியனை உடம்பாகவும், சந்திரனை மனமாகவும், நெருப்பை உயிராகவும் பெருமான் குறிப்பிடுகிறார். "இம் மூன்றிற்கும் ஆற்றல்கொடுத்து இயக்குபவர் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் என்கிறார், உயிர், உடம்பு, மனம் மூன் றையும் உள் ஒளியால் இயக்கிக் கொண்டிருப்பவர் கடவுள் உடம்பு வெள் ஒளி, மனம் உயிர் ஒளி, உயிர் இறைவனை உள்ஒளி ஆக பெற்று இயங்குகிறது. நான்கு ஒளிகள் வாழ்க்கையில் நான்கு எல்லைகளாக இருக்கின்றன. உடம்பாகிய சூரிய ஒளி, மனமாகிய சந்திர ஒளி, உயிர் ஆகிய நெருப்பு ஒளி, இம்மூன்றையும் இயக்கும் உள் ஒளி ஆக நான்கு.

நேயம் ஐந்து வகை

இறை அனுபவம் தான் ஆன்மீகம் என்பது. ஆன்மீகம் என்றாலே உயிர்கள் தன்னலத்தை பெரிதாக கருதாமல் மற்ற உயிர்களுக்கு பணி புரிவதுதான். இதுவே வழிபாடு இதனை ஜீவகாருண்ய ஒழுக்கம் என்றும் ஆன்மநேய ஒருமை பாட்டுரிமை என்றும் பெருமான் குறிப்பிடுகிறார். இது தான் சுத்த சன்மார்க்கத்தின் இலட்சியமாகும். ஆன்ம நேயம் என்பதில் ஐந்து நேயங்கள் அடங்கியிருக்கின்றன. நேயம் என்பது அன்பையே குறிக்கிறது, இந்திரிய நேயம் என்பது பொறி புலன்களிடம் அன்பு காட்டுவது. கரண நேயம் என்பது கொள்கையில் ஈடுபடுவது. ஜீவநேயம் என்பது மனிதாபிமானத்தை குறிப்பிடுவது ஆன்மநேயம் என்பது எல்லா உயிர்களிடத்தும் உருக்கம் காட்டுவது. சிவநேயம் என்பது கடவுள் வழிபாட்டில் ஈடுபடுவது.

உயிர் 4 வகை

உயிரினை பசு, ஜீவன், ஆன்மா சிவம் என நான்கு வகையாகப் பிரிப்பர். ஆன்மா என்ற சொல்லுக்குரிய விளக்கத்தை சிவமாதல் என்று உபதேசத்தில் தந்திருக்

Koviloor Digital Library

கிருர். 1. பசு என்பது தன்னலம் உடையது, பாசமிக்கது. இதனை கார் உயிர் என்பர் 2. ஜீவன் என்பது தன்னலத்தில் பிற உயிர்க்காக ஒரு பகுதியை விட்டுக்கொடுப்பது இதனை ஜீவிக்க தொடங்குதல், வாழ்க்கை தொடக்கம் என்பர். திருமணத்தில் தான் வாழ்க்கை தொடங்குகிறது. ஒருவருக்கொருவர் தன்னலத்தை விட்டுக் கொடுத்தலை, தொடங்குவதைத்தான் ஆர் உயிர் என்பர். 3. ஆருயிராகிய ஜீவன் 'தன்னலத்தில் முக்கால் பாகம் விட்டுக்கொடுக்க தொடங்கும்போது ஆன்மாவாகிறது, மன்னுயிராகமாறு கிறது. 4. ஆன்மா தன்னலத்தை நூற்றுக்கு நூறு விட்டு கொடுக்க நேரும்போது சிவமாகி விடுகிறது. தயாவண்ண மாகிறது.. இதனை இன்னுயிர் என்பர் பெருமான்.

இறைவன் ஒருவனே என்பதை நம்பி வாழும்போது, உயிர்ப்பணியில் ஈடுபடநேருகிறது. உயிரானது கார் உயிர் ஆர் உயிர், மன்னுயிர், இன்னுயிர் என்ற நான்குபடிகளில் முன்னேற! அருள் வழி காட்டுகிறது. "அருள் அலாது அணுவும் அசைந்திடாது அதனால் அருள்நலம் பரவுகஎன்று அறைந்த மெய்ச்சிவமே" என்பது திரு அகவல், இதனைத் தான் பெருமான் "அடிமையாக்கி, பிள்ளையாக்கி, நேயனாக்கியே அடிகளாக்கிக் கொண்டாய் என்னை அவலம் நீக்கியே" என்று அனுபவித்து அனுபவித்து பாடியிருக் கிருர். அடிகள் என்ற சொல்லுக்கு நூற்றுக்கு நூறு தன்னலமில்லாதவர், தயாவண்ணமானவர், சிவமானவர் என்பதே பொருளாகும்.

ஒளி வழிபாடு

ஜோதி வழிபாட்டில்கூட மூன்று படிகள் உண்டு. அருள்ஜோதி என்பது வெள் ஒளி வழிபாட்டை குறிப்பிடுவது. பெருஞ்ஜோதி என்பது உள்ஒளி வழிபாட்டை உணர்த்துவது. இது பிரணவ தேகத்தின் இயல்பையே குறிக்கும். அருட்பெருஞ்ஜோதி வழிபாடு ஒன்றுதான் உள்ஒளி வழிபாடாகிறது. இதுவே சுத்த சன்மார்க்க

Koviloor Digital Library

வழிபாடு இதனை "இப்பாரில்" என்ற பாடல் விவரிக்கிறது. இதனை பெருமான் "உள்ஒளி ஓங்கி- உயிர் ஒளி விளங்கிட வெள்ஒளி காட்டிய மெய் அருள் கனலே" என்பர், இதனால் மாமனிதர் உதவியும் கிடைக்கும். சுத்த சன்மார்க்க சாதனையும் வெற்றி தரும்,

இந்த உண்மையை அறிவியல் அடிப்படையில் தெரிந்து கொண்டால் கடவுள் அனுபவ பயிற்சி எளிதாகும். கண் வெள் ஒளியைத்தான் காண்கின்றது. இது வானவில்லில் இருக்கும் ஏழு நிறங்களையும் ஒரு குறிப்பிட்ட அளவில் ஒன்று சேர்ப்பதுதான், கண் வேலை செய்வதற்கு மூளை வேலை செய்வது அவசியம். மூளை செய்கின்ற வேலையில் தோன்றுவதுதான் உயிர் ஒளி. அதனால் உயிர் ஒளி இல்லாமல் வெள் ஒளி பயன்படாது. மூளை இல்லாமல் கண் பார்க்காது மூளைக்கு இரத்த ஓட்டமில்லாமல் வேலை செய்ய முடியாது இரத்த ஓட்டம் இதயத்திலிருந்து வருகிறது. இது உள் ஒளியின் வேலை. உள் ஒளியின் வேலையைதான் இதயம் செய்கிறது. இதயத்தை ஜோதி என்றும், மூளையை பெரும் என்றும் கண்ணை அருள் என்றும் கருத வேண்டும்.

உள்ஒளி ஓங்கிட என்ற பாடலில் அனுபவ பொருள் இதயத்திலிருந்து இரத்தம் மேலே ஏறுகிறது: அதனால் மூளை வேலை செய்கிறது. மூளை செய்யும் வேலையால் கண்ணும்பார்க்கிறது. இதைத்தான் ஜோதியுள் ஜோதியுள் ஜோதி என்று பாடுகிறார் பெருமான். இது முச்சுடர் புரியும் அற்புத வாழ்க்கை. இதன் மூலம்தான் இறை அனுபவ பயிற்சி நிறைவேறுகிறது.

ஒரே தெய்வ வழிபாட்டை உணரும் ஆற்றல் இயலாதவர்கள் இயற்கை பொருள்களையே கடவுள் என்று ஆரம்பத்தில் வழிபடுகின்றனர். இவ்வழிபாடு தொடக்கத்தில் உள்ளவர்களுக்கு தேவைதான். தியானம் செய்யும்போது

Koviloor Digital Library

அருவமாக வழிபாட்டை தொடங்கக்கூடாது. உருவமாகவே தொடங்க வேண்டும். அந்த உருவம் ஒன்றும் தியானம் செய்பவர் ஒன்றும் ஆக இரண்டு பொருள்களாகவே முதலில் அமைந்திருப்பதைத்தான் துவைதம் என்பர். மேலும் பல படிகள் உருவாகின்றன. தியானம் வளர வளர உருவம் கரைந்து அருவமாகிவிடுகிறது முதலில் முன்னே இருக்கும் உருவம் மறைகிறது, அதனால் இரண்டு என்பது மாறி ஒன்றாகி விடுகிறது. இதைத்தான் அத்வைதம் என்பர். இதுவும் முழு அனுபவத்தைக் கொடுப்பதில்லை இதையும் கடந்த அதீதம்தான் சுத்த சன்மார்க்க அனுபவம். சுத்த சாதனம்.

சாதனம் அல்லது பயிற்சி மூன்று வகைப்படும். கேவல சாதனம், சகல சாதனம், சுத்த சாதனம் என்பது முறையே தனிநிலை, பொதுநிலை, சிறப்புநிலை எனப்படும், சுத்தசாதன பயிற்சி பெற்ற நமக்கு மாமனிதர் அவ்வப்போது தோன்றி துணையாயிருப்பர். சுத்தம் என்பது இறைவன் திருவடியைப் பற்றிக்கொண்டு உயிர்ப்பணியை செய்து என்றும் அழியாத வாழ்வை, பெருவாழ்வை பெறுவதை குறிப்பிடுகிறது, கேவல சாதனத்தில் ஆணவம் மேலோங்குகிறது. சகல சாதனத்தில் பொதுநிலையில் அச்சம் தலை தூக்குகிறது. இவ்விரண்டையும் கடந்தது சிறப்பு நிலை அல்லது சுத்தசாதனம்.

இரு திருவடிகள்

தியானம் செய்பவர் தன்னை மறந்து இறைவன் திருவடியை உறுதியாகப் பற்றிக்கொண்டு அதன் மயம் ஆவது தான் சுத்த அத்வைதம், இங்கே தன்னை மறந்து இன்புறுதலும், தன்னையறிந்து இன்புறுதலும் என்ற இரண்டு நிலைகள் உருவாகின்றன. தன்னை மறத்தல் என்பது ஆணவத்தை கடந்து நிற்றல். இதுதான் அறிவு என்னும் முதல் திருவடி. இதை அவித்தியா, அறியாமை என்று வடமொழி நூல்கள் கூறி ஒதுக்குகின்றன.

Koviloor Digital Library

ஆணவம் இருக்கிற வரையிலும் அறிவு என்கிற இறைவன் திருவடியை அடைய முடியாது. அதை அடைகிற போது. தான் ஒவ்வொரு உயிரும் கோன்கண்ட குடி ஆகிறது. அதாவது அரசனால் கண்டக்கணிக்கப்பெற்று த்க்கபதவியில் அமர்த்துகின்ற நிலை அது.

அதற்குமேல் தன்னை அறிந்து இன்பமுறுதல் என்ற நிலை உருவாகிறது. இதுதான் அறிவை செம்மையாகப் பயன்படுத்தி உண்மை அனுபவத்தை பெறுவதாகிறது. இறைவனுடைய அனுபவம் இரண்டாவது திருவடியாகும் இதைக் கோன்கொண்ட குடி என்று பெருமான் பாராட்டு கிறார், ஆண்டவரே வலிந்து வந்து ஆட்கொள்ளுவதை குறிக்கிறது. அறிவையும், அனுபவத்தையும் இறைவன் இருதிருவடிகள் என்று அறிந்துகொள்ள முடியாதவர்கள் குரங்கு குட்டியையும், பூனைக் குட்டியையும் உதாரணமாக காட்டுவர். குரங்கு குட்டி என்பது உறுதியைக் குறிக் கிறது. பூனைச்குட்டி என்பது அன்பு தரும் இன்பத்தைக் குறிக்கிறது.

பெருமான் இத்தகைய அரிய பேற்றை நாம் புரியும் உயிர்ப்பணியின் மூலமே நமக்கு வழங்குகிறார். அருட் பெருஞ்ஜோதி ஆண்டவர் 'வள்ளற்பெருமானுக்கு இத் தகைய அற்புத வாழ்க்கையை வழங்கியிருக்கிறார். இதனால் பெருமான் உலகத்து உயிர்கள் எல்லாம் அப்பெரும்பேற்றை பெறுவதற்கென்று உலக முழுவதும் சென்று இன்பம் உயிர் நலப்பணி புரிந்து வருகிறார். "நானே இருந்து சன் மார்க்கம் நடத்துகின்றேன்' என்பதன் பொருள் இதுதான் இதை பல இடங்களில், பல வடிவங்களில் அனுபவித்து பாடியிருக்கிறார். இதோடு உண்மை விளம்பினேன் வம்மினோ விரைந்து என்கிறார் பெருமான் விரைந்து வாருங் கள் வாருங்கள் என நம்மை அழைக்கிறார் பெருவாழ்வை வழங்குவதற்கு. ''கதிர்நலம் என் இரு கண்களில் கொடுத் தே அதிசயம் இயற்றெனும் அருட்பெருஞ்ஜோதி என்ற திரு அகவல் பெருவாழ்வின் மணிமுடியை சுட்டிக்காட்டு கிறது.

Koviloor Digital Library

உள்ளும் புறமும் ஒத்த நிலையில் செய்யும் உயிர் நலப் பணியே இறைவன் அருளைப்பெறுகின்ற பணி. உண்மை நெறி ஒழுக்க நிலையில் நின்று ஜீவகாருண்ய பணி புரியும் போது மாமனிதர்களை பெருமான் அவ்வப்போது அனுப்பி இடையில் தோன்றும் அச்சத்தை அகற்றுகிறார்சுத்தசாதன நிலையை நாம் பெற வழி காட்டுகிறார். இறை அருள்பெற துணை புரிகிறார்.

அறுதிணை

விலங்கு வாழ்வையும், மனித வாழ்வையும் கடந்து மா மனித வாழ்வை அடைவதுதான் பெருவாழ் வாகிறது. இதையே பெருந்திணை என்று தொல்காப்பியம் குறிப்பிடு கிறது. இந்த உண்மையை புரிந்து கொள்ளாதவர் வெறும் காமவெறிதான் பெருந்திணை என்கின்றனர். தொடக்க தில் உள்ளது விலங்கு நிலை. அதைக்கடந்து மனிதநிலைக் முன்னேறுதல்வேண்டும. இதைத்தான் கைக்கிளைஎன்கிறது தொலகாப்பியம். கைஎன்பது ஒழுக்கத்தை குறிப்பிடுவது கிளை என்பது தோன்றுவதை குறிப்பிடுவது ஒழுக்கம் தோன்றும்போதுதான் மனித இனம் தோன்றுகிறது இதனை பெருமான் பல பதிகங்களில் பாடியிருக்கிறார் அவற்றுள் ஒன்று புனிதகுலம் பெறுகஎன்பது, மற்றொன்று உத்தரஞான சிதம்பரப்பகுதி

திணை ஐந்தும் ஆனது உத்தரஞான சிதம்பரம் என்பர் பெருமான். முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்கிற அருள் திணைகள் ஐந்து வகைப்படும், திணை என்ற சொல்லிற்கு பொருள் கடமையில் உறுதியுடமை என்பது நிலையாத வாழ்க்கையை நித்திய வாழ்க்கையாய் ஆக்குவது தான் திணை நிகழ்ந்தது கூறி நிலையிலும், திணையே என்பர். இதுவரையிலும் நடந்திருப்பதைச் சொல்லி இனிமேல் நிலைப்பெறும்படியாக வாழவேண்டும் என்பதே இதன் பொருள் உயிர்நலப்பணி செய்யும் கடமையில் உறுதியோடு விளங்குவதைத்தான் பெருமான் குறிப்பிடுகிறார். "To be

Koviloor Digital Library

Firm at the Post of Duty " உறுதியோடு உயிர்நலப்பணி செய்வது மட்டுமே உண்மையான வாழ்க்கையாகிறது, இதன் மூலமே கடவுள் உருவத்தைக்கண்டு அனுபவத்தை அடைய முடிகிறது.

நித்திய வாழ்வு

நம்முடைய சுயநலத்திற்காக நாம் இறைவனை இடைவிடாது நினைத்து, வேண்டிப் பிரார்த்திப்பது கேவல சாதகம். எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க என்று பிரார்த்தனை செய்யவேண்டும், இதுவே சுத்தசாதக வழிபாடாகும் என்கிறார் பெருமான். பெருந்தொகையான உயிர்களுக்கு பெரும் நன்மையே செய்வேன் என்ற துணிவு கொள்கையேபோதும். இறைவனே நம்மை நாடி தானே வந்து எல்லா உதவியும் செய்கிறார். அவருடைய அன்பர்களாகிய மாமனிதர்கள் எல்லா வகையிலும் உதவி செய்கிறார்கள். இதைத்தான் இனிய, எளிய பயிற்சி என்றும், சிறிதும் அஞ்சத் தேவையில்லை என்றும் பெருமான் பாடியிருக்கிறார். "அஞ்சலை நீ ஒரு சிறிதும் என் மகனே" என்று தொடங்கும் பாடலும் இதையே குறிக்கிறது. இன்னொரு பாடலில் "சுத்த சன்மார்க்க வீதியில் உனைத்தான் நிறுவுவல், உண்மை விளம்பினேன், வம்மினோ விரைந்து" என்று பெருமான் நம்மை அழைக்கிறார் நானும் நித்தியன் ஆயினேன் என்று தன் வரலாற்றையும் கோடிட்டு காட்டுகிறார்.

இந்த அரியபெரிய நித்திய வாழ்க்கையை எப்படி அடைவது? என்ற கேள்வி ஒவ்வொரு கணமும் தோன்றுகிறது. அதற்குரிய பதிலும் பெருமான் திருவாக்கிலும், உபதேசங்களிலும் வாழ்க்கை அற்புதங்களிலும் ஒன்றன் பின் ஒன்றாக வருவதை நாம் கண்டு மகிழலாம். முத்திறல் வடிவம் என்பது தான் இதற்குரிய ஒரே திறவுகோல். இதே கருத்தை அடிப்படையாகக்கொண்ட நினைவு உருவங்கள் (Thought form) என்ற நூலை எழுதியவர் அன்னை

Koviloor Digital Library

வசந்தெ (பெசன்ட் அம்மையார்) ஆவார். இதனை நன்ருக் கற்று நம் வாழ்க்கையில் மேற்கொண்டவர் இது போன்ற ஆங்கிலநூல்களை திருவருட்பா என்ற உலகப் பொதுமறையை நன்ருக கற்றவர் தவத்திரு சச்சிதானந்த அடிகளார். கற்றதோடு நில்லாது தம்முடைய வாழ்க்கையில் அக்கொள்கைகளை கடைப்பிடிக்கிருர். இன்றும் அமெரிக்கா போன்ற மேல்நாடுகளில் அக்கொள்கைகளை பரப்பி கொண்டும் பல நூல்களை எழுதிக்கொண்டு இருக்கிருர். பல இலட்சக்கணக்கான மேல் நாட்டவர்களை சுத்த சன்மார்க்க கொள்கையில் ஈடுபடுத்தியிருக்கிருர். உலகப்புகழ் பெற்ற ஜோதி கமலாலயம் உருவாக்கியிருக்கிருர். இன்று அவர் வள்ளற்பெருமானின் தூதுவர்களில் ஒருவராகவே விளங்குகிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உண்மை அவர் எழுதியிருக்கும் பதஞ்சலியோக விளக்கத்தில் தெளிவாக தெரிகிறது. அதில் சமாதிபாதம் என்ற முதல் பகுதி முடிந்து சாதனபாதம என்ற இரண்டாவது பகுதியில் முதல் செய்யுள் விளக்கத்தை திருவருட்பா ஒளியில் பார்க்கலாம்.

மூத்திறல் வடிவமும், நினைவின் உருவங்களும்

உடம்பும் மனமும் உயிரைப்போல உணரும் ஆற்றலை பெற செய்கிற டயிற்சி தான் இறை அனுபவ பயிற்சி. அசேதனப்பொருள் சேதனப்பொருளாக (உயிர்) மாறுவதுதான் நித்திய வாழ்வு.

முத்திறல் என்பது மூன்று திறமைகளையுடைய ஒரே வடிவம் நித்திய வாழ்வுடையது 1. சுத்ததேகம் உடல் திறமை குறிக்கிற(கரும) சித்திப்பெறுவதைக் குறிக்கிறது சித்தி என்பது நிலை சேர்ந்த அனுபவம். முத்திறலாகிய சித்தியை, அனுபவத்தை பெறுவதற்கு உடம்பு அடிப்படையாகிறது. அச்சித்தி பெற்றதும் சுத்த தேகமாகிறது. 2. பிரணவதேகம் யோகசித்தியை குறிக்கிற திறமை மன

Koviloor Digital Library

திறமை "சத்தியமாம் சிவசத்தியை ஈந்துஎனக்கு அத்திறல் வளர்க்கும் அருட்பெருஞ்ஜோதி!" என்பது திரு அகவல். சத்தியத்தினுடைய சக்தியை பெறுவது மனம். இதைத் தான் பெருமான் "பொய் வந்த உள்ளத்தில் புகான்" என்கிறார். உண்மை ஒளியில் நிற்கும் போது பிரணவ தேகமாகிறது. 3. ஞானதேகமென்பது ஞானசித்தியாகிய உயிர் திறமையாகும். "ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்ஜோதி என் உள்ளத்து நீதியில் கலந்து நிறைந்தது. நானும் நித்தியன் ஆயினேன்" என்று பெருமான் அனுபவித்துபாடியிருக்கிறார். "முத்திறல் வடிவமும் முன்னியாங்கு எய்துறும் அத்திறல் எனக்கு அருள் அருட்பெருஞ்ஜோதி" "முச்சுடர்களும் ஒளி முயங்குற அளித்தருள்" என்பது திரு அகவல். உயிர், உள்ளம் உடல் என்ற மூன்றின் திறமைகளையும் ஒன்றாகபொருந்தும் படி செய்து நித்திய வாழ்வு பெறுவதையே இது குறிக்கிறது. மூன்று திறமைகளும் துண்டுபடப்பட்டு வீழ்வதுதான் சாவு ஒன்றுபட்டு உயர்வதுதான். பெருவாழ்வு இதனை அருட்பெருஞ்ஜோதி மட்டுமே அருள்புரிய முடியும். 1. "Arul perum Jothi and Deathless Body". 2. Vallalar clair voyant vission" என்கிற இரு ஆங்கில நூல்கள் மேலும் நுணுக்கமாக விளக்குகின்றன.

திறமை மூன்று வகை என்பதைப்போல நினைவின் உருவங்கள் மூன்று வகைப்படும் அவை. 1. நினைப்பவர் உருவம் 2. நினைக்கப்பட்ட பொருளின் உருவம், 3 நினைக்கின்ற செயலின் உருவம் ஆகியவை. இவற்றைக்கொண்டு தான் உண்மையை முழுமையாக உணரக்கூடிய சமாதி நிலையை அடைவது. சமாதி நிலை அடைந்த பிறகு சுத்தசன் மார்க்க சாதகம் நன்கு உருவாகி நிலைப்பெற முடிகிறது.

சமாதி பழக்கம் பழக்கமல்ல. சகச பழக்கமே பழக்கம் என்கிறார் பெருமான். சமாதி என்பது தன்னை மறந்து

Koviloor Digital Library

இன்புறுகல். இவ்வாறு தன்னை மறக்கும்போது பிறர் நலத்தை மறந்துவிட நேருகிறது. சகச பழக்கம் என்பது பிறர் நலத்தை நாடும் இயற்கை பழக்கமாகும். இதில் சமாதி அடங்கி விடுகிறது. முத்தி என்பது விடுதலை சித்தி என்பது நிலைத்த அனுபவ இன்பம்,

கிரிபாலா என்கிற வங்காளப்பெண்மணி அறுபது ஆண்டுகளுக்கு மேல் உண்ணாமலும் உறங்காமலும் நீர் பருகாமலும் இருந்து கொண்டு மற்றவர்களுக்கு உணவை சமைத்து பரிமாறிகொண்டு வருகிறார், இன்றும் வாழ்ந்து வருகிற அப்பெண்மணியைப் பற்றிய விளக்கத்தை ஒரு யோகியின் சுயசரிதம் (The Auto of bia graphy of yougi) என்ற நூலில் காணலாம். இதுவே சகச பழக்கம்.

பதஞ்சலி யோகத்தின் சாதனைப்பாகத்தில் முதல் செய்யுலே கிரியாயோகத்தைப்பற்றியது இதன் பொருள் அற்புதம் செய்யக்கூடிய யோகம் என்பது அன்றாட வாழ்வில் நாம் கவனமாக செய்கிற செயல்களையே குறிக்கிற அதுவும் தவம் ,கற்பனைக்கற்றல், கடவுளுக்கு நம்மை அர்ப் பணம் செய்யல் என்று மூன்று வகைப்படும்

நினைவு உருவங்கள் மூன்றும் நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் கவனமாக செய்கிற ஒவ்வொரு செய்கை யிலும் அமைந்து விளங்குகின்றன அவற்றுள் நினைக்கின்ற உயிர்தான் விரும்புகிற இடத்தை அடைகிறது. அது முதலில் நினைவு உருவத்துடன் செல்கிறது இதை உயிர் ஒளி என குறிப்பிடலாம். இதனை மனோவேகத்தில் செல்லுதல் என்பர், ஒரு உண்மையை மனதில் நினைக்கின்றோம் அதை செய்து முடிப்பதற்கு முன் நம் மனதில் தோன்றும் நினைவு நம் உருவத்தில் சிறு அளவு தோன்றுகிறது இது மிக விரை வாக நாம் போக விரும்பும் இடம் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அங்கு சென்று சேர்ந்து விடுகிறது, அங்கே அந்த உருவம் படிப்படியாக வளருகிறது நாம் விரும்பும் ஒருவரின் மனதிலும் தோன்றுகிறது அதுவே விரிவடைந்து

Koviloor Digital Library

அந்த நண்பரின் கண் முன்னும் நம் உருவம் தோன்றி அவரை மலைக்கச் செய்கிறது இந்த காட்சியை தடைத விர்காட்சி (Clair voyance) என்பர் மனோ வேகம் வாய்வு வேகம் என்ற சொற்றொடர்களிலும் இந்த உண்மை பளிச் சிடுவதை பதஞ்சலி முனிவர் விளக்குகிறார்

நினைப்பவர் உருவம் 2 நினைவின் உருவம் 3 நினைக்கப் பட்ட பொருமானின் உருவம் என்ற மூன்றும் ஒன்றுபடுவ தால் முழு அனுபவம் ஆகிறது தன்னைத்தான் அறிந்து இன்புறும் யோகியும் இந்த நினைவு உருவத்தைக்கொண்டே தன்னை மறந்தும் (Trance) இன்புறுகிறார். இந்த நினைவு உருவங்கள் மூன்றும் ஒன்றுபட்டு உயரும்போதுதான் நித்திய வாழ்வு உருவாகிறது

இந்த அரிய செய்தியை அன்னை வசந்தை எழுதிய நினை வின் உருவங்கள் என்ற புத்தகத்தில் விரிவாக காணலாம் மறைவாக இருந்து அன்பர்கள் விரும்பும்போது மட்டும் வெளிப்பட்டு உதவி செய்பவர்கள் மாமனிதர்கள், அவ.ட களைப்பற்றி உதவி மறையோர் (Invissible Helpers) என்ற புத்தகத்தில் காணலாம் இவ்விரு நூல்களையும் நன்குக கற்றிருக்கும் சச்சிதானந்த அடிகள் பதஞ்சலி யோகத்திற்கு ஆங்கிலத்தில் எழுதிய விளக்கவுரை வள்ளலாரின் உண்மை நெறி விளக்கமாகவே அமைந்திருக்கிறது உண்மை நெறி யில் முதலில் உள்ள இந்திரிய ஒழுக்கம் கரண ஒழுக்கம் இரண்டும் தவம்புரிதலை உணர்த்துகின்றன அடுத்துள்ள ஜீவ ஒழுக்கம் ஆன்ம ஒழுக்கம் முறையே கற்க வேண்டிய வற்றை கற்கவேண்டும் என்பதை உணர்த்துவதோடு கற்ற கல்வி, தவம் இரண்டின்பயனை கடவுளிடம் அர்ப்பணித்து விடுவதையும் குறிக்கின்றன

இயற்கை உண்மை விளக்க இன்பத்தை குறிப்பது சிவம் உள்ளது விளங்க இன்பம் நிரம்பும் என உணர வேண்டும். இதுதான் கற்பன சுற்றல்: இதுவே ஜீவ ஒழுக் கம் என்பது நாம் அடையும் பயனை ஆண்டவனுக்கு அர்ப்

Koviloor Digital Library

வணிப்பதை ஆன்ம ஒழுக்கம் குறிக்கிறது. நினைவின் உருவங்கள் மூன்றில் முதல் உருவம் நினைப்பவரைப் பற்றியது. அது தவம் புரிபவரை குறிப்பிடுகிறது. இதனை இந்திரிய ஒழுக்கமும், கரண ஒழுக்கமும் விளக்குகின்றன.''

தவம் புரிதல் என்றால் என்ன? தன்னைத்தான் வருத்திக் கொள்வது தவம் அன்று. அதைப்பற்றி புரியாதவரே அப்படிக்கூறுவர். தவம் என்பது அன்றாட வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் துன்பங்களைப்பொறுத்து கொள்வதும், மற்ற உயிர்களுக்கு எந்த வகையிலும் துன்பம் செய்யாமையும் தான் தவமாகும். ''உற்றநோய் நோன்றல் உயிருக்கு உறுகண் செய்யாமை, அற்றே தவத்திற்கு உரு'' என்கிறது திருக்குறள் இதில் உள்ள உரு என்ற சொல் நினைவின் உருவத்தை மட்டும் குறிக்காது. மேலும் அனுபவத்தின் உருவை, உணர்வின் உருவை அறிவின் உருவை குறிப்பதோடு அன்புருவம், அருளுருவம், இன்புருவம் என்கிற மூவகை இன்ப உருவையும் குறிக்கும். இதனை பெருமான் ஏழு அடுக்கு மாளிகையாகிய இந்த உடம்பை அன்புருவம், அருளுருவம், இன்புருவம் என்று மூவகையாக தொகுத்து விளக்குகிறார்.

இந்த விளக்கத்தை மாணிக்க வாசகரைப்பற்றி பெருமான் பாடல் ஒன்றில் கண்டு மகிழலாம், பாடலின் முதல் இரண்டு அடிகளை மட்டும் முதலில் குறிப்பிடவேண்டியுள்ளது. ''மண்புகுவ நடுமுதலா மனம் புதைத்து நெடுங் காலம் என்புருவாய் தவம் செய்வார் எல்லாரும் ஏமாக்க'' என்பதாகும். மனதை புகுவநாடு முதலிய பல இடங்களில் புதைத்து நிற்கும்படி செய்து பல ஆண்டுகள் தொடர்ந்து தவம் செய்கின்றனர். அதனால் உடம்பு எலும்பும் தோலுமாகமாறுபடுகிறது. இப்படி துன்புற்றவர்களுக்கும் கிடைக்காத பெரும் பேற்றை (நித்தியவாழ்க்கையை) மாணிக்க வாசகருக்கு இறைவன் வழங்கியிருக்கிறார் என்றுபெருமான் பாராட்டியிருக்கிறார்.

Koviloor Digital Library

தன்னை வருத்தி துன்புறுத்துவதைவிட தனக்கு எதிர்பாராமல் வருகின்ற இடையூறுகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு மற்ற உயிர்களுக்கு அன்புகாட்டும்போதுதான் அன்புருவம் கிடைக்கிறது. இதை சுத்ததேகம் என்பர்; நினைவு உருவத்தில் பொருளைப்பற்றி நினைக்கின்ற உருவத்தை குறிக்கும். அன்பின் விளைவாகத்தான் இந்த தூல உடம்பும் உருவானது; {2} இதே அன்பை பெற்ற பிள்ளைகள்; உற்றார் உறவினர் என்ற எல்லையைக் கடந்து, மற்ற உயிர்களிடம் காட்டும்போது அந்த தூலமான அன்புருவம் விரிவடைகிறது. அருளுருவம் உருவாகிறது. இது தான் பிரணவ தேகம், யோக சித்தியின் வடிவம் என்றும் கூறுவர் இதனை அறிவு வடிவு என திருமூலர் விரிவாக உணர்த்துகிறார். {3} அருளுருவம் விரிவடைகிறபோது, அதுவே இன்புருவமாகி நிலைபெற்று விடுகிறது. இதை பெருமான் சிவமாதல், தயாவண்ணமாதல் என உபதேசித்திருக்கிறார். இந்த இடத்தில் 'நினைக்க தனக்கு' என்ற உலகஉரைஇங்கு கவனிக்கத்தக்கது. உலகம பலவிதம் என்று கூறுமல் உலகு அம்பலவிதம் என்று பகுத்து உரைப்பதிலும் இந்த உண்மை அடங்கி நிற்கிறது.

நம் உச்சியில் இருக்கும் சிற்றம்பலம்தான், பொற்கோயில்தான் பேரம்பலமாக விரிகிறது. நம் அனுபவம், உணர்வு, நினைவு, அறிவு இந்த நான்கு படிகளும் கடந்து ஐந்து, ஆறு, ஏழாவது படிகளாக இம்மை, மறுமை, பேரின்பம் என்ற மூன்றும் அமைகின்றன, இதனையே ஜீவ காருண்ய ஒழுக்கம் விரித்து விளக்குகிறது. ஒருவர் இன்னொருவருக்கு துணை செய்ய விரும்புகிறார், அவருடைய நினைவின் உருவம் (Aura) துணை செய்யவேண்டியவரின் ஒளி வட்டத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறது, அவருக்கு இருக்கும் தீமையைப்போக்கி நன்மையே செய்கிறது, நன்மை செய்ய விரும்பியவருக்கு நன்மையே விளைகிறது, ஆனால் ஒருவர் இன்னொருவருக்கு தீங்கு செய்ய நினைத்தால் அந்த நினைப்பு நினைத்தவரையே திரும்ப வந்து தாக்கு

Koviloor Digital Library

கிறது. இதைத்தான் 'நினைக்க மனக்கு' என்ற உவகு உரை உணர்த்துகிறது.

நினைவின் உருவங்கள் செய்யும் அற்புதங்களில் மற்றொன்றை இங்கே கவனிப்போம். ஒரு நாடக ஆசிரியர் தான் விரும்பும் பாத்திரங்களைப்பற்றியும், அவைகள் கூடி நின்று நடிக்கும் முறைகளைப்பற்றியும் சிந்திக்கிறார். இந்த சிந்தனையை இயற்கையின் சூட்சும வடிவத்திலுள்ள அரு அருவமாக வாழும் அனைவரும் கண்டுகொள்ள முடியும். தூலதேகத்தில் வாழ்கின்றவர்கூட தடைதவிர்காட்சி (clair voyance) உடையவராயிருந்தால் கண்டுகொள்ள முடியும்.

ஒருவர் ஒரு கதையை ஆரம்பிக்கிறார் முடிப்பதற்கு முன்னே அக்கதையில் பல மாற்றங்கள் அவருக்கு தெரியாமலேயே உண்டாகி விடுகின்றன, இதற்குரிய காரணம் நாடக ஆசிரியராக இருந்து இறந்துபோன தன் நண்பர் தான் தன் கனவில் வந்து உணர்த்த கேட்டு எழுதினேன் என்பதை நாம் கேட்டு மகிழ்கிறோம். இந்த உண்மையை அருவ உடம்பில் வாழ்பவர் யாரும் அறிந்து கொள்ள முடியும், நரை, திரை, மூப்பு வந்தபிறகும் அவற்றை நீக்கி சாக்காட்டையும் தவிர்க்கலாம். மறைந்து போனதாக கருதும் இளமையை திரும்பவும் அடைந்து மகிழலாம், இதை பெற்றிட நம்மை விரைந்து விரைந்து முயன்றிடுமின்என்று பெருமான் கட்டளையிடுகிறார்.

விரைந்து என்ற சொல்லில் முதல்பகுதி விரை அதன் பொருள் மணம் என்பது மணம் மாறிவிட்டபொருள்களுக்கும் மணத்தை ஊட்ட முடியும், அதற்குரிய அளவு போதுமான விரைவு (வேகம்) வேண்டும், அந்த வேகமும் விவேகமாக மாறவேண்டும், ' அவசரமாக முறையற்ற செயலில் ஈடுபட்டு அழிந்துவிடக்கூடாது. விரைவும், நிறைவும்ஒன்று சேர வேண்டும். இதைத்தான் மாணிக்க வாசகர் ' வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க' என்று நமக்கு வெற்றி கூறுகிறார். வாழ்க அவர் திருவாக்கு வெல்க இறை அனுபவ பயிற்சி.

Koviloor Digital Library

வள்ளலார் வழங்கும் வாழ்வு

—வ.மு.ரா.

வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது, வாழ்க்கை
எலாம் வாழ்க்கை என மதித்து மயங்காதீர்
மையகத்தேஉறு மரணவாதனையைத் தவிர்த்த, வாழ்க்கையதே
வாழ்க்கை என மதித்ததனைப் பெறவே
மெய் அகத்தே விரும்பி இங்கே வந்திடுமின் எனது, மெய்ப்
பொருளாம் தனித்தந்தை இத்தருணந்தனிலே
செய் அகத்தே வளர்ஞான சித்திபுரந்தனிலே, சித்தாடல்
புரிகின்றார் திண்ணம் இதுதானே

செய் அகத்தே—பணிபுரிகிற இடம்

இது பெருவாழ்வைப் பற்றி வள்ளலார் வழங்கியிருக்கும் விளக்கம். மண்ணுலகிலும் வானுலகிலும் மற்று எவ்வுலகிலும் இப்போது வாழ்வாங்கு வாழவில்லை. உயிரும், மனமும் அழியாதவை என்பது மாத்திரம் எவருக்கும தெரியும் மனம் அழியாதது என்பதை விளக்க ஒருமையில் தாம்பெற்ற கல்வி மற்ற பிறவிகளில் எல்லாம் தொடர்ந்து உதவி வருகிறது என்பதை திருவள்ளுவர் கூறுகிறார்.

தகுந்த எண்ணமும் சிறந்த புகழும் எப்போதும் அழிவனவல்ல, அதாவது அழியாத உயிர் அழியாத மனம், அழியாத எண்ணம். அழியாத புகழ் என்ற நான்கு எல்லேயில் ஐந்தாவதாக உடம்பும் அழியாமல் வாழமுடியும். இதனை வள்ளற்பெருமான் வாழ்க்கை நமக்கு நின்கு

Koviloor Digital Library

உணர்த்துகிறது ''வம்மின் உலகியலீர் மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்'' என்று பெருமான் குறிப்பிடுகிறார்.

பெருவாழ்வு வாழ்வது எல்லாருக்கும் இயல்வதுதான். இதை என்னுடைய வாழ்க்கையிலிருந்தே நீங்கள் கண்டு கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? என்பதைத்தான் கண்டீர் என்ற சொல் உணர்த்துகிறது. மரணம் வருவதற்கு ஒரே காரணம் உள்ளும்புறமும் ஒத்திராத வஞ்சக வாழ்க்கை தான். இதை 'மையகத்தே உறும் மரணவாதனையைத் தவிர்த்த வாழ்க்கையதே வாழ்க்கை'' என மேலே உள்ள செய்யுள் வற்புறுத்தி சொல்லுகிறது.

மை என்பது வஞ்சனை, வஞ்சனையால் பலருக்கும் துன்பம் ஏற்படுகிறது. இதைத்தான் மரணவாதனை என்று செய்யுளில் குறிக்கப்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பது எப்படி என்றும் செய்யுள் விரித்து விளக்குகிறது. ''ஆற்றி தனைத்தடுத்திடலாம் என்னொடும் சேர்ந்திடுமின் என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே''. இறைவனை பரிபூரணமாக நம்பி என்னிடம் விரைந்து வாருங்கள் நான் உங்கள் பெருவாழ்வுக்குரிய முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறேன் என்று உறுதியாக தெரிவிக்கிறார். இதைச் ''சதநிய சுத்த சன்மார்க்க வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை, வம்மினோ விரைந்து'' என்று அழைக்கிறார்.

காலதாமதம் செய்யாமல் விரைந்து வந்தால் இறைவன் வருகின்ற தருணம் எது என்றும் உங்கள் அழியும் உடம்பை அழியா உடம்பாக மாற்றுவது எப்படி என்றும் நான் சொல்லுகிறேன் என்று பெருமான் நம்மை அழைக்கிறார் ஞானசரியை என்ற பதிகத்தில் விரைந்து விரைந்து அடைந்திடுமின் திரைந்து, திரைந்து உறுத்த கும இளமை அடைந்திடலாம் என்று வழிகாட்டுகின்றார். பெருவாழ்வு வாழ்கின்ற நமபெருமான் சொற்களில் யாரும் மயக்கம்

Koviloor Digital Library

அடையத்தேவையில்லை ஐயம், திரிபு, அறியாமைக்கு இடம்தராததுதான் திருவருட்பா.

திருவருட்பா என்ற தொடரே மெய்ப்பொருளை வழங்குகிற பாடல்கள் நிரம்பிய நூல் என்றே பொருள் தருகிறது, திரு; மெய்ப்பொருளையே குறிக்கும். என்பதையும் பெருமான் உபதேசம் விளங்க வைத்திருக்கிறது. திருவாசகம், மெய்ப்பொருள் நிரம்பிய வாசகம், மெய்ப்பொருள் வழங்கும் வாசகம் என்பதே உபதேசப்பகுதி.

எண்ணமும், புகழும் உகுந்தமுறையில் அமைய வேண்டும். எண்ணத்தின் வடிவங்களை நன்ருக உணர்ந்து கொள்ள வேண்டும். எண்ணத்திற்கு 4 வடிவங்கள் உண்டு. 1. எண்ணுகிறவர் வடிவம 2. எண்ணப்படும் பொருளின் வடிவம் 3. எண்ணும் எண்ணத்தின் செயல் வடிவம் 4. எண்ணத்திஞல் உண்டாகும் பயன்தரும் தன்மையின் வடிவம், இந்த நான்கு வடிவங்கள் தான் நிலையான புகழையும், வாழ்வாங்கு வாழும் வழியையும் காட்டக்கூடியவை. ஒருவர் நல்ல எண்ணம் எண்ணும்போது அவரைச் சுற்றி வெளிபட்டுக் கொண்டிருக்கும் ஒளிவட்டம் நல்ல ஆற்றல் முழுவதையும சூழ்நிலையிலிருந்தும் உள்ளத்திலிருந்தும் பெற்று விளங்க முடியும்.

எண்ணமும், எண்ணப்படும் பொருளும் பொருந்துகின்றபோது எண்ணியவர் வாழ்க்கையும் எண்ணப்படும் பொருளின் உபயோகமும் உயர்ந்து விளங்கும். எண்ணத்தின் தன்மைக்கு ஏற்ப சென்றகால நிகழ்ச்சியையும், வருங்கால நிகழ்ச்சியையும் எளிதாக உணர்ந்து கொள்ள முடியும் நிகழ்கால வாழ்க்கையையும் செம்மைப்படுத்துவதற்கு அவை துணைபுரியும்.

இதனை விளங்கி கொள்வதற்கு பெருமான் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியின மூலம் அறியலாம். மனிதனைச்

Koviloor Digital Library

சுற்றியுள்ள ஒளிவட்டத்தைக் காணவல்ல ஒருசித்தராகிய திரிசிரபுரம் இராமலிங்க அடிகள் எனும் சாமியார் ஒரு நாள் திருவொற்றியூரில் வள்ளற் பெருமானைக்கண்டவுடன் உத்தமர் ஒருவர் வருகின்றார் என எழுந்து நின்றார். தன் நிர்வாண நிலையை மாற்றி ஆடை அணிந்து கொண்டார். மற்றவர்களிடத்தில் காணும் நிறவேறுபாடுகளை ஒளிவட்டத்தில் கண்டு அவரவர் இந்த இந்த குணமுடையவர் என்று கூறுவார் அந்தசாமியார். பெருமானைச் சுற்றியுள்ள ஒளிவட்டம் தூய வெள்ளை நிறமுடையதாய் இருந்ததைக் கண்டு உத்தமர் என்றார். ஒளிவட்டம் காணக் கூடிய ஆற்றலுடையவர் நிகழ்காலத்தில் நடக்கக் கூடியதை கண்டுப்பிடிக்க முடிகிறது என்பதை இந்நிகழ்ச்சி நமக்கு விளக்குகிறது.

இவ்வாறே சென்றகால நிகழ்ச்சியையும் அறிந்து கொள்ளமுடியும். 1874ல் வள்ளற்பெருமான் தம்உடலை ஒளிஉடம்பாக சித்திவளாக திருமாளிகையில் எப்படி மாற்றிக்கொண்டார்? என்பதை அரவிந்த ஆசிரம அந்தணர் கங்காதரர் என்பவர் கண்டு நமக்கு விளங்கவைத்திருக்கிறார். இதனை "அருட்பெருஞ்ஜோதியும் அழியா உடம்பும்" என்ற ஆங்கில நூலில் காணலாம், இந்நூலை சென்னை சர்வகலாசாலை வெளியிட்டுள்ளது.

வருங்கால நிகழ்ச்சியையும் ஒளிவட்டம் மூலம் காண முடியும் என்பதை ஒரு நிகழ்ச்சியின் மூலம் உணரலாம். கோடக நல்லூர் சுந்தரடிகள் வள்ளற்பெருமானை சிதம்பரத்தில் கண்டு கலந்து உரையாடிய பிறகு திரும்பிச் சென்றார். அப்போது பெருமான் அத்துறவியை உற்றுநோக்கிக் கொண்டே கண்ணீர் வடித்தார். இதனை அங்கிருந்த அன்பர்கள் கண்டு கண்ணீர்வடித்ததற்குரிய காரணத்தை அறிய விரும்பினார்கள். இதனை உணர்ந்த பெருமான் அவர்களுக்கு விளக்க முற்பட்டார்.

Koviloor Digital Library

இப்போது நம்மிடம் பேசிக்கொண்டிருந்த சுந்தர அடிகளைச்சுற்றிஒளிவட்டம் சுழல்வதைக்கண்டேன். அதில் இவர் இன்னும் ஆறுதிங்களில் இறந்து விடுவார் என்பதை விளக்குகிற இறுதியாத்திரை நிகழ்ச்சியைக் கண்டேன். அந்த இறுதியாத்திரை காட்சிக்கு முன்பகுதியில் நிறை நிலவின் உருவம் 6 தரம் தோன்றியது. அதனுல் அவரின் இறுதியாத்திரை 6 மாதங்களில் நடைபெறும் என அறிந்து கண்ணீர் விட்டேன் என்ருர் பெருமான்.

நோவாது நோன்பு எனைப்போல் நோற்றவரும்
எஞ்ஞான்றும்
சாவா வரம் எனைப்போல் சார்ந்தவரும்-தேவா நின்
பேரருளை என்போலப் பெற்றவரும் எவ்வுலகில்
யார் உளர் சற்றே அறை

மரணமிலா பேரின்ப பெருவாழ்வின் இரகசியம் விளங்கும்படியாக இப்பாடலை ஓதவேண்டும். எஞ்ஞான்றும் சாவாவரம் என்றநிலையில் பொருள் காணமுற்படுவது தவறு, எஞ்ஞான்றும் நோவாது நோன்பு எனைப்போல நோற்றவரும் என்று மாற்றி படித்து பொருள் கொள்ள வேண்டும். பெருவாழ்வு என்பதே நித்திய வாழ்வு தான். அதற்கு எஞ்ஞான்றும் என்ற அடைமொழி பொருந்தாது. எப்போதும் சாவாது இருப்பது தான் நித்தியவாழ்வு இதை எதைப்போன்றது, ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'' என்பதைப் போன்றது, இந்தப் பாடலிலும் ஆதிபகவன் என்று சேர்த்து படித்து பொருள் கொள்ளக் கூடாது. இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன், எப்போதும் இருப்பவன் ஆகவே இறைவனை ஆதி பகவன் என்றும் பாதி பகவன் என்றும் எண்ணுவது தவறு.

பொதுவாக எல்லோரும் நடத்துகிற வாழ்க்கைசெத்து செத்து பிழைப்பதாகவே இருக்கிறது. ‘‘உயிர்களிடத்தில் அன்பு வேண்டும், தெய்வம் உண்மை என்று தானறிதல்

Koviloor Digital Library

வேண்டும், வயிர முடைய நெஞ்சு வேண்டும், இது வாழும் முறைமையடி பாப்பா என்பது கவிஞன் கருத்து நித்திய வாழ்விற்குவயிர முடைய நெஞ்சு தான் திறவுகோலாகும். கடமையில் உறுதி உடைமைதான் இணை என்று தமிழில் வழங்குகிறது. எதையும் உறுதியாக செய்யவேண்டுமானுல் உயிர்களிடத்தில் அன்பு இல்லாமல் அதுநடைபெறுது. உயிர்ப்பணிதான் பெருவாழ்விற்கு திறவு கோலாகிறது.

இப்பாடலில் இன்னெரு புதிரும் இருக்கிறது. அது தான் நோவாது நோற்பது, நோற்பது என்ருல் விரதம் இருப்பது என்று தான் எல்லோரும் அறிவர். நோன்பு என்பது கொன்று தின்னுமை என்றும் சான்றேர் கூறுவர். தனக்கோ, பிறருக்கோ துன்பம் இல்லாமல் எந்தகாரியத்தையும் செய்பவர் மட்டுமே: செல்வமும், செல்வாக்கும் உடையவராக விளங்குவர். இந்த பொருள் இரண்டும் ஒன்றுக் கொன்று முரண்படுவது போல தோன்றும். விரதம் இருப்பதில் ஒரு வேளை உணவை விடுவதுகூட பலருக்கு துன்பமாகவே தோன்றும். ஆனுல் உடம்பும், உள்ளமும் தூய்மையாவதற்கு தொடர்ந்து உண்டுக் கொண்டேயிருப்பது தவறு, உடம்பிற்கும் உள்ளத்திற்கும் ஓய்வு தருவதே விரதம். இதுவே மருத்துவ உலகத்தின்மணி முடியாக விளங்குகிறது. இதைத்தான் லங்கணம்(பசி)பரம ஔடதம் என்பர்.

பரம ஔடதம் என்பது உலக அனுபவத்தை மட்டும் குறிப்பிடுவதில்லை நோயினை போக்கும மருந்தை மட்டும் குறிப்பிடவில்லை. ''ஞான மருந்து இம்மருந்து'' என்ற பெருமான் வாக்கு இங்கு கவனிக்கத்தக்கது. நம்முடைய எண்ணமும், உணர்வும், நம் உடம்பையும். மனத்தையுமே சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது. நம் தூல உடம்பையும், சூட்சும உடம்பையும் கடந்து காரண உடம்பு என்கிற இன்ப உடம்பில் புகவேண்டும், இதுதான் நோன்பு இது தான் யோகம்.

Koviloor Digital Library

ஞான யோகத்தில் ஓங்கார அணை ஐந்து உறுப்புகளையும், ஐந்து ஒலிகளையும் உடையது. அவற்றுள் அ என்பது முதல் உறுப்பு. அ என்பது எண் சாண் உடம்பை குறிக்கிறது. உ என்பது இரண்டு வகை மூச்சைக் குறிக்கிறது. நித்திய மூச்சு உருவாவதற்கு நாசி வழியாக இயங்கும் அநித்திய மூச்சு பயன்பட வேண்டும். நித்திய மூச்சாகிய வாசி உருவானவுடன் அநித்தியமூச்சு நிறுத்தப்பழகவேண்டும் இந்த இரண்டு மூச்சுகளையும் தக்க முறையில் எண் சாண் உடம்புடன் சேர்த்து, காரண உடம்பு என்கிற இன்புருவத்தில் நிலைபெறச் செய்வதுதான் எட்டுஇரண்டும் சேர்த்தலாகும்.

இந்த உண்மையை பெருமான் "பெட்டி இதில் உலவாத பெரும்பொருள் உண்டு இது நீ பெறுக" என்ற பாடலிலும், தத்துவ நிலைகளைத் தனித்தனி கடந்த்த என்ற பாடலிலும் தெளிவாக எடுத்து விளக்கியிருக்கிருர். யாமும் எம் உணர்வும் ஒருங்குற கரைந்து போயினம் என்பதுதான் ஒத்த நிலமும், ஒத்த பொருளும் ஆகும்.

இந்த உண்மையை திருவாசகத்தில் மாணிக்கவாசகர் கூறியதை கவனிப்போம்.

"செத்திடவும் பிறந்திடவும் இனி சாவாது இருந்திடவும்
அத்தனையும் அறியாதார் அறியும் அறிவு எவ்வறிவோ?
ஒத்த நிலம் ஒத்த பொருள் ஒரு பொருளாம் பெரும்பயனை
அத்தன் எனக்கு அருளியவா(று) யார் பெறுவார்
அச்சோவே

பசியே தெய்வீக மருந்து என்பது மற்றொரு பொருள். ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் பசியை ஒரு ஒப்பற்ற உபகார கருவி என்கிருர் பெருமான். பசி படிப்படியாக துன்பத்தை உண்டாக்கி உயிரையே உடலிலிருந்து நீக்கிவிடுகிறது" என்கிருர் பெருமான். 'அற்ருர் அழி பசி தீர்த்தல் அஃது உடம்பு பெற்ருர் நெடிது உய்க்குமாறு" என்பது திருக்

Koviloor Digital Library

குறள். அழிபசி என்ற தொடர் உடம்பை அழிப்பது என்று மட்டும் சொல்லாமல் அழுக்கையும் அறியாமையையும் ஒருங்கே அழிப்பது என்று கொள்ளலாம். பசியை அழிப்பது நித்திய வாழ்வின் அடிப்படையாகும்.

ஒவ்வொருவருக்கும் ஒரு உயர்ந்த கொள்கை உண்டு. அந்த முறையில் வள்ளலார் கொள்கையின் மணிமுடி. ''நோவாது நோற்பது'' தான். அகிம்சை இல்லாமல் சத்தியத்தை காணமுடியாது என்று காந்தியடிகள் உறுதியாக நம்புகிருர், அகிம்சையை வற்புறுத்துவதாக உளளது காந்தியடிகளின் கொள்கை. இதனை ''அகிம்சா பரமோ தர்மா'' என்பர். இன்னுசெய்யாமையே இறை அறமாகும் என்பதே இதன் பொருள்.

இதையே திருவள்ளுவர் கொல்லாமை என்றும் இன்னு செய்யாமை என்றும் சொல்லுவார். நோய் என்ற சொல் லிற்கு துன்பம் என்பதுதான் பொருள். ''நோய் எல்லாம் நோய் செய்தார் பாலவாம் நோய் செய்யார் நோயின்மை வேண்டுபவர்'' நோய் யாருக்குவருகிறது என்ருல் பிறருக்கு துன்பம் செய்தவருக்குத்தான் நோய்வரும். துன்பமே வேண்டாதவர் எந்த உயிருக்குமே துன்பமே செய்யாதிருப் பவர் என்பது இதன் பொருள். ''நோய்கள் உற்றிடும் பேய்கள் தங்களுக்கு தூய்தல் ஒற்றியூருக்கு ஏய்தல் இல்லையே'' என்பர் பெருமான். பிறருக்கு நோய் செய்த வரையே நோய் அடைகிறது, துன்பம் சேருகிறது, இதனுல் ஜீவகாருண்யம் இல்லாதவர்களை கடினசித்தர்களை பேய் களுக்கு ஒப்பிடுகிருர். வள்ளற் பெருமான் நோவாது நோற்று பெருவாழ்வைப்பெற்றதோடு நில்லாமல் என்னைப் போல பெற்றவர் யாராவது? எங்கேனும் உண்டா! என்று இறைவனிடமே கேட்கிருர்; நோவாது நோற்பது, பேரருள் பெறுவது, சாவாவரம் பெறுவது முறையே சுத்த, பிரணவ, ஞான முத்திறல் வடிவங்களைக் குறிக்கும். நோவாது நோற்பதால் சுத்ததேகம் பெறுவது, பேரருளால்

Koviloor Digital Library

பிரணவதேகம் பெறுவது, சாவாவரம் மெய்ஞ்ஞானத்தால் பெறுவது ஆகும்

நோவாது நோற்பதால் தூய உடம்பு அமையும். இதனை பெருமான் தன் அனுபவத்தில் கண்டு நமக்கு உறுதியாக சொல்லுகிறார். உடம்பு தூய்மையாவது என்பது முறைப்படி வேலைசெய்வதையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும். இதனை உழைக்கும் வழியே பிழைக்கும் வழி'' என்று பழமொழி உணர்த்துகிறது. இவ்வுலகில் செல்வம் உடையவர் சிலராகவும் வறியவர் பலராகவும் இருப்பது ஏன் என்ற கேள்விக்கு வள்ளுவர் தரும் விளக்கம் என்ன? ''இலர் பலராகிய காரணம் நோற்பார் சிலர்—பலர் நோவாதவர்'' எந்தக் குறிக்கோளும் இல்லாமல் மன உறுதியும் இல்லாமல், உயிர்ப் பணியும் செய்யாமல் எதையும் செய்வது வேலை செய்வது அன்று. உயிர்ப் பணிக்கு என்றே வேலை செய்ய வேண்டும். எந்த வகையிலும் உயிர்ப் பிணியாக (துன்பம்) மாறக்கூடாது.

ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் ஏழு நிலைகள் உண்டு. அதில் ஒன்று பிணிதீர்த்தல். பிணியும் பலவகைப்படும்; அவற்றுள் உடம்பிற்கு மட்டும் துன்பம் செய்கிற பிணி ஒரு வகை அது உடம்பில் முள் தைப்பது போன்றது. 2 உள்ளத்திற்கு துன்பம் தருகிற பிணி இன்னொரு வகை. அது எடுத்ததற்கு எல்லாம் கவலைப் படுவது. 3 உயிர்ப்பிணி வராமலிருக்க இறைவனிடம் அனைத்தையும் (அர்ப்பணிக்கும்), விட்டு விடும் மனப்பக்குவம் பெறவேண்டும். உயிர்ப்பிணியை வள்ளற்பெருமான் அமிர்த்தல் (சந்தேகப் படுதல்) என்று குறிப்பிடுகிறார்.

இன்றைய மருத்துவ உலகில் பிணிகளை இரண்டு வகையாகபிரிப்பர். அவற்றுள் ஒன்று உடல் பற்றிய பிணி. மற்றொன்று மனம் பற்றிய பிணி என்பர். இந்த இரு பிணிகளை தரக்கூடிய மூன்றாவது வகைப்பிணி உயிர்ப்பிணியாகும்

Koviloor Digital Library

இப்பிணியை வள்ளற் பெருமான் ஒருவர்தான் அறிந்திருக்கிருர். ''உடற்பிணி அனைத்தையும் உயிர்ப்பிணி அனைத்தையும் அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே'' என்பது திரு அகவல் அடர்ப்பற—நெருக்கம் நீங்க அயிர்ப்பற என்பது ஐயம் தீர என்பது பொருள்

ஐயம் தீருவது என்பதை வேருெரு வகையிலும் பெருமான் உடலோடு சம்பந்தப்படுத்தி கூறுகிறார். ஐயம் என்பதிற்கு கோழை என்ற பொருளும் உண்டு. மனதில் ஐயம் தோன்றினுல் அது உடம்பின் சூட்டை குறைக்கிறது; குளிர்ச்சியைப் பெருக்குகிறது. எனவே மனதில் தோன்றுகிற ஐயமும், உயிரில் தோன்றுகிற ஐயமும் சேர்ந்துதான் உடம்பில் தோன்றுகின்ற ஐயத்தை உருவாக்குகின்றன.'' ஐயமும் திரிபும் அறுத்து எனது உடம்பினுள் ஐயமும் நீக்கிய அருட்பெருஞ்ஜோதி—திரு அகவல்

''தேவா, நின் பேரருளை என்போல் பெற்றவர் எவ்வுலகில் யார் உளர்'' என்று வள்ளற்பெருமான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை கேட்கிருர். அதற்கு ஆண்டவர் தந்த பதில் என்ன?''எல்லாம் வல்ல சித்து எனக்கு அளித்து எனக்கு உனை அலாது இலை எனும் அருட்பெருஞ்ஜோதி'' திரு அகவல், ஆண்டவர் பெருமானுக்கு எல்லாம் வல்ல சித்தை பரிசாக அளிக்கிருர். நீயே முத்திறல்வடிவம் பெற்ருய். உன்னைத்தவிர யாரும் எனக்கு இதுவரையும் இல்லை என்கிருர். இனிமேல் உன்னுடைய முயற்சியால் பலர் தோன்றவேண்டும் என இறைவனே பதில் தருகிருர். ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே என்று பெருமான் பெருமிதத்தோடு பாடுகிருர்.

இறைவன் பெருமானுக்கு வரங்கல் பல வழங்கியிருக்கிருர். அவற்றுள் ஒன்று ஏகசிற்சித்தி. ''ஏகசிற்சித்தியே இயலுற அனேகம் ஆகியது என்ற என் அருட்பெருஞ்ஜோதி திரு அகவல் 126 வது பாடல் சித்திகள் பலவகைப்படும். எல்லாவற்றிற்கும் மூலம் ஏகசிற்சித்தி. ஏகசிற்சித்தி என்பது

Koviloor Digital Library

தான் மரணமிலாப் பெருவாழ்வு. மற்றசித்திகள் உயிர்ப் பணி செய்வதற்கு துணைபுரிவன. உடம்பால் செய்யும் கரும சித்தியும், மனதால் செய்யும் யோக சித்தியும், உயிரால் செய்யும் ஞான சித்தியும் ஏகசிற்சித்தியிலிருந்தே தோன்றியவையாகும்.

சித்தி என்பதே பெருவாழ்வு பெறுவதுதான். அதை மூன்று வகையாக பிரிப்பதற்கு காரணம் என்ன? உடம்பும், மனமும், உயிரும் ஒருமையுடன் உயிர்ப்பணிச் செய்ய வேண்டும், மனம் ஒன்று நினைக்க, செயல் ஒன்று செய்வது செயலல்ல, உயிர்ப்பணி அல்ல,

நோவானது நோற்பது என்றால் எந்த உயிருக்கும், எந்த வகையிலும் துன்பம் இல்லாமல் செய்கின்ற செயல் உயிர்ப் பணிதான் நோன்பு. ஒருசிறிது துன்பம் நேர்ந்தாலும் அது நோன்பு அல்ல; என்று உறுதியாக நம்ப வேண்டும். இந்த நம்பிக்கையோடு பணிபுரிந்தவர் வள்ளலார். அதற்காக அவர் பெற்ற பரிசு ஐந்தொழில் புரியும் ஆற்றல். இறைவனாகவே என்றும் எங்கும் விளங்கிக் கொண்டிருக்கும் பெருவாழ்வு நிலையாகும். இதைப் பெருமான் "உலகு உயிர்த் திரள் எலாம் ஒளிநெறி பெற்றிட இலகும் ஐந்தொழிலையும் யான் செயதந்தனை என்று அனுபவித்து அனுபவித்து பாடுகிறார் நாமும் அந்த அனுபவத்திற்கு வர வேண்டுமானால் நோவாது நோற்கவேண்டும்

1873ம் ஆண்டு சன்மார்க்க கொடியை ஏற்றி சித்திவளாக திருமாளிகை முன் கொடி விளக்கம் தந்திருக்கிறார். அந்த கொடியையும் அதன் தன்மையையும் பெருமான் கொண்ட பெருவாழ்வு பயிற்சியையும் ஒருங்கே குறிக்கின்ற மகாமந்திரத்தை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் வள்ளற் பெருமானுக்கு வழங்கிவாழ்த்திருக்கிறார். சன்மார்க்கமகா மந்திரம்.

"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

இதிலுள்ள எல்லா எழுத்துக்களையும் எண்ணிப் பார்த்தால் 33 எழுத்துக்கள் வரும். தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களின் தொகையும் 33 தான். நம் முதுகெலும்பிலுள்ள எலும்புகளின் தொகை 33 தான். மனித மொழிகளில் உள்ள எழுத்துக்களின் ஒலிவடிவங்களும் 33 தான் இவற்றை ஒலியங்கள் (PHONEMES) என்பர்.

இம்மகாமந்திரத்திலுள்ள மெய் எழுத்துக்களை விட்டு விட்டு எண்ணினால் 25 எழுத்துக்கள் வரும். இவை 25 அனுபவங்களை குறிக்கின்றன. அவை ஜீவ அனுபவம் 5, பர அனுபவம் 5, நின்மல அனுபவம் 5, குரு அனுபவம் 5, இலை அனுபவம் 5 ஆக அனுபவங்கள் 25 வரும். இவற்றுள் முதல் மூன்று வகையிலுள்ள அனுபங்கள் 9ம் நிலையற்றவை மீதி 16 அனுபவங்களே நிலையானவை. இவற்றை பெற்றவர்களே பெருவாழ்வு பெற்றவர்கள். மணமக்கள் பெரியோர்கள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கும்போது 16ம் பெற்று பெருவாழ்வு வாழ்க என வாழ்த்துவது இதைத் தான் குறிப்பிடுகிறது

நவந்தவிர் நிலைகளும் நண்ணும் ஓர் நிலையாய் அவந்தவிர் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி ஈரெண்ணிலை யென்னியம்பு மேனிலையில் பூரணசுகமாய் பொருந்து மெய்ப் பொருளே—திருஅகவல். நவந்தவிர் என்பது ஒன்பது நிலையற்றவை. ஈரெண்ணிலை என்பது (8×12)16 நிலையானவை

சுத்த சன்மார்க்க கொடியில் மேல் ½ பாகம் வெண்மை நிறமும் கீழ் ½ பாகம் பொன்மை நிறமும் உள்ளது. மகாமந்திரத்தில் அருட்பெருஞ்ஜோதி மூன்று முறை வருவது வெண்மையைக் குறிக்கிறது. தனிப்பெருங்கருணை ஒரு முறை வருவது பொன்மையைக் குறிக்கிறது. வெண்மை என்பது தூய்மையை குறிப்பதோடு அறியாமையையும் குறிக்கும். அறியாமை நீங்க வேண்டுமானால் இடை இடையே தொடர்ந்து உயிர்ப்பணி செய்ய வேண்டும் என்பதை தனிப்பெருங்கருணை உணர்த்துகிறது.

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதியை கடவுள் என்றும் தனிப்பெருங் கருணையை கடவுள் சக்தி என்றும் எண்ணிவிடக்கூடாது கடவுளும் அவர் அருளும் ஒன்று என்று எண்ணுவதுதான் ஒளி நெறி கொள்கையாகும், ஆண் பெண் வேறுபாடு மனித நிலையிலும், மாமனித நிலையில் படிப்படியாக குறைந்து விடும் மெய்க்கண்டார் நிலையில் ஆண் பெண் வேறுபாடு மறைந்து விடும்.

'' அவன் அன்றி ஓரணும் அசையாது '' என்பது முது மொழி. இதில் ஆண் பெண் வேறுபாடு உள்ளது அருள் அலாது அணுவும் அசைந்திடாது அதனால் அருள்நலம்பரவுக என்று அறைந்த மெய்ச்சிவமே'' திரு அகவல் திருவருளால் பிறந்திட்ட திருஆணையாகும். ''உலகியல் சிறிதும் உளம் பிடியாவகை அலகில் பேரருளால் அறிவது விளக்கி'' பேர ருளால் அறிவது என்பது கவனிக்கத்தக்கது வள்ளற்பெரு மான் நிகழ்த்திய பல அற்புதங்கள் உணரத்தக்கன.

''தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் தான் என்று ஆங்கு ஐம்புலத்து ஆறு ஓம்பல்தலை'' திருக்குறள் தென் புலத்தார் என்பது இறந்து போனவர்களைக் குறிக் கிறது. நம் முன்னோர்களில் கோடிக்கணக்கானவர்கள் தமிழகத்தின் தெற்கே இருந்த குமரிக்கண்டத்திலிருந்து மறைந்திருக்கிறார்கள். கடலுக்கு இரையாகி இருக்கிறார் கள் அவர்களை குறிப்பது தான் தென்புலத்தார் என்ற சொல். அவர்களை தமிழகத்தில் வீட்டுத்தெய்வம் என்றே வணங்குகிறார்கள்- இறந்தவர், தெய்வம், விருந்தினர், உறவினர், தான் என்ற ஐந்து வகையினரோடு அரசினர் 6வது வகையினர்,

அதனால்தான் அரசினர்க்கு கட்டவேண்டிய வரியை பாகம் என்று சொல்கிறோம் ஒவ்வொருவரும் தன் தேடும் பொருளில் மேற்குறிப்பிட்டபடி ஆறுவகைவிஷயங்களிலும் 1/6 பாகம் செலவிடவேண்டும்.

பெருவாழ்வைக்காண முற்படுபவர் இந்த 1/6 பாகம் என்ற வாழ்க்கை முறையை வருவாய் செலவை மறவாமல் செய்து வரும்போது மாமனித வாழ்க்கை தோன்றுகிறது. மெய்க்கண்டார் வாழ்க்கை உருவாகிறது.

Koviloor Digital Library

சன்மார்க்க வினா விடை

1. அண்டபிண்ட பூர்வபாவன அனுட்டான விதி என்ன ?
உலகும் உடலும் நிறை நுகர்வு பயிற்சி விதி

2. உலகத்தில் கடவுள் ஒளி எங்கெங்கு காணப்படுகிறது?
உலகில் கடவுள் ஒளி இடங்களில காணப்படுகிறது ?
(அ) நட்சத்திர ஒளியில் மிக அருகிய நிலையில் கடவுள் ஒளி காணப்படுகிறது. இது புறப்புறம். உருவத்தை மட்டும் காட்டுகிற நட்சத்திர ஒளியும் 'கண் ஒளியும் சேர்ந்து உணர்த்தும் நிலை இது.

(ஆ) நில ஒளியில் கடவுள் ஒளி விளக்கம் இருக்கிறது இனத்தைக் காட்டுகிற புறம் ஆகும்.

(இ) சூரிய ஒளியில் கடவுளின் உண்மையை உணரும் ஒளி இருக்கிறது. இதனை தன்மையைக் காட்டும் அகப்புறம் எனலாம்.

(ஈ) அக்கினி ஒளியில் எப்பொழுதும் பிரகாசிக்கிற கடவுள் ஒளி உள்ளது. பயனைத் தருகிற அகம் என்பர்.

எந்தப்பொருளையும் காணும்போது அதன் உருவத்தையும், இனத்தையும், தன்மையையும், பயனையும் அறிவதே முழு நோக்கம் ஆகிறது. இந்த வரிசையில் நட்சத்திர ஒளியைவிட நில ஒளி மிகுதியானது. நில ஒளியை விட சூரிய ஒளி மிகுதியானது. இந்த மூன்றும் எப்பொழுதும் இடைப்பனவல்ல. எப்பொழுதும் நம்மிடமிருக்கிற நெருப்பு ஒளிதான் எந்த பொருளின் பயனையும் அறிந்து எப்பொழுதும் பயன்படுத்த வழி காட்டுகிறது, இது உள்ளும் புறமும் இருக்கிறது. ''தீ அளவு அன்றி தெரியான் பெரிதுண்ணில் நோயளவின்றி படும்'' என்பது திருக்குறள். இது உடம்பிலுள்ள நெருப்பை குறிப்பதுபோல உலகிலுள்ள நெருப்பையும் அது பயன்படும் முறையையும் ஒருங்கே உணர்த்துகிறது.

உலகத்தை முழுமையாக நுகர்வதற்கு ஒரு பொருளின் உருவம். இனம், தன்மை என்ற நான்கும் உணரவேண்டும்

Koviloor Digital Library

3. உடம்பில் கடவுள் ஒளி எப்படி காணப்படுகிறது? உடம்பிலும் புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்ற 4 இடங்களில் கடவுள் ஒளி காணப்படுகிறது.

(அ) புறப்புற ஒளி என்பது தூலதேகத்தின் இந்திரிய அறிவு. இந்திரியம் என்பது கண் முதலிய ஐந்துபொறிகளையும் குறிக்கிறது. பொறி புலன்களாகிய பத்தும் ஒரு பொருளின் பெயரையோ வடிவத்தையோ வேறுபடுத்தி காணாமல் காண்பது இந்திரிய காட்சி.

(ஆ) புற ஒளி என்பது மன அறிவை குறிக்கிறது. இது நினைவு ஆற்றலையுடையது, இதனால் ஒரு பொருளின் பெயரையும், அதன் வடிவத்தையும், குற்றத்தையும், குணத்தையும் ஆராய்ந்து பார்த்து காணுகிற காட்சிக்கு மானத காட்சி என்றும் கரண காட்சி என்றும் இருபெயர் உண்டு. கரணம்தான் காரணமாகிறது. கரணம் என்பது மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற நான்கு பகுதிகளையுடையது. இதனை சூட்சும தேகத்தின் நான்கு அலுவலகங்கள் எனலாம். ஒரு பொருளை பற்றுவது மனம். அதைப்பற்றி ஆராய்வது புத்தி முடிவு எடுப்பது சித்தம் செயல் படுத்துவது அகங்காரம். அகங்காரத்தை கடைப்பிடி என்ற பொருளில் வழங்கலாம். ஆக நான்கு செயல்களை உடையது கரணம். இதனையே அறிவு, நிறை, ஓர்ப்பு கடைபபிடி என்பர். இந்நான்கும் ஆன்மையின் பண்புகளாகும். மேலும் கற்றல், கேட்டல, சிந்தித்தல், தெளிதல் என்று சொல்லும்போது எந்த மொழியும் அதன் செயலில் நான்கு வகைப்படும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். மேலும் இயல், இசை, நாடகம் என்றும் மொழியின் சிறப்பைக் கூறலாம். நாடகத்தின் மூலம் சிந்தனையைத் தூண்டி விளக்கமாவதே அறிவிடல். சோதனையின் மூலம அடையும் தெளிவே விஞ்ஞானமாகிறது. தெரிந்ததைக் கொண்டு

Koviloor Digital Library

தெரியாததை தெரிந்துக்கொள்வதுதான் விஞ்ஞானம். (இ) அகப்புற ஒளிதான் ஜீவ அறிவு. ஜீவ காட்சிஎன்பது ஒரு பொருளின் தன்மையை புரிந்து கொள்வது. இது நம் உடலில் உயிரின் உணர்வாய் இயங்குகிறது. (ஈ) அக ஒளிதான் ஆன்ம அறிவு ஆன்ம காட்சி ஒரு பொருளின் பலனையும் அதன் முழு உண்மையையும முற்றும் உணர்வதை குறிக்கிறது, இந்த நான்கையும் உணர்த்த "அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி" என்று திரு அகவலில் நான்குமுறை வருகிறது. திரு அகவலின் முதல் செய்யுளும் இறுதி செய்யுளும் இதுவே. முதல் செய்யுள் ஏறுஜோதியை வளர்ஒளியைக் குறிக்கிறது. இறுதி செய்யுள் வீறு ஜோதியை கிளர் ஒளியைக் குறிக்கிறது.

3. உலகமும் உடம்பும் ஒன்றி நின்று முழுமையாகஒன்றை அனுபவிப்பதற்கு உரிய பயிற்சி விதி எது ?

உலக நிலையில் நான்கு இடத்திலும் உடம்பில் நான்கு இடத்திலும் கடவுள் ஒளி அமைந்திருப்பதை முழுமையாக புரிந்துகொண்டு எந்த செயலிலும் இந்த எட்டு இடங்களையும் எட்டு திசைகளாகக் கருதி பயிற்சி பெறவேண்டும் இந்த பயிற்சி நடைமுறையே நம்மை நிலைபெறச்செய்யும்.

ஆன்மா என்ற மன்னுயிர் அகம் என்று வழங்கப்படுகிறது. ஆன்மா உண்மையை முழுமையாக அறிகிற அறிவாகிறது. இது ஞான சபை என்றும் மெய்யுணர்வு தரும் சிற்சபை என்றும் வழங்கும். இது உயிர் ஒளியைக் குறிக்கிறது. இந்த உயிர் ஒளியினுள்ளே உள்ஒளி விளங்குகிறது, அதன் அசைவே கடவுள் இயக்கம் நம்மை இயக்குகிற இயவுகளாக விளங்குகிறது. ஞானாகாச நடனம் என்றும் மெய்யுணர்வு தரும் இறைவன் திருநடனம் (Natural Rhythm of Divinity) என்பர். இதுவே நிலைத்த இன்பம் (அ) பேரின்பமாகும். இதனை மூலக்காரண உடம்பு என்பர், இம்மை இன்பம் என்பது காரண உடம்பையும், மறுமை இன்பம் என்பது மகாக்காரண உடம்பையும் குறிக்கும் இதனை ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் பெருமான் விளக்குகிறார், இம்மூவகை இன்பமும் ஒன்றாக சேர்ந்து நிற்கும் போது இன்புருவம் ஆகும், அழியா உடம்பை வழங்கும்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

வள்ளலார் விஞ்ஞானம் — ரூ. 6-00

ஆசிரியர்கள் : வடலூர். முத்து இராமலிங்கம்
க. கிருட்டிணமூர்த்தி

வள்ளற்பெருமான் வாழ்க்கை
அற்புதங்களின் வரலாறு — ரூ. 2-50

ஆசிரியர் : புலவர் கோ. அ. மாரிமுத்து

ஞான சாதனை — ரூ. 3-00

ஆசிரியர் : அருட்பெருஞ்ஜோதி அடிகள்

உண்மை நெறி — ரூ. 2-50

ஆசிரியர் : அருட்பெருஞ்ஜோதி அடிகள்

வள்ளலார் அருளுரை

சன்மார்க்க திங்களிதழ்

சிறப்பாசிரியர் : க. கிருட்டிணமூர்த்தி

ஓர் ஆண்டு சந்தா ரூ. 12-00
நிரந்தர சந்தா ரூ. 120-00

5151
265(வள்)

கிடைக்குமிடம் :

வள்ளலார் அருள் பதிப்பகம்
21, திட்டித்தோட்டம் மூன்ருவது தெரு,
பெரம்பூர், சென்னை-600 011

அச்சிட்டோர் : பாரி அச்சகம், சென்னை-12.